

ஐயோ பாவம் பார்ப்பனீயம்!

வாசகர் சவால்:
கனவுக்குள் கனவு

கல்கி

KALKI 27-6-82 ரூ.1 20





அர்விந்த்
வழங்கும் அற்புத
நெசவு நய
பருத்திகள்



உங்கள் பற்கள் பல்லாண்டு வாழ்க !
பினகா ஃப்ளோரைட் மூலம் உங்கள் பற்களின் ஆயுளை நீடியுங்கள்.
பினகா ஃப்ளோரைட், மிகவும் சக்தி வாய்ந்த ஃப்ளோரைட் கலவை கொண்டது. இது உண்மையிலேயே பல்லின் எனாமலோடு கலந்து, பற்களைப் பலப்படுத்துகிறது.
வாழ்நாள் முழுக்க, சொத்தை விழுவதைத் தடுத்துப் போரிட, இதன் பராமரிப்பு சேவை இன்றியமையாதது.
தவறாமல் பினகா ஃப்ளோரைட் கொண்டு பல் துலக்குங்கள். நீங்கள் இதனை உபயோகிப்பதைப் பொறுத்து, உங்கள் பற்களின் ஆயுள் நீடிக்கிறது.
பல்லுக்கு உறுதி
பற்சிதைவுக்கு எதிரி ...
Binaca Fluoride toothpaste
Binaca Fluoride toothpaste
பினகா ஃப்ளோரைட்
இந்தியாவின் முதன் முதல் சக்தி வாய்ந்த ஃப்ளோரைட் பற்பசை

ஐயோ பாவம், பார்ப்பனீயம்!



— கி. ராஜேந்திரன்

"திராவிடக் கழகம் பிராமணர்களை எதிர்க்கவில்லை, பார்ப்பனீயத்தைத்தான் எதிர்க்கிறது" என்பதாக வீரமணி திருச்சி மாநாட்டில் பேசியிருப்பதைப் படித்ததும், 'பார்ப்பனீயமா? அது எப்படி இருக்கும்? எங்கே கிடைக்கும்?' என்ற சந்தேகம் எனக்கு வந்து விட்டது.

வீரமணி பேச்சில் அக்கிரஹாரங்கள் அடிக்கடி அடிபட்டதால் பார்ப்பனீயம் ஒருவேளை அங்கு ஒளிந்து கொண்டிருக்கலாம் என்ற கருத்தில் என் சொந்தக் கிராமத்தில் நுழைந்தேன். அக்கிரஹாரத்தின் ஒரு திண்ணையில் அமர்ந்திருந்த பூணூல் அணிந்த பெரியவரை, "பார்ப்பனீயம் தெரியுமா?" என்று கேட்டேன்.

"அது என்ன வெள்ளீயம், காரீயம் போல ஒன்றா? டவுனிலே, கடைத் தெருவிலே விசாரியுங்கள்" என்ற அவர், அப்போது அந்தப் பக்கமாகப் போன ஒரு குடியானவரைப் பார்த்து, "வாப்பா, கடலை! உட்காரு. என் நிலத்துக்குத் தண்ணீர்தான் விட மாட்டேன்னு தகராறு பண்ணறே; ஒரு தடவைக்குப் புகையிலையாவது மடியிலே வெச்சிருக்கியா பாரு" என்றார்.

"சரிதான், பார்ப்பனீயம் இங்கே இருக்காது" என்று முடிவு கட்டியவனாகக் கிளம்பினேன். 'எல்லாத் துறைகளிலும் பிராமணர் ஆதிக்கம் அதிகமாகி விட்டது' என்று வீரமணி குறைப்படுவதால் பெரிய நிலையில் அபூர்வமாய் உள்ள பிராமணரான ஒரு தொழிலதிபரை அணுகினேன்.

"பார்ப்போனீயம்தானே? ஆமாம் இங்கே இருக்கே! நிறையவே இருக்கு" என்று அவர் கூற எனக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. தொழிலதிபர் தொடர்ந்தார்:

"என்னிடம் எல்லா ஜாதியினரும் எல்லா மதத்தினரும் வேலை செய்கிறார்கள். சங்கம் அமைத்து அதிக போனஸுக்காக என்னை ஆட்டிப் படைக்கிறார்கள். நேற்றுக்கூட 'ஒரு கை பார்ப்போம்' என்று தொழிற் சங்கத் தலைவர் சவால் விட்டிருக்கிறார். அதைத் தானே பார்ப்போனீயம் என்று நீ குறிப்பிடுகிறாய்" என்றார்.

காற்றுப் போன பலூன் மாதிரி என் உற்சாகம் வடிந்தாலும் வீரமணியிடம் நான் நம்பிக்கை இழக்கத் தயாராக இல்லாததால் ஒருவேளை பிராமணர்களான சில அரசு ஊழியர்களிடையே அது பதுங்கியிருக்கலாம் என்ற எண்ணத்தில் விரைந்து சென்று விசாரித்தேன்.

"அது என்ன கறுப்பா சிகப்பா?" என்று ஓர் ஊழியர் கேட்டார்.

"கறுப்பு சிகப்பாக நிச்சயம் இருக்க முடியாது; ஒருவேளை வெள்ளையாக இருக்கலாம்" என்றேன்.

"ஏனய்யா? உனக்கு வேறே வேலை இல்லையா?" என்று எரிந்து விழுந்தார் அவர். "பார்ப்பான்னு சொன்னாலே கல்லூரி அட்மிஷன், வேலை வாய்ப்பு, பிரமோஷன் எல்லாத்துக்கும் தகராறு. இந்த லட்சணத்திலே பார்ப்பனீயத்தை வேறே நாங்க கட்டிக்கிட்டு அழணுமா? போ! போ! வேறே எங்கேயாவது போய்த் தேடு" என்றார்.

எனக்கு முகம் தொங்கிப் போயிற்று. என்றாலும், வீரமணி பொய் சொல்ல மாட்டார் அவர் எதிர்த்துச் சண்டை போடுகிற பார்ப்பனீயம் எங்கேயாவது இருந்துதான் ஆக வேண்டும் என்ற மன உறுதியோடு பிராமணரான ஓர் அரசாங்க உயர் உத்யோகஸ்தரைச் சந்தித்தேன்.

"பார்ப்பான் ஃபைல்களைகவனமாப் பார்ப்பான்னு ஐஸ் வைக்க அத்தனை கோப்புகளையும் என்னண்டை தள்ளிடறாங்க. நானும் விடாமபார்த்துக்கிட்டே இருக்கேன். அதைத் தானே பார்ப்பனீயம்னு குறிப்பிடறே?" என்று ஃபைல்களை விட்டுத் தலையை நிமிர்த்தாமலே கேட்டார் அவர்.

நான் பதில் பேசாமல் நழுவினேன். ஒருவேளை வீரமணியின் கோபத்துக்கு ஆளான பிராமண இளைஞர் சங்கத்திடம் பார்ப்பனீயம் குடிகொண்டிருக்கலாம் என்று அதைச் சேர்ந்த சிலரை விசாரித்தேன். "ஸார்!





பிராமணர்கள் இன்று தாழ்த்தப்பட்டவர்களாகி விட்டார்கள். பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பிராமணர் நலனுக்காகப் பலவிதங்களிலும் பாடு படுகிறோமே தவிர பார்ப்பனீயத்தைப் பேணி வளர்ப்பதற்காக இல்லே'' என்று கூறி மடியை உதறிக் காண்பித்தார்கள். பிறகு''பார்ப்பனீயம்னு என்னனார்?'' என்று கேட்டார்கள்.

''அதைக் கண்டு பிடித்ததும் கேட்டுச் சொல்கிறேன்'' என்று கூறிக் கழன்றுகொண்டேன்.

சைக்கிளில் விரைந்து கொண்டிருந்த ஒரு சாஸ்திரிகளிடம் பார்ப்பனீயம் நிச்சயம் இருக்கும் என்று கருதி நிறுத்தி விசாரித்தபோது ''அதென்னவோ தெரியலே சார்! வக்கீலாத்துக்கு தர்ப்பணம் பண்ணி வைக்கப் போகணும். நேரமாச்சு வரட்டுமா'' என்று வழக்கமான அவசரத்துடன் வேகமாய்ப் பெடலே மிதித்தார். கோயில் குருக்கள் ஒருவரை விசாரித்தபோது ''இங்க தட்டுல சில்லறை போடறவா எல்லா ஜாதிக்காராளும்தான். எதையாவது சொல்லி என் பொழைப்பைக் கெடுக்காதீங்கோ''. என்று கூறியபடியே விபூதி அளித்தார். ''இட்டுக்குங்கோ! அம்பாள் அருளிலே பிரமை யெல்லாம் போயிடும்!''

எனக்கு வெட்கமாய்ப் போய்விட்டதென்றாலும் வீரமணி பொய் சொல்லவே மாட்டார்; பார்ப்பனீயம் எங்கேயாவது இருந்துதான் ஆகணும் என்ற வைராக்கியமும் இருந்தது. அலேச்சல் காரணமாகச் சோர்ந்து போய் நடந்து கொண்டிருந்தேன்.

''ஏஞ்சாமி ரேஸ்லே வுட்டுட்டீங்களா? கவலேப்படாதே ஏறிக் குந்து சாமி. வூட்லே போய்ப் பெஞ்சாதிகிட்ட கேட்டுக் குடு. வாங்கிக்கிறேன்'' என்றார் ஒரு சைக்கிள் ரிக்ஷா ஓட்டி.

''அதெல்லாம் ஒண்ணும் இல்லேப்பா! பார்ப்பனீயத்தைத் தேடறேன், அகப்படலே'' என்று என் விசனத்தின் காரணத்தைக் கூறவும்,

''இவ்வளோதானே சாமி! வா, நான் காட்டறேன்'' என்றார். நான் ஒரு குதி குதித்து ஆவலுடன் வாகனத்தில் ஏறிக் கொண்டேன். ஒரு சந்துக்குள் நுழைந்து இன்னொரு பொந்துக்குள் திரும்பி வண்டி நின்றது. ஒரு ஓட்டு வீட்டின் பின்புறம் அழைத்துப் போனார். முன்பு மாட்டுத் தொழுவமாய் விளங்கி இன்று மனிதர்களுக்கு வாடகைக்கு விடப் பட்டிருந்த கொட்டிலில் தேன் கூடு போல் பிரிக்கப்பட்டிருந்த பகுதிகளில் ஒன்றில் ஓர் அறையை இன்னொருவருடன் பகிர்ந்து கொண்டு வாழ்ந்த ஒரு வெண் தாடிக்காரரைச் சுட்டிக் காட்டினார் ரிக்ஷாக்காரர். ''அதான் பார்ப்பனீயம்! கெட்டியாப் புடிச்சுக்கோ'' என்றார்.

நான் கிழவரை இன்னொரு தடவை பார்த்தேன். குளித்துவிட்டு, கிழிந்த ஈர வேஷ்டியுடன் நின்றவர், ஒரு கந்தலால் உடம்பைத் துடைத்துக் கொண்டிருந்தார். விபூதி அணிந்து நிமிர்ந்தவுடன் பேச்சுக் கொடுத்தேன்.

தக்களி நூற்றபடியே ''ஆமாம், நான் வேத அத்யயனம் செய்த பார்ப்பான் தான். கந்தலேக் கட்டினாலும் கௌரவமா வாழணும்னு நினைக்கிறேன். பார்ப்பனீயத்துக்குத்தான் இன்று மதிப்பில்லேயே'' என்றவர் தள்ளாடினார்.

''உங்களுக்கு ஏன் இப்படி உடம்பு நடுங்குகிறது? இது குளிர் காலம் கூட இல்லேயே'' என்றேன்.

''குளிர்னுலே வெட வெடக்கலே. அவரு சோறு துன்னு ரெண்டு நாளாச்சு! நாலு இட்டிலிவாங்கித் தரலாம்னுபார்த்தா இன்னிப்பூராவும் ஒரு சவாரி கெடைக்கல்லே. மொத போணியே நீதான்'' என்றார் ரிக்ஷாக்காரர்.

ஓட்டமாய் ஓடிப்போய் நாலு இட்டிலி பார்சல் பண்ணிக் கொண்டு வந்து பார்ப்பனீயத்திடம் கொடுத்து வற்புறுத்திச் சாப்பிடச் செய்துவிட்டுத் திரும்பினேன்.

வீரமணி ஸார்! பிளீஸ் கோவிச்சுக்காதீங்க!

கூடலூர்

ஒரு முதிய காங்கிரஸ் தலைவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது 'ஒரு பக்கம் மரங்களை வளர்ப்போம் என்று குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்; இன்னொருபுறம் காடுகளை அழித்துக் கொண்டிருக்கிறார்கள். கூடலூரை எடுத்துக் கொள்ளுங்களேன்! அங்குள்ள காட்டிலாகா நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களை வெளியேற்றக் கூடாது என்று காங்கிரஸ்காரர்கள் பிரதமரிடமே மனுக் கொடுத்திருக்கிறார்கள். அங்கு ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர்கள் காடுகளை அழித்துக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் இவர்களுக்காகப் போராடுகிறார்கள்!" என்றார்.

நேரில் சென்று பார்த்துவிடத் தீர்மானித்தேன்.



கடத்தப்படும்போது பிடிபட்ட மரங்கள் - வன இலாகா அலுவலகத்தின் முன்

கூடலூர் தாலுக்காவின் சில பகுதிகள், கேரள மாநிலத்துடன் இணைந்து இருந்தன. இந்தப் பகுதியில் மட்டும் கிட்டத்தட்ட 20000 ஏக்கரில் தேயிலை, காப்பி, ஏலக்காய், குச்சிக் கிழங்கு, இஞ்சி போன்றவை பயிரிடப்படுகின்றன. இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்போர் பெரும்பாலோர் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான். இவர்கள் பரம்பரை பரம்பரையாக இந்த நிலங்களை அனுபவித்து வருகிறார்கள். இவர்கள் யாருக்கும் இந்த நிலங்களின் மீது உரிமை கிடையாது. இந்தக் காடுகளில் விளைந்த ஏராளமான சந்தன, தேக்கு, சில்வர் ஓக் போன்ற மரங்களை இவர்கள் பக்கத்தில் உள்ள வயநாட்டுக்குக் கடத்திக் கொண்டு சென்று ஏராளமாகச் சம்பாதித்திருக்கிறார்கள். இந்தத் தொழிலில் ஈடுபட்ட கேரளாவைச் சேர்ந்த ஒருவர் கிட்டத்தட்ட ஏழு லட்சம் செலவில் ஒரு மாளிகையே கட்டியிருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். இவர்களைத் தட்டிக் கேட்க ஆள் கிடையாது என்பதோடு லஞ்ச ஊழலும் தாண்டவமாடுகிறது. மேலிடங்களில் கூட பணம் பாய்கிறது என்று பலர் சொல்கிறார்கள்.

எவ்வளவு ஏக்கர் காட்டிலாகாவுக்குச் சொந்தமாக இருக்கிறது; எவ்வளவு ஏக்கரில் இருந்து ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றியுள்ளீர்கள் என்ற கேள்விகளுக்குக் காட்டிலாகா அதிகாரிகள் பதில் சொல்ல மறுக்கிறார்கள். ஆனால் பெயர் சொல்ல விரும்பாத ஒரு காட்டிலாகா அதிகாரி, சற்று விவரமாகவே சொன்னார்:

''இந்தக் கூடலூர் பகுதிகள் நீலம்பூர் என்ற ஜமீனைச் சேர்ந்தவை. ஆனால் நீலம்பூர் ஜமீன்தாருக்கு வாரிசு இல்லாததால் அதை நீலம்பூர் கோயிலுக்கு எழுதி வைத்துவிட்டார் ஜமீன்தார். கோயில் நிலங்களைச் சரியாக நிர்வகிக்க முடியவில்லை. இதற்கிடையில் இந்த நிலங்கள் இருந்த பகுதிகள் தமிழ்நாட்டோடு இணைந்தன. அப்படி இணைவதற்கு முன்னரே ஏராளமான கேரளத்தவர் இந்தக் கோயில் நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டனர். தமிழ்நாடு காட்டிலாகா அதிகாரிகளால் சரியான ஒரு நில அளவீடு (சர்வே) எடுக்க முடியவில்லை. அதற்குக் காரணம் இந்தப் பகுதியில் உள்ள நில அமைப்புதான். இதனால் ஆக்கிரமிப்பாளர்கள் தைரியம் பெற்றார்கள். லாரிகளில் மரங்கள் கடத்தப்பட்டன. லட்சக் கணக்கான மதிப்புள்ள மரங்கள் வெட்டி எடுக்கப்பட்டு, அந்த இடங்களில் தேயிலை, ஏலக்காய், காப்பி போன்றவைகள் பயிரிடப்பட்டன. 1973ல் ஒரு தடவையும் 1978ல் மறு முறையும் வெளியேற்ற நடவடிக்கைகளில் வன இலாகா இறங்கியபோது, போராட்டம் வெடித்தது. மச்சக்குளியைச் சேர்ந்த ஜாயிஸ் என்பவர்

மர்மங்கள்

நீக்குளிப்புச் செய்து கொண்டதால் நிலைமை முற்றிப்போய் அரசியல்வாதிகளின் தலையீட்டின் பேரால் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டன.''

நீலகிரி மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவரும், தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் அகதிகளின் சங்கத் தலைவருமான கரு. வெற்றிவேலைச் சந்தித்தபோது அவர் சற்று வேதனையோடு கூறியவை:

''கூடலூர் பகுதிகளில் கேரளாவைச்சேர்ந்தவர்கள் தமிழர்களைக் கொத்தடிமையாகவே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி இன்னும் கேரளாவுடன்தான் இணைந்து இருக்கிறதோ என்று நினைக்கும் அளவுக்கு அங்கு அவர்களின் அதிகாரம்தான் தூள் பறக்கிறது. காட்டிலாகா அதிகாரிகளைக் கையில் போட்டுக் கொண்டு இவர்கள் செய்யும் அட்டகாசம் கொஞ்ச நஞ்சமல்ல. கேரளாவைச்சேர்ந்த காங்கிரஸ்காரர் ஒருவர் மரங்களைக்கொள்ளையடித்தே பலமாடிக்கட்டிடம்எழுப்பிவிட்டார். நேரு-பண்டாரநாயகா ஒப்பந்தத்தின் பேரில் தமிழகம் வரும் இலங்கைத் தமிழர்கள் இந்தப் பகுதிக்கு நிறைய வந்து இருக்கிறார்கள். இவர்களைக் கேரளாவைச் சேர்ந்தவர்கள் நன்றாகவே ஏமாற்றுகிறார்கள். இந்த அகதிகளில் 7000 பேர் கஷ்டப் பட்டுக் காடாய் இருந்த நிலங்களை விளைநிலங்களாக மாற்றினார்கள். ஆனால் காட்டிலாகா அதிகாரிகள் இந்த நிலங்களை அழித்து விட்டார்கள். எங்கள் கோரிக்கையெல்லாம் 1973ல் கருணாநிதி முதல்வராக இருந்தபோது வாக்களித்தபடி ஒரு அகதியின் குடும்பத்துக்கு மூன்று ஏக்கர் நிலம் கொடுக்கப்பட வேண்டும்.''


இலங்கை அகதிகள் இந்தப் பகுதிகளில் 36000 பேர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 6000 பேர் தமிழ் நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் வேலை செய்கிறார்கள். மற்றவர்களின் நிலைமை மிகவும் பரிதாபத்துக்குரியது. இலங்கையிலிருந்து வந்து மண்டபத்தில் இறங்கியதும் அங்கு இருக்கும் வீடுகளில் இவர்கள் சில நாட்கள் தங்க அனுமதிக்கப்படுகிறார்கள். அந்தச் சமயத்திலேயே பல பேருக்குச் சுகாதார நிலை ஒத்து வராததால், காலரா,



✖ கரு வெற்றிவேல்



✖ சுற்றும் பதனைகளில் கூட அகதிகள் பயிரிட்டுள்ளனர்



✖ கேரளத்தவர்களிடம் நிலங்களை வாங்கியதற்கான பத்திரம்



லாரிலாரியாக மரங்கள் கடத்தப்படுகின்றன



இதுபோல் ஏராளமான குடிசைகள் அகதிகளால் மலைகளில் போடப்பட்டுள்ளன.

சிதபேதி போன்ற நோய்கள் வருகின்றன. இதற்கிடையில் இந்த அகதிகளுக்கு 2000 ரூபாயோ அல்லது 3000 ரூபாயோ கொடுத்து, புதுக்கோட்டை, தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களுக்குப் போகச் சொல்கிறார்கள். ஆனால் அதற்குள் தரகர்கள் சிலபேர் இந்த அகதிகளிடம் வந்து 'உங்களைத் தேயிலைத் தோட்டப் பகுதிக்கு அழைத்துப் போகிறேன். அங்கு நிலங்கள் இருக்கின்றன' என்று ஆசை வார்த்தைகள் கூறி கூடலூர்ப் பகுதிக்கு அழைத்துக் கொண்டு வந்துவிடுகிறார்கள். ஏற்கனவே கேரளத்தவர் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தைக் காட்டி, 'வாங்கிக் கொள்ளுங்களேன்' என்கிறார்கள். பாவம்! அகதிகள். அவர்களுக்கு இந்த நிலத்தின் வரலாறு தெரியுமா என்ன? கூடலூர் பகுதியில் உள்ள சீதோஷ்ண நிலை, இலங்கையில் அவர்கள் இருந்த இடத்தைப் போலவே இருப்பதாலும், தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்து பழக்கப்பட்ட தங்களுக்கு இந்தப் பகுதிதான் ஏற்றது என்ற எண்ணத்திலும் அரசு கொடுக்கும் பணத்தில் தரகருக்குப் பாதி கொடுத்துவிட்டு, மீதியை வைத்து தரகர் காட்டிய நிலங்களை வாங்குகிறார்கள். நிலப் பத்திரம் பாண்டு பேப்பரிலேயே எழுதப்படுகிறது. அதுவும் மலையாளத்தில். பதிவு செய்யப்படாத, ஆக்கிரமிப்புக்குள்ளான அந்த நிலத்தை கேரளத்தவரிடம் இருந்து வாங்கிக் கொள்ளும் அகதி மிகவும் மகிழ்ச்சியாக, அதை விளை நிலமாக மாற்றும்போதுதான் வன இலாகா இடையில் புகுகிறது. சட்டத்தின் 53வது பிரிவைக் காட்டி அவர்களை வெளியேற்றுகிறது. இப்படி ஏமாந்த அகதிகள் எண்ணிக்கை ஏராளம். அகதிகளில் பலருக்கு ரேஷன் கார்டு கூடக் கிடையாது. கலெக்டரிடம் நிலம், வீட்டு மனை போன்ற சலுகைகளுக்கு முறையிட்டால் வரும் ஒரே பதில்: ''நீங்கள் இந்த மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டவர்கள் அல்ல ஆதலால் சலுகைகளை எதிர்பார்க்கக் கூடாது'' என்பதுதான். இவர்களின் வறுமையைப் பயன்படுத்திக் கிறிஸ்துவ மதத்துக்கு மாற்றும் முயற்சிகள் நடக்கிறதாம்.


இந்தச் சூழ்நிலைகளில் ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர்கள் தங்களை வெளியேற்றக் கூடாது என்று சுப்ரீம் கோர்ட் வரை சென்று இருக்கிறார்கள். இதனால் வன இலாகா நடவடிக்கைகளை நிறுத்தி வைத்திருக்கிறது.

கேரள மீன் துறை அமைச்சருடன் கூடலூர் பிரச்னை சம்பந்தமாக எம். ஜி. ஆர். பேச்சு வார்த்தை நடத்தப் போவதாக 14-6-82 நாளிதழ் கூறுகிறது. இதற்கிடையில் ஆக்கிரமிப்பாளரின் கொண்டாட்டமும் அரசியல் வாதி — அதிகாரிகளின் ஆதரவும் அகதிகளின் திண்டாட்டமும் தொடர்கிறது.

—ப்ரியன்

படங்கள்: ஜெய்மோகன்

3 மாதத்திற்குப் போதுமான இரும்புச்சத்துடன் குழந்தை பிறக்கிறது



3 மாதம் ஆனபின், குழந்தைக்குத் தேவையான இரும்புச்சத்து பாலில் மட்டுமே கிடைப்பதில்லை.

இரும்புச்சத்து அதிகமுள்ள **:.பாரெக்ஸ்** கொடுங்கள்

''தாயிடமிருந்து ஏராளமான இரும்புச் சத்தைப் பெற்று குழந்தை பிறக்கிறது. பிறந்த பிறகு மெல்லமெல்ல இரும்புச் சத்தின் அளவுக் குறையத் தொடங்குகிறது. பால் நல்ல உணவாயிருப்பினும் இரும்புச் சத்துப் பற்றுக் குறையினால் அது முழுமையாவதில்லை. ஆகவே, குழந்தைக்கு இரும்புச் சத்து அடங்கிய திட உணவுத் தேவைப் படுகிறது.''

—Dr. Subhash C. Arya ''Infant & Childcare for the Indian mother''

டாக்டர்கள் :.பாரெக்ஸ். சிபாரிசு செய்யக் காரணம்?


குழந்தைக்கு திட உணவைத் துவங்குவதற்கு தனிப்படத் தயாரிக்கப் பட்டது :.பாரெக்ஸ்—குழந்தையின் இளம் ஜீரண சக்திக்கு ஏற்ப பக்குவம் செய்யப்பட்டது. இதில் விரைந்த வளர்ச்சிக்கான புரதச் சத்து; சக்திக்கான கார்போஹைட்ரேட், கொழுப்பு; எலும்புகளை திடமுடனும் பற்களை பலமுடனும் வளரச் செய்திடப் போதுமான கால்ஷியம், பாஸ்பரஸ், வைட்டமின்கள் உள்ளன. குழந்தையின் இரத்தத்திற்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும். அவசியமான இரும்புச்சத்தும் ஏராளமாக. அடங்கியது—:.பாரெக்ஸ்.





டாக்டர்கள் சிபாரிசு செய்வது :.பாரெக்ஸ்
குழந்தையின் விரைந்த முழுவளர்ச்சிக்கு உன்னதமான திட உணவு

CASGLF-30-203 TAM


ஹைகோர்ட் தீர்ப்பு
ஜனாதிபதி பெயரை உங்க இஷ்டம் போல எழுதிக்குங்க!
தேசிய பாதுகாப்புச் சட்டம்
ஜாதி மதக் கலவரங்களை அடக்குவேன்! ஒடுக்குவேன்! நொறுக்குவேன்!
டபா டமாலாக்கிது!
ஜாதி, மத வெறி

பிரதமர் அனுப்பிய செய்தி!

எந்த வினாடியில் தவறான ஒரு பட்டனை அழுத்தப்போக உலகில் அணு யுத்தம் மூண்டு ஏவுகணைகள் நாற்திசையும் பாய்ந்து தேசங்கள் பலவும் நாசமடையுமோ, புல் பூண்டு முதல் விலங்கினங்கள் மனிதர்கள் வரை அனைத்து உயிர்களும் கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்டுப் பரிதவிக்க நேருமோ என்ற அச்சம் மேனாட்டு மக்களிடையே நிலவுகிறது.

எதிர்காலமே சூன்யமாகத் தென்படும் இத்தகைய சூழ்நிலையில்தான் ஐ.நா. சபையின் ஆயுதக் குறைப்பு இரண்டாவது மாநாடு நடக்கிறது. இதற்கு ஐந்து அம்ச திட்டத்தை உள்ளடக்கிய ஒரு செய்தியை அனுப்பியுள்ளார் பாரதப் பிரதமர். நியூயார்க்கில் நமது அயல் விவகார அமைச்சர் பி.வி. நரசிம்மராவ் வாசித்த அந்தச் செய்தியில் முதல் கட்டமாக எல்லாவித அணு ஆயுத சோதனைகளையும் அனைத்து நாடுகளும் உடனடியாகக் கைவிட வேண்டும் என்ற யோசனை தெரிவிக்கிறார் இந்திரா காந்தி. இதையடுத்து ஏற்கனவே உள்ளவை தவிர புதிய அணு ஆயுத உற்பத்தியை அனைத்து நாடுகளும் நிறுத்தி விட வேண்டும். இவ்வாறு அணு ஆயுதக் குவிப்புக்கு முடிவு கட்டியபின் அணு ஆயுதக் குறைப்பு பற்றிப் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். ஐ. நா. சபையும் அதன் அங்கமான பல நிறுவனங்களும் அணு ஆயுதங்களால் ஏற்படக் கூடிய நேரடித் தீமைகள் தவிர ஆயுதப் போட்டி காரணமாக விளையும் பொருளாதார நஷ்டங்களையும் எடுத்துக்காட்டிப் பிரசாரம் செய்ய வேண்டும். அதே நேரத்தில் ஆயுதக் குறைப்பினால் உருவாகக் கூடிய நேரடி நன்மைகளையும் உலகமே அடையக் கூடிய தொழில் — பொருளாதார முன்னேற்றங்களையும் விளக்கிச் சொல்ல வேண்டும். இவ்வாறு சர்வ தேசங்களிலும் பொதுஜன அபிப்பிராயத்தை அணு ஆயுதங்களுக்கு எதிராக வளர்க்கவேண்டும்.—பிரதமர் வகுத்துத் தந்துள்ள இந்தத் திட்டம் நேர்த்தியானது; காரிய சாத்தியமானது. நிறைவேற மன உறுதி மட்டும்தான் தேவை.

பேச்சு வார்த்தை நடத்தும்போது எதிராளியைவிட நாம் பலமான நிலையில் இருந்து கொண்டு பேச வேண்டும் என்ற எண்ணம் தான் மேன்மேலும் ஆயுதக் குவிப்பை ஊக்குவிக்கிறது. தவிர, சாணக்கியமாகப் பேசி நம்மை விடவும் எதிராளி அதிகமாக விட்டுக் கொடுக்கும்படி செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையே பிரச்னைக்குத் துரிதமாகத் தீர்வு காண முடியாமல் இழுத்தடிக்கிறது. இவற்றை உணர்ந்துதான் பிரதமர், ஒரு தேதியை நிர்ணயித்து அதற்கு முன் ஓர் ஒப்பந்தம், கையெழுத்தாக வேண்டுமெனத் தீர்மானித்து அதற்காக மன உறுதியோடு உழைக்க வேண்டும் என்று கூறியுள்ளார். அமைதியையும் பாதுகாப்பையும் அடைகின்ற மார்க்கம் ஆயுதப் போட்டியில் இறங்கி ஆயுத பலத்தைக் காட்டுவதல்ல என்றும் அறிவுறுத்தியிருக்கிறார்.

பாதுகாப்பு பற்றிய நுணுக்கமான கணக்கீடுகளும் மதிப்பீடுகளும் மேன்மேலும் அச்சத்தையும் அவ நம்பிக்கையையும் சந்தேகத்தையுமே மக்களிடமும் கொள்கைகளை வகுக்கும் தலைவர்களிடமும் தோற்றுவிக்கின்றன எனவும் தெளிந்த சிந்தனையோடு கூறி இருக்கிறார் பிரதமர்.

ஐ.நா. சபைக்குப் பிரதமர் அனுப்பியுள்ள இந்தச் செய்தியை வரவேற்கும்போதே இதற்காக இந்திரா காந்தியைப் பாராட்டி வாழ்த்த நம்மிடையே இன்று ராஜாஜி இல்லையே என்றும் ஏங்குகிறோம்!

1982 ஜூன் 27
துந்துபி ஆனி 13
மலர்: 40, இதழ்: 48
கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்



24

தோட்டத்தின் பின்பக்கம் சென்ற போதெல்லாம் அந்த இடிபாடுகள் சந்தியா வின் கண்களை உறுத்தின. பம்பாய் போன ஸ்ரீதரன் மாயமாகி விட்டான் போலத் தகவல் ஏதும் கிடைக்காத ஓர் ஆதங்கம் மனத்தை நெருடிக் கொண்டிருந்தது. மாரப்பன் கூறியபடி முதலில் இடிபாடுகளை அகற்றித்



தோட்டத்தைச் சுத்தம் செய்தாக வேண் டும்.

கட்டிட வேலையாட்களை அழைத்து வரச் செய்து சமையலறைக் கூரையைச் சீர்ப் படுத்த வேண்டும்.

குமரேசன் அதிதாலுக்குக் கரிநாக்கு. நல் லது செய்ய முடியாவிட்டாலும் மனிதன் ஏதாவது சொன்னால் சில சமயம் பலித்துப் போவதுண்டு. மேலண்டைச் சுவரில் பெரிய தொரு விரிசல் கண்டு விட்டிருந்தது. மழைக் காலம் ஆரம்பமாகி விட்டதால் அதை முதலில் கவனித்தாக வேண்டும். இனி தினமும் மாலை வேளைகளில் மழை கொட்டத் தொடங்கிவிடும். அத்தை பாடு ஆபத்துதான். பரணியில் கிடக்கும் அண்டா குண்டாக்களைத் தேடி ஒழுகும் இடங்களில் வைத்து வீட்டைக் காக்கத் திண்டாடு வாள்.

பலவற்றையும் எண்ணிப் பார்த்துத்தான் அவள் பகல் உணவு நேரத்தின்போது கடைத் தெருவிலிருந்த பாங்கியிலிருந்து பணத்தை எடுத்து வந்திருந்தாள். அதைக் கைப் பையில் வைத்துக் கொண்டு பஸ் பயணத்தின்போது பையைக் கெட்டியாக மார்புடன் சேர்த்துக் கட்டிக் கொண்டு கூட்டம் மிகுந்த பஸ்ஸில் பயத்துடன்தான் வீடு வந்து சேர்ந்தாள்.

எழுநூற்றியம்பது ரூபாய்களை அவள் எண்ணிப் பீரோவில் வைப்பதைக் கண்ட அத்தைக்கு விஷயம் புரிந்து விட்டது.

''இத்தனை சிரமத்துக்கும் வேண்டாம்னு ஒதுக்கி வச்சிருந்த அந்தப் பணத்திலேயும் இப்பக் கை வச்சுட்டியா?''-வருத்தத்துடன் கேட்டாள்.

இரண்டு வருஷ காலமாக சந்தியா சிரமப் பட்டுச் சிறிது சிறிதாகச் சேர்த்து வைத் திருந்த அந்தத் தொகையை எக்காரணம் கொண்டும் தொடக் கூடாது என்று அத்தை பிடிவாதமாக இருந்தாள். ஆயிரம் ரூபாயாக அது பெருகியதும் அதற்கு என்னவெல்லாம் வாங்கலாம் என்று கற்பனையில் பல கனவு களைக் கண்டு கொண்டிருந்தாள். சந்தியா வுக்குக் கல்யாணம் கூடிவிட்டால் மாப் பிள்ளை வீட்டுக்கு அனுப்ப ஒரு நல்ல புடவை வாங்க வேண்டாமா? இப்போ விற்கும் விலையில் ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்து ஒரு நல்ல காஞ்சிபுரம் பட்டுச் சேலை எங்கே கிடைக்கும்?



சாதாரண மனிதன்

‘லக்ஷ்மி’

கல்யாணம் என்று சிந்திக்கும் முன் அந்தப் பணத்தை எப்படி யெல்லாம் சந்தியாவுக்காகச் செலவழிக்கலாம் என்று அல்நாஷ்கர் கற்பனையில் மகிழ்ந்து கொண்டிருந்த அத்தைக்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது. கஷ்டப்பட்டுச் சேமித்து வைத்த காசை அந்தப் பெண் கல்லுக்கும் மண்ணுக்கும் செலவழிக்கப் போகிறாளோ?...

மறுநாள் காலை மாரப்பன் தோட்ட வேலைக்கு வந்தபோது தன்னுடன் கூட இரண்டு ஆட்களைக் கூட்டி வந்திருந்தான். அத்தைக்கு விஷயம் ஒரு வழியாக விளங்கி விட்டது. முழங்கால்வரை புழுதி படிந்த கால்களுடன் முண்டாசிலிருந்த அத்தனை மண்ணையும் கூடத்தில் உதறிவிட்டு அவர்கள் இருவரும் அத்தையின் ஆட்சிக்கு உட்பட்ட சமையல் அறையில் புகுந்தபோது ஜகதா அடுப்பில் காலை காப்பி பலகாரத்துக்காகத் தோசை சுட்டுக் கொண்டிருந்தாள்.

''அத்தை... தோசைக்கல், மாவு எல்லாத்தையும் கொஞ்சம் அப்பால் வச்சு மூடுங்க... ஏணி வச்சு ஏறி இவங்க கூரையை நோட்டம் பார்க்கப் போறாங்க.'' என்றாள் சந்தியா.

மாரப்பன் மடமடவென்று ஏணியுடன் உள்ளே புகுந்து விட்டான்.

அத்தை தோசைக் கல் மீது சட்டென்று இட்டிலிப் பானை மூடியைக் கவிழ்த்துவிட்டு மாவுப் பாத்திரத்தை மேடையின் அடியில் பத்திரமாக மூடி அடுப்பை அணைத்துவிட்டு வெளியே வந்தாள்.

சிறிது பொழுதில் அவர்கள் வெளிப்பட்டதும் உள்ளே நுழைந்த அத்தைக்கு ஒரே திகைப்பு.

ஒட்டடையும் கரித் தூளும் ஒட்டுச் சில்களும் குருவிக் கூடுமாகச் சமையலறையைச் சில நிமிஷங்களில் அலங்கோலப் படுத்திவிட்டிருந்தனர்.

''திங்கட்கிழமையன்னிக்கு ஓடு மாத்திடலாம். மாரப்பன் கிட்ட இதெல்லாம் வாங்கத் தனியா இருநூறு ரூபாய் கொடுத்துடுங்க'' என்று வந்தவர்களில் உயரமாகப் பிடி மீசையும் பெரும் கண்களுமாக இருந்தவன் சொன்னான்.

''இப்போ இதுக்கென்ன அவசரம்?'' — அத்தை குறுக்கிட்டபோது சந்தியா உறுத்துப் பார்த்தாள்.

விரிசல் கண்டிருந்த சுவரைத் தட்டிப் பார்த்தான் இன்னொரு ஆள். ''கொஞ்சம் சிமிட்டி வச்சுப் பூசினால் சரியாயிடும். பயப்பட ஒண்ணுமில்லே... பேந்து விழுந்திருக்கும் கல்லு ஒண்ணு ரெண்டை வச்சுக் கட்டிட்டா சுவர் சும்மா ஜம்முன்னு போயிடும்'' என்று ஆறுதல் சொன்னான்.

தொட்டுத் தொட்டு இவர்கள் செலவை எங்கேயோ கொண்டு போய் நிறுத்துவார்கள் என்ற பயத்திலே சந்தியா ஒட்டு மொத்தமாக எல்லா வேலைகளையும் முடிப்பதற்கு அறுநூறு ரூபாய் என்று பேசி முடித்து விட்டு உள்ளே வந்தாள்.

சமையல் அறையைப் பெருக்கிச் சுத்தம் செய்துவிட்டு காப்பி பலகாரம் தயாரிப்பதில் மும்முரமாக இருந்தாள் அத்தை. வெறும் காப்பியை மட்டும் குடித்துவிட்டு மாரப்பனுடன் சந்தியாதோட்டத்துக்குள் சென்றாள்.

இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு அவள் சற்றுத்தூரத்தில் நிழல் ஓரமாக நின்றபடி ஆட்கள் இடிபாடுகளை அகற்றுவதை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தாள்.

மாரப்பன் வேகமாகத் தோட்ட வேலைகளை முடிப்பதில் கருத்தாக இருந்தான்.

''இன்னிக்குப் பூரா அவங்க இந்த வேலையைத்தான் செய்துக்கிட்டிருப்பாங்க. நீங்க எத்தனை நேரம் நின்னு கவனிக்க முடியும்? போய்காப்பி பலகாரம் சாப்பிடுங்க அம்மா'' என்று கூறிவிட்டுக் காய்கறிக் கூடையைத் தாழ்வாரத்தில் வைத்தபடி தயங்கி நின்றான். இரும்பு பீரோவிலிருந்து அறுநூறு ரூபாய்களை எடுத்து எண்ணி அவனிடம் கொடுத்தாள்.

''என்சம்பளத்தையும் கொடுத்துட்டாக்க'' என்று மாரப்பன் மென்று விழுங்கியபோது அவள் மறுபடியும் பீரோவைத் திறந்து அவனுக்குண்டான பணத்தை எடுத்து வந்து தந்தாள்.

இதென்ன ...பணம் நிமிஷமாக் கரைந்து போகிறதே... அடிவயிற்றைப் பிசைந்த கலவர உணர்வு நெஞ்சை அமுக்கியது.

ஒரு வீட்டைக் கட்டுவது கூடச் சுலபம். அதை நிர்வகிப்பது என்பது எத்தனைகஷ்டம்!



ஆன்றோர் வாக்கு

தான் எத்தனை கஷ்டப்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் அதற்கு மேம்பட்டு வெளியிலே வருவதுதான் தனக்கு மிஞ்சுவது. இப்படி வந்து லோகத்துக்கு உபகரிப்பது தான் 'தனக்கு மிஞ்சி தர்மம்' என்று வைத்துக்கொள்ள வேண்டும்.

இது ரொம்ப ஹை லெவலில் (உயர் மட்டத்தில்) லோயர் லெவலில் (அதற்குக் கீழ்ப்பட்ட நிலையில்) பிறருக்குத் திரவிய சகாயம் செய்வதற்காகவேதான்மிச்சம் பிடிக்கும் விதத்தில் வரவுக்குள் செலவை அடக்கி, கடன் இல்லாமல் சிக்கனமாக வாழ வேண்டும்.


—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள்

சதா புறங்கூறுகின்றவன் மறுபிறப்பில் ஊமையாகப் பிறப்பான்.

—கிருபானந்தவாரியார்

எந்த வீட்டில் புத்தகசாலை இருக்கிறதோ அந்த வீட்டில் ஆன்மா இருக்கிறது.

—பிளேட்டோ


உயர்கல்விக்கு
உகந்ததிட்டம்:
“வாமன விஸ்வரூபத்திட்டம்”
பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும்
KCUB
கும்பகோணம் ஸிடி
யூனியன் பாங்க் லிட்
பதிவு அலுவலகம்: கும்பகோணம்-612001
APRC

எண்ணியவளுக்குத் திடீரென்று ஒரு புதிய யோசனை தோன்றியது.

மேஜை இழுப்பறையிலிருந்து தயாராக வாங்கி வைத்திருந்த இன்லாண்ட் லெட்டர் ஒன்றை எடுத்து அவசரமாக எழுத ஆரம்பித்தாள்.

'அன்புள்ள அக்கா உஷாவுக்கு சந்தியா அவசரமாக எழுதிக் கொள்வது அப்பா திவசத்தின்போது வந்த நீங்களே நேரில் பார்த்திருப்பீர்கள் என்பது நிச்சயம். அப்பொழுதே வீடு ரொம்பப் பழுதடைந்து விட்டிருந்தது. சில நாட்களுக்கு முன் பெய் மழையில் மாட்டுக் கொட்டில் இடிந்து விட்டது. இன்னும் பலதொல்லைகள். வீட்டை உடனடியாகப் பழுது பார்க்க வேண்டும். கட்டிட வேலையாட்களின் கணிப்புப்படி. அதற்குக் குறைந்தது பதினைந்தாயிரம் ரூபாயாவது தேவைப்படும். இது சமயம் நீங்கள் எனக்கு இத்தொகையைக் கடனாக (வட்டியுடன்தான்) கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தானுக்குத் தாராள மனம். கட்டாயம் உதவி செய்வார். நீங்கள் அவரிடம் பேசி இந்த உதவியைச் செய்தால் மிகவும் நலமாக இருக்கும். குழந்தைக்கு என் அன்பு— உங்கள் இருவருக்கும் வணக்கங்கள். — உடனே பதில்.'

முகவரி எழுதிக் கடிதத்தை ஒட்டி வீட்டுக்குக் கிளம்பத் தயாராகிவிட்ட மாரப்பனிடம் கொடுத்துத் தபாலில் சேர்க்கச் சொன்னாள்.

மாரப்பன் வெகு தூரம் சென்ற பின்னர் தான் அத்தை வாயைத் திறந்தாள்.

''யாருக்குக் கடிதம் எழுதினே?''

''வீட்டைப் பழுது பார்க்கப் பதினைந்தாயிரம் ரூபாய் வேண்டும்னு கடன் கேட்டு உஷா அக்காவுக்கு எழுதியிருக்கேன்.''

''கொண்டான் கொடுத்தான் வீட்டில் போய்க் கடன் கேட்கலாமா சந்தியா?''

''கல்யாணமாகாது தனியே நிற்கிற நான் விதவையாகித் தனியாகி விட்ட நீங்க... இரண்டு பேருமே சுமக்க முடியாத ஒரு பாரத்தை வச்சுக் கொண்டு திண்டாடறதை தூரஇருந்து வேடிக்கைபார்க்கவா உறவுன்னு இவங்களை நாம கொண்டாடறோம்.''

''பணம் பாஷாணமாச்சே சந்தியா.''

''திவசத்துக்கு வந்தப்போ கணேசன் அத்தான் தாராளமா நாம கேட்காமலே செலவு செய்தாரே...''

''அது சின்ன விஷயம். மேலும் அவங்களுக்கு எடுத்துச் செய்ய வேண்டிய கடமை வந்து உதவினாங்க.... அதைக் கணக்குப் போட்டு வச்சுக் கொண்டு இத்தனை பெரிய தொகைக்குக் கடன் கேட்டு எழுதியிருக்கியே சந்தியா... இது நியாயமா?''

''ஆபத்துக்கு உதவாத நண்பர்கள் உறவினர்கள் இவங்களை யெல்லாம் எதுக்கு வெட்டியா ஊர் மெச்சக் கூட்டிச் சேர்த்துக்கணும்? இந்த வீடு இடிஞ்சு நம்ம தலையில் விழறவரை கணேச அத்தான் வேடிக்கை பார்ப்பார்னு நினைக்கிறீங்களா?''



ஜப்பானில் ரயிலில் பிரயாணம் செய்யும்போது அழகிய சிறு பிளாஸ்டிக் பை ஒன்றைக் கொடுப்பார்கள். ரயிலில் சிற்றுண்டி சாப்பிட்டவுடன் அந்தக் காகிதங்களையும், காலியான அட்டைக் கோப்பைகளையும் அந்தப் பிளாஸ்டிக் பையில் போட்டு, ரயிலை விட்டு இறங்கும்போது, அந்தந்த ஸ்டேஷனில் அதற்கென வைக்கப்பட்டுள்ள தொட்டியில் போட்டுவிட வேண்டும்.

- பி. நாராயணன்

''என்னவோ அம்மா... நீ இப்படித் தடபுடலா ஒரே சமயம் பல காரியத்திலே இறங்கியிருக்கிறது தப்புன்னு படறது.''

''என்ன தப்பு? இடிபாடுகளை எப்பவாவது அப்புறப்படுத்தித்தானே ஆகணும்? அதுக்குப் பணம் செலவழிக்காம நடக்குமா? மேற்கால சுவர் பாளமா வெடிச்சிருக்கு. அது விழுந்து தொலைந்தா வீடு காடாகிடும். சமையலறைக் கூரையை இப்பவே கவனிக்காட்டா மழை நாளில் அவதிப்படுவீங்க. நல்லா யோசிச்சுத்தான் இதில் இறங்கியிருக்கேன்.''

''எனக்கு என்னசொல்றதுன்னுதெரியலே'' அத்தை கவலையுடன் கைகளைப் பிசைந்தபடி உள்ளே சென்று விட்டாள்.

இரண்டு நாட்களாகக் காலைக் கிழமை வைக்க முடியாமல் மணலும் கல்லும் நரநரவென்று மிதிபட்டுக் கொண்டிருந்த வீட்டைப் பெருக்கிக் கழுவித் துடைத்த பின்தான் அத்தைக்கு மனம் சிறிது சமாதானம் அடைந்தது.

திங்கள் கிழமை மாலை பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்து உள்ளே மேஜை மேல் கைப் பையைப் போட்ட சந்தியா முகத்தைக்கூடக் கழுவிக் கொள்ளவில்லை, ஷாம்சன் பின்னாலிருந்து விருக்கென்று பாய்ந்து உற்சாகத்துடன் குரைத்தபடி முன் பக்கம் ஓடியது. மெல்ல வாயிலை எட்டிப் பார்த்தாள். சந்தியாவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

''அத்தை யார் வந்திருக்காங்க பாருங்க'' என்று கூவினாள்.

கேட்டைத் திறந்து கொண்டு சிறு கைப் பெட்டியுடன் அக்கா உஷா அவர்கள் வீட்டுக்கு வந்திருந்தாள்.

'கடிதம் கண்டவுடன் மனைவியிடம் பணத்தைக் கொடுத்து கணேசன் பஸ்ஸில் அவளை உடனடியாக அனுப்பி விட்டிருக்கிறானே?' அத்தைக்கு மகிழ்ச்சி கட்டுக் கொள்ளவில்லை.

''வாம்மா — தனியே வந்திருக்கிறியே— மாப்பிள்ளையையும் கூட்டிக்கிட்டு வந்திருக்கலாம்'' — வாயெல்லாம் பல்லாக வரவேற்றாள்.

(தொடரும்)

வட்ட மேஜை

● 'ஆகாஷ்வாணி' உபயோகத்தைப் பற்றிய உங்கள் பதிலில் இந்தி திணிப்பின் பல வடிவங்களில் ஒன்று என்று எழுதியுள்ளீர்கள். அந்நிய மொழி ஆங்கிலத்தை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். அது ஆங்கிலத்திணிப்பு என்று நாம் கருதக் கூடாதோ? கூடிய விரைவில் தமிழர்களே சீக்கிரம் ஆங்கிலத்திலிருந்து ஹிந்திக்கு முழுவதுமாக அரசாங்க மொழியை மாற்றுங்கள் என்று கேட்கும்படியான காலம் வர இருக்கிறது.

சென்னை-33 கே. ரமணி

நீங்கள் சொல்வதுபோல ஆங்கிலத்தை நாம்தான் வைத்துக் கொண்டிருக்கிறோம். யாரும் திணிக்கவில்லை; திணிக்கவும் முடியாது. நீங்கள் கூறுவது போல ஹிந்தியைத் தமிழரும் மற்றவரும் விரும்பி ஏற்கும் காலம் வந்தால் பிரச்னையே இல்லை. அக்காலம் வரும்வரை ஹிந்தி திணிக்கப்படக் கூடாது. ஆங்கிலமே நீடிக்க வேண்டும் என்பதுதான் கோரிக்கை.

-ஆசிரியர்

● 2—5—82 தேதிய கல்கி இதழில் ''தேவை ஒரு வேலை'' பகுதியில் தமது அபிலாஷைகளை வெளியிட்ட தேவகோட்டை அன்பர் திரு ரா. ஹரிகிருஷ்ணன், 12—5—82 முதல் எமது வங்கியில் எழுத்தர்-காசாளராக நியமிக்கப்பட்டுப் பணி புரிந்து வருகிறார் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தங்களது வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சாத்தூர் எம்.ஆர். குமரப்பன், சேர்மன்
பாண்டியன் கிராம பாங்க்

● விஞ்ஞானப் பக்கங்கள் நல்ல முறையில், ஆவலைத் தூண்டும்வண்ணம் அமைந்துள்ளன.

6—6—82 இதழில் நியூட்ரான் பற்றிய கட்டுரையில் இரு தவறுகளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

''சீனியர் ஆக்ஸலேடர்'' எனக் குறிக்கப்பட்டுள்ளது. இது ''லீனியர் ஆக்ஸலரேட்டர்'' என இருக்க வேண்டும்.

சைக்ளோட்ரான் கருவி மூலம் சக்தி வாய்ந்த நியூட்ரான் கதிர்களை வெளிப்படுத்த முடியாது.

சென்னை-59 ஆர்.ஜி. சுப்பிரமணியன்

● பாலமுரளி வாக்குப்படியே வைத்துக்கொண்டாலும் செய்திகளைத் திரட்ட (திருடவும்தான்) யாரோ ஓடுவது போலவும், செய்திகள் பிடிபடுவது போலவும் கச்சிதமாகத்தான் அமைந்திருக்கிறது.

சென்னை-18 ஏ. கணபதி

● தரையில் கிடக்கும் ஆறு மாதக் குழந்தைக்குக் கூட டி.வி. நியூஸ் மியூசிக் காதில் ஒலித்ததும் தலையைத் திருப்பிப் பார்க்கும் அளவுக்கு அபஸ்வரம் ராம்ஜியின் இசை கவர்ந்து விட்டிருக்கும்போது அதை மாற்றுவதாவது?

வியாசர் காலனி திருமதி நாராயண ராவ்

● வேலைக்குச் செல்லும் பெண்களைத் தாக்கி எழுதிய "பெண் பெயர் எழுத்தாளர் மீது இப்போது கண்டனக் குரல் எழுப்பி கவர்னருக்குத் தீர்மானம் அனுப்பி என்ன பிரயோசனம்! அவர்தான் 'ரீட்டயர்ட்' ஆகிக் கிளுகிளுப்பூட்டும் கதை எழுதுகிறாரே!

சங்கரன்கோயில் ஏ. பாரதி சங்கர்

● நளினி சாஸ்திரியின் விஞ்ஞானப் பக்கங்கள் பயனுள்ளது மட்டுமல்ல, சுவாரஸ்யமானதும் கூட என்பதை 'ஆப்டிகல் ஃபைபர்' நிரூபித்து விட்டதே!

சென்னை-4 மயிலை கோபி

● எத்தனையோ படங்களில் 'சிவாஜி கணேசன்' எஸ்.பி.யாக நடித்திருந்தாலும் இந்தப் படத்தைப் போல் (தீர்ப்பு) இவ்வளவு சிறப்பாக நடித்தது இல்லை என்று பாராட்டு வழங்கியிருக்கிறீரே? 'தங்கப் பதக்கத்தை' மறந்துவிட்டீரா?

பட்டுக்கோட்டை வே. வேல்முருகன்

● கட்டுரைக்குப் பதிலாகக் கவிதை மிக அருமை. அதில் 'மூளை பார்த்து வேலை தரும் நிலையம் இல்லை — இது ஆளைப் பார்த்து வேலை தரும் அரங்கமய்யா!' என்ற வரிகள் நூற்றுக்கு நூறு உண்மை.

மதுரை நாகுவேலன்

● கனவுகள் ஜோராக இருக்குமோ இருக்காதோ? ஆனால், 'கனவுகள் ஜோராக இருக்கும்' சிறுகதை உண்மையிலேயே ஜோராக இருந்தது. ஒரு அழுத்தமான கதையைப் படைத்த எழுத்தாளருக்கு நன்றி.

குரோம்பேட்டை என். ஸ்ரீதர்

● ''பள்ளிக்கூடத்தில் இவர்கள்'' கனஜோர். கருத்தாழமும், சொற் பொருத்தமும் மிக்கவை! ஓவியமும் நெஞ்சை அள்ளுகிறது. குறிப்பாக 'ஐயராத்துப்பெண்கள்' துணுக்கு குணம் போறாமல், இனம் கூறிக் குறை காணும் இன்றைய தமிழகத்தின் நிலையை எள்ளி நகையாடுகிறது. பாராட்டுக்கள்.

சென்னை-41 எஸ். ஸ்ரீநிவாஸன்

● ஹரியானாவில் நடந்த மோசடியை அடுத்து, கட்சி மாறுவதைத் தடை செய்ய ஷக்தர் கூறியிருக்கும் சிறந்த யோசனையை நிச்சயம் இந்திரா அரசு அமல் படுத்தாது. காரணம் இந்திரா காங்கிரஸே கட்சி தாவலில்தான் பிழைத்து வருகிறது.

சென்னை-5 எஸ். வி. ராஜசேகர்

சென்னைக்கு மாதம் இரு முறைகள் விஜயம்!

வாலிப வயோதிக அன்பர்களே!



Dr. S. K.

திருப்பூரில் 26-9-81ந் தேதி சித்த வைத்தியர்கள் சிறப்பு மாநாட்டைத் திறந்து வைத்து பெருமையுடன், வைத்திய அன்பர்களின் முன்னிலையில் மதுரை ஆதீனகர்த்தர் 292 வது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞான சம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகளால் பழனி டாக்டர் **எஸ். காளிமுத்து** அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தியும், **"வைத்தியபதி"** என்ற பட்டமும் அளித்து கௌரவிக்கப்பட்டது என்பதை அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பல சித்த வைத்திய மகாநாட்டில் சிறப்பிக்கப்பட்டு ஏராளமான பட்டங்கள் பெற்ற பழனி **சித்த வைத்தியபதி, வைத்திய திலகம், வைத்தியராஜ் Dr. S. காளிமுத்து** R.M.P. (IND.) V.V.C. A.M.I.H., R.A.M.P., R.H.M.P., அவர்களின் உலகப் புகழ் பெற்ற மருந்துகளால் சுக வாழ்வு வாழுங்கள். அவரின் சுற்றுப் பயணத்தில் – பழனியில் கடிதம் மூலம் ஆலோசனையுடன் சிகிச்சை பெறலாம்.

கீழ்க்கண்ட தொந்திரவுகள் இருந்தால் அலட்சியம் செய்யாதீர்கள். நீங்கள் கவலைப்படும் பிரச்னையான தாம்பத்திய வாழ்வில் குறைபாடு – ஆண்மை குறைவு, சோர்வு, வீரியக் குறைவு, குடும்ப உறவில் முன்மாதிரி செயல்படுத்த முடியாமை, நரம்பு துவளல், தேக உறுப்புகள் மெலிவு, ஆஸ்துமா, இருமல், கபம், சளி, இளைப்பு, தும்மல், வாத நோய், தூக்கமின்மை, ஊரல், அரிப்பு, கருப்பு-சிவப்பு-வெளுப்பு படைகள், சரும நோய்கள், குழந்தைச் செல்வம் இல்லாமை, அணுக்கள் குறைவு, வெட்கம், நடுக்கம், தோல்வி, உள்-வெளி ரத்த நவமூல வியாதிகள், குடல் புண், வாய்வு, வயிற்று வலி, வாந்தி, எடை குறைவு மற்றும் இதில் குறிப்பிடாத வியாதிகளுக்கும் சிலரிடம் வருடக் கணக்காக மருந்து தொடர்ந்து சாப்பிட்டு நம்பிக்கை இழந்த நோயாளிகளும் எமது 85 வருட பரம்பரை அனுபவ மருந்துகளால் சுக வாழ்வும், மறுமலர்ச்சியும் புத்துணர்ச்சியும் பெறலாம்.

பழனி சித்தர் மருந்துகளே பாரில் சிறந்தவை என்பது உலகம் அறிந்ததே! கேம்புகளில் மருந்து பெறலாம். சந்திக்க முடியாதவர்கள் தபால் மூலம் வி.பி.பி.யில் பெறலாம். தபால் செலவு இலவசம். தாமதியாமல் சிகிச்சை பெறுவது உங்களுக்கு நன்மை தரும்.

ஒரு மாதம் சிகிச்சை மருந்துகள்

தங்க பஸ்பம்	தங்க பஸ்பம் சிட்டுக் குருவி லேகியம்	மிக உயர் தரம்	ஆஸ்துமா செட்
மிக உயர் தரம் ரூ. 330	90 வேளை ரூ. 180	செட் ரூ. 90	ரூ. 124 – 226
சூப்பர் செட் ரூ. 600	60 வேளை ரூ. 120	சரும நோய் செட்	வயிற்று வலி செட்
சூப்பர் செட் A. ரூ. 900	30 வேளை ரூ. 60	ரூ. 140 – 260	ரூ. 140 – 260

சென்னை விஜயம்: தங்கும் தேதிகள்: பிரதி இங்கிலீஷ் மாதம் 10, 11 & 17, 18, 19, 20, 21 தேதிகள்

சென்னையில் தங்கும் விலாசம்: **நியூ உட்லண்ட்ஸ் ஹோட்டல்**
எட்வர்ட் எலியட்ஸ் ரோடு, சென்னை-600 004 போன்: 83111

பார்க்கும் நேரம்:
காலை 10 மணி முதல் 12 மணி வரை மாலை 3 மணி முதல் 5 மணி வரை

மற்ற ஊர் கேம்புகள் பத்திரிகைகளில் வெளி வந்து கொண்டிருக்கின்றன

GOVT. REGD. T.M. No. 204811 REGD. 15443. MFG. Lic. No. 5

வைத்திய திலகம் வைத்தியராஜ் டாக்டர் **S. காளிமுத்து,**
R.M.P. (IND.) V.V.C., A.M.I.H. R.H.M.P., R.A.M.P.

பழனி சித்தர் வைத்தியசாலை (Regd.) பழனி S.I.

போன்: 316, 316-A. வீடு: 420 பிரஸ்: 361 தந்தி: சித்தர்

பழனியில் பிரதி மாதம் 5ந்தேதி முதல் 8ந்தேதி வரையும், 14ந்தேதியும் 23ந்தேதி முதல் 30ந்தேதி வரை டாக்டரை நேரில் சந்தித்து ஆலோசனை மற்றும் மருந்துகள் பெறலாம்.


14

பம்பாய் ஸேட்டை வரவேற்க ஏற்பாடுகள் தடபுடல் பட்டன. அன்று காலையே, ராமநாராயணன் வழக்கத்தை விட சற்று உற்சாகமாகவே காணப்பட்டார். அவருடைய அந்தரங்கங்களைப் பகிர்ந்து கொள்ளக் குப்புசாமி ஒருவருக்கு மட்டுமே சலுகை அளித்திருந்தார். முதல் காரியமாகக் குப்புசாமியைக் கூப்பிட்டு அனுப்பினார்.

முதலாளி வந்ததும் வராததுமாகத் தம்மைக் கூப்பிடுகிறார் என்றவுடனே கேஷியர் குப்புசாமி வழுக்கி விழுந்த தம் பேண்டைத் தூக்கி விட்டுக் கொண்டு, மூக்குக் கண்ணாடியைச் சரி செய்து கொண்டு புறப்பட்டார். ஏதோ முக்கியமான விஷயம் என்று மட்டுமே புரிந்தது. ஆனால் எதைப் பற்றி

கவர்ச்சிகள்

கிருஷ்ணமணி



என்பதுதான் தெரியவில்லே. அதை நிறை வேற்றுவதில் தன் பங்கு என்ன என்பதும் புரியவில்லே. அவருடைய நடையில் பரபரப்பு இருந்தது. குறுக்கே வந்த ஹிரண்மயியை அவர் கவனிக்கவில்லே. தடுமாறி அவள்மீது விழப் போனுர். சமாளித்து நகர்ந்த அவள் அவருடைய கைகளேப் பிடித்து நிறுத்தினுள். அவளுடைய முகத்தில் புன்னகை அரும் பியது.

அந்த அழகில் கண நேரம் லயித்துப் போனுர் குப்புசாமி.

''ஸாரி மேடம்!''

''பரவாயில்லே!''' தமிழில் அவள் பேசி னுள்.

ஆச்சரியப்பட்டவராகக் குப்புசாமி நகர்ந் தார். 'இந்தப் பெண்தான் எத்தனே லட்சண மாக இருக்கா!' மெல்ல அவர் முணு முணுத்தார். நாக்கை இனிப்புச்சாப்பிட்டாற் போல் சப்புக் கொட்டினுர். 'ம்....'

''வாருங்கோ கேஷியர் ஸார்!'' ராம நாராயணனின் குரலில் அன்பும் நெருக்கமும் கலந்து ஒலித்தன.

''உட்காருங்கோ!''

பீடிகை எதுவுமில்லாமல் நேரிடையாகவே விஷயத்துக்கு வந்தார் ராம நாராயணன்.

''குப்புசாமி! இந்தத் தடவை நமக்குப் போட்டி பலமா இருக்கு. ஸேட்டை எப்படி யும் வளேச்சுப் பிடிக்கணும். என்ன செய்ய லாம். நல்ல ஐடியா கொடுத்தால் உமக்குத் தனி போனஸ்!....''

குப்புசாமி இதை எதிர்பார்க்கவில்லே. இவ் வளவு பெரிய விஷயத்துக்குத் தன்னிடம் யோசனே கேட்கக்கூடும் என்று அவருக்கு எண்ணிப் பார்க்கவே வியப்பாக இருந்தது. சில நிமிடங்கள் மௌனத்தில் கரைந்தன.

''என்ன மௌனமாக இருக்கிறீங்க?''

பார்வதி: "பிறவிக்குணம் போகாதுன்னு யாரைத் திட் டிக்கிட்டிருக்கீங்க?"

பரமசிவன்: "என் கழுத்தில் கிடக்கும் பாம்பைத்தான்! இறங்கித் தவளே பிடிக்க எங் கோ போயிட்டுது!"

— உ. ராஜாஜி



''யோசிக்கிறேன்.''

''ஸேட்டுக்கு வயசு குறைச்சல். ஆனுல் வியாபார நேர்த்திகளிலேபடுசூரன். அவனேட காரியதரிசியை நம்ம சுரேஷ் மீட் பண்ணி ஞன். மெதுவா சில விஷயங்களேப் புரிஞ்சு கண்டு வந்திருக்கான்.''

''சொல்லுங்கோ!''

''ஸேட்டுக்குத் தினம் சாயந்திரம் ஆறு மணி ஆச்சின்னு விஸ்கி போடணுமாம்.''

''ஏற்பாடு செய்யலாம். பெரிசில்லே!''

''அதோட துணைக்கு ஆள் வேணுமாம்.''

''ம்... பார்க்கலாம்!''

''இதையே தொழிலா வச்சிண்டிருக்கிற வாளே அவனுக்குப் பிடிக்காதாம்!''

''பின்னே இதுக்குன்னு ஆள் தேட முடி யுமா? கொஞ்சம் ஒசந்த இடமாப் பார்த்து ஏற்பாடு பண்ணலாம். எனக்குத் தெரிஞ்சு மாம்பலத்திலே ஒருத்தி இருக்கா. அவகிட்டே சொன்னு ஏற்பாடு பண்ணுவா.''

''நாடகம், சினிமா சம்பந்தப்படாதவளா இருக்கணும்.''

''இதென்ன கண்டிஷன்!''

''ஆமாம், காலேஜ் படிக்கிறவாளா இருந்தா நல்லது. இல்லே காலேஜ்லே படிச்ச வாளா இருக்கணுமாம்!''

''கம்பெனிக்கா, இல்லே கல்யாணம் பண் ணிக்கவா?. பெரிய இடக்குப் பேர்வழியா இருப்பான் போலிருக்கே!''

''ஆமாம். அவன் காலேஜுக்குப் போக லியாம். அதனுல காலேஜ் படிச்ச பெண் களேத்தான் ரொம்பப் பிடிக்குமாம்!''

''இதென்ன உபத்திரவம். எங்கேன்னு தேடறது. நான் அந்த மாம்பலத்துக்காரி கிட்டே கேட்டுப் பார்க்கிறேன். அவன் காலேஜ் படிச்சவளா இல்லேயான்னு கண்டு பிடிச்சிடுவானு?''

''கண்டு பிடிச்சுடுவானும். பேச்சில படு சூரன். நாமஅவனேஏமாத்திட்டதா தெரிஞ்சா விஷயமே கெட்டுப் போயிடும்.''

குப்புச்சாமிக்கு மண்டையில் குடைச்சல் ஏற்பட்டது போலிருந்தது. இதற்கு முன்னர் சில ஏற்பாடுகள் அவர் செய்து பலனடைந் திருக்கிருர். ஆனுல் இந்த மாதிரி விநோத மான நிபந்தனேகள் ஏற்பட்டதில்லே. தம்மால் முடியாது என்று சொல்ல அவருக்கு மன மில்லே. முதலாளி தனி போனஸ் தருகிறேன் என்று சொன்னுல் குறைந்தது ஐநூறு ரூபா யாவது கிடைக்கும். எவனே ஒருத்தனின் உடல் திமிருக்கு எவளோ இரையாகப் போகிருள். தனக்கு இதில் எவ்விதப் பாதிப்பும் இல்லே. இது ஒரு தரக் குறைவான காரியம் என்று அவர் மனத்தில் தோன்றியதே இல்லே. இந்தக் காலம் இருக்கும் இருப்பில் போகிற போக்கில் இவை யெல்லாம் நாக ரிக வாழ்க்கையின் நியதிகளாய் மாறி விட் டன என்பது அவர் கருத்து. எவன் தான் இம்மாதிரிக் காரியங்களேச் செய்யவில்லே? அந்த மாம்பலத்துக்காரியைக்கேட்டால்கதை கதையாகச் சொல்லுவாள். வியாபாரிகள் வக்கீல்கள், டாக்டர்கள், பெரிய பெரிய ஆபீசர்கள், அரசியல்வாதிகள், சமூகத்தைச் சீர்திருத்தம் செய்வதாகப் பறையடித்துக்



புத்துணர்ச்சிதரும் தூய சுவாசம்...
உறுதிமிக்க, ஆரோக்கியமான பற்கள்
அளித்திடுதே கோல்கேட் டென்டல் க்ரீம்
ஒவ்வொரு சாப்பாட்டிற்குப் பிறகும் கோல்கேட் கொண்டு உங்கள் பற்களைப் பிரஷ் செய்யுங்கள். உலகெங்கும் பல் டாக்டர்கள் சிபாரிசு செய்வதைப் போலவே அது உங்களைப் பாதுகாக்கிறது.
உங்கள் பற்களுக்கிடையே தங்கியுள்ள உணவுத் துணுக்குகளில் பாக்டீரியாக்கள் வளர்கின்றன. இவை வாய் துர்நாற்றத்தையும், பிறகு வலிமிக்க பற்சிதைவையும் உண்டாக்கும்.
எனவே சாப்பிட்டு முடித்தவுடனேயே கோல்கேட் முறையில் பற்களைப் பிரஷ் செய்யுங்கள். அது புத்துணர்ச்சியுடன் இனிய சுவாசத்தைத் தருவதற்கும், பற்களுக்கு வெண்மையளிப்பதற்கும், பற்சிதைவை எதிர்ப்பதற்கும் மிகவும் சக்தி வாய்ந்தது என்று நிரூபணமாகியுள்ளது.
கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும், பெப்பர்மின்ட் சுவை பல்துலக்குவதை ஒரு இன்ப அனுபவமாக்குகிறது.
சுலபமான, கோல்கேட்டின் செயல் புரியும் முறை
உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் வளருகின்றன.
கோல்கேட்டின் ஒப்பற்ற, செயல்புரியும் நுரை ஆழ ஊடுருவிச் சென்று உபாதை தரும் உணவுத் துணுக்குகளையும் பாக்டீரியாக்களையும் அகற்றி விடுகிறது.
பயன்: கவர்ச்சிமிக்க வெண்மையான பற்கள், தன்னம்பிக்கை தரும் இனிய சுவாசம், பற்சிதைவுக்கெதிரான பாதுகாப்பு.
Colgate DENTAL CREAM
Colgate
கோல்கேட் டென்டல் க்ரீம் உபயோகித்து வாய்துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்
1
2
3
DC-G-74 TM

கொள்ளும் எழுத்தாளர்கள் இப்படி எத்தனை விதமான வாடிக்கைக்காரர்கள் தன்னிடம் உண்டு என்று அவள் சொல்லியிருக்கிறாள். எல்லாப் பயல்களுக்கும் இது தேவையாக இருக்கிறது. வாழ்க்கையில் எப்படியாவது வெற்றியடைய வேண்டும் என்று எண்ணுகிறவர்கள் கையாளும் வழிகளுள் இதுவும் ஒன்று. இதை எந்தக் காலத்திலும் போக்கி விட முடியாது. மனிதனுக்குத் தேவைகள் இருக்கும்வரையில் பணம் சம்பாதிக்க வேண்டிய கட்டாயம் இருக்கும் வரையில், சுலபமாக அதைஅடையவேண்டிக்கைக்கொள்ளும் உபாயங்களுள் இதுவும் ஒன்று. தன் தேவை சில ஆயிரம் என்றால் தன் எதிரில் உட்கார்ந்திருக்கும் ராம நாராயணனின் தேவை சில இலட்சங்கள். அதற்காக அவர் இதைச் செய்ய விரும்புகிறார். பணம்தான் எல்லாம் என்று ஆகிவிட்ட பின், தர்மத்துக்கும், சத்தியத்துக்கும் இடமேது? அதெல்லாம் புராண வார்த்தைகள். என்றோ காலாவதியாகிப் போனவை.....''

''என்ன குப்புசாமி யோசிக்கத் தெளிவு கிடைக்கல்லியா??''

பளீரென்று ஒரு மின்னலைப் போல் குப்புசாமியின் மனத்தில் எண்ணம் பளிச்சிட்டது.

''விடை கிடைச்சுட்டது. ஆனா அதைச் செயல்படுத்த முடியுமான்னுதான் யோசிக்கிறேன்.''

''யார் ஆளு?''

''உங்களுக்குத் தெரியும்.''

''என்ன விளையாடறே?''

''இல்லே! நிஜம்தான்.''

''சொல்லு!''

''நம்ம ஆபீஸ்ல இருக்கிறவதான். அந்த வங்காளிப் பொண்ணு!''

''குப்புசாமி! அவ ஒரு மாதிரிதானா?''

''சொல்றதுக்கில்லே. ஆனா அவளுக்கு இருக்கிற அழகுக்கு, படிப்புக்கு முரளிதரனைப் போய் லவ் பண்ண வேண்டாம். இந்த மாதிரி காரியங்கள்லே ஜாடை மாடையா ஹெல்ப் பண்ணினாலே போறும்.''

''ஷ்யூர்! நான் அவளுக்கு என்ன வேணும்னாலும் தரத் தயாரா இருக்கேன். முரளிதரனை எப்படி அவுட் ஆஃப் போகஸ் பண்றதுன்னு நான் பார்த்துக்கறேன். நீர் அவளைத் தயார் பண்ணும்!''

''அந்தப் பொண்ணு ஏடா கூடமாப் பேசிட்டா?''

''ஜாக்கிரதையா, பக்குவமா முடியும். அவளுக்குப் பத்தாயிரம். உமக்கு ரெண்டாயிரம். இந்தக் காண்ட்ராக்ட்ல நம்ம கம்பெனிக்கு லாபமே நாலஞ்சு லட்சம் தேறும். ஸோ! பீ கேர்புல். காரியத்தை முடிச்சே தீரணும். செலவு என்ன ஆனாலும் பரவாயில்லே. இன்னும் ஒரு வாரத்துக்குள்ள நீர் அவ மனசைப் பக்குவப்படுத்திடணும். ஓ.கே! இன்னிக்கே கோ எஹெட்!''

''ஸார் பயமா இருக்கு! அந்த முரளி...''

''டோன்ட் வொர்ரி. நான் பார்த்துக்கிறேன். பாங்கிலேருந்து ஐயாயிரம் டிரா பண்ணிக்கும். என் பெர்ஸனல் அக்கவுண்ட்லே சார்ஜ் பண்ணிடும். யூ கேன் கோ தென!''

ராமநாராயணனின் கை வழுக்கையைத் தடவியது.

15

ஒரு விபத்தைப் போல் சற்றும் எதிர்பாராத விதத்தில் இப்படியெல்லாம் நடக்கக் கூடும் என்று முரளீதரன் நினைத்துப் பார்க்கவே யில்லை. ஆனால் விஷயங்கள் நடந்து விட்டன. அவனால் நம்பவே முடியவில்லை.

மணலை அளைந்துகொண்டு எதிரே அலை வீசும் கடலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். வாழ்க்கைக்குப் பொருள் ஏதும் இல்லாமற் போனது போல் தோன்றியது. மனிதர்களை, ஆணாகட்டும் சரி இல்லை பெண்ணாகட்டும் சரி, நாம் புரிந்துகொள்வது என்பதுகூட ஏதோ ஒருவிதக் கற்பனை தான். முழுமையாக எவரையுமே நாம் புரிந்துகொள்ள முடிவதில்லை. ஏன் நாமே நமக்குப் புதிராகச் சில சமயங்களில் தோன்றுகிறோம். ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குப் பின்னர் அந்தப் போழ்தில் நாம் ஏன் அவ்வாறு நடந்து கொண்டோம் என்று யோசித்துப் பார்க்கும் பொழுது நம்மிலும் முற்றிலும் மாறுபட்ட

தமிழ் இலக்கண ஆசிரியர்: காலேஜில் சீட் தர 'அவர்' மறுத்து விட்டார். அவர் ஆண்பாலா? பெண் பாலா?

மாணவன்: பிரின்ஸிபால் சார்!

-கிருஷ்ண சங்கர்



நபராக நாமே நமக்குப் புலப்படுகிறோம். மனித மனம்தான் எத்தனை விசித்திரமானது.

அவள் அவனையே பார்த்தவாறிருந்தாள். அவனுடைய நீண்ட மௌனத்தின் பொருளை நன்கு உணர்ந்தவள் போல் அவளும் பேசாது இருந்தாள்.

அவன்தான் மௌனத்தைக் கலைத்தான்.

''ஹிரண்மயி! உன் நிலைமை எனக்குப் புரிகிறது. நீயாக விரும்பி, மனமொப்பி அந்தக் காரியத்தைச் செய்யவில்லை. மதுவின் மயக்கத்தில் உன்னை நீ காத்துக் கொள்ளத் தவறிய நிலையில் உன் பெண்மைக்கு இந்தப் பங்கம் ஏற்பட்டு விட்டது. முழுமையாக உன்னைப் பொறுப்பாளி என்று சொல்ல மாட்டேன். ஆனால் நீ இன்னும் சற்று ஜாக்கிரதையாக இருந்திருக்கலாம். முதலாளியும் குப்பு

சாமியும், சுரேஷும் எப்பொழுது அந்த "ஸேட்டின் அறையினின்றும் வெளியே போக முற்பட்டார்களோ அப்பொழுதே நீயும் புறப்பட்டிருக்கலாம்!''

''அவங்க உடனே கொஞ்ச நேரத்திலே திரும்பி வந்திடறதாச் சொன்னாங்க. ஸேட்டும் ஒரு ஜெண்டில்மேன் போலப் பேசினான். நான் விஸ்கி குடித்ததுகூடக் கட்டாயத்தின் பேரில்தான். என்னுடையபேலன்ஸ் போகாதபடி உஷாரா இருந்தேன். ஆனால் கடைசியாத்தான் அந்த ஸேட் இன்னுமொரு 'பெக்' ஊற்றிக் கொடுத்தான். அந்த நேரத்திலே மதுவின் போதையிலே அவன் சிரித்தான். நானும் காரணமில்லாமல் சிரித்தேன். சிரிச்சுக்கிட்டே இருக்கும்போது மதுவை என் வாயில் ஊத்திட்டான். என்னால அப்போ தடுக்க முடியல்லே. ஏற்கனவே குடிச்சிருந்ததினால இப்போ உஷ்ணம் குப்பென்று உடல் பூராவும் பரவின மாதிரி இருந்தது. தலையைக் கிர்னு சுத்த ஆரம்பித்தது. எழுந்து நிற்க முயற்சி செஞ்சேன். கால்கள் தரையிலே பாவாத மாதிரி ஒரு நிலை. ககன வெளியிலே லேசான ஒரு காகிதத்தைப் போலப் பறக்கிற மாதிரிஇருந்தது. நான் தவிக்கிறதை அவன் பார்த்தான். சிரிச்சுக்கிட்டே இருந்தான்.

''உனக்குப் பழக்கமில்லே போலிருக்கு'' என்றான்.

''ஆம்'' என்றேன்.

''மீண்டும் லேசாகச் சிரித்தவன் மெல்லக் கட்டிலினின்றும் எழுந்து வந்து என் கைகளைப் பிடித்துக் கொண்டான். என் இடுப்பில் கை போட்டுத் தாங்கிப் பிடித்தான். எனக்கு அதைத் தடுக்க முடியவில்லை. அவன் செய்கைகள் எனக்குத் திகைப்பை யூட்டின. ஆனாலும் நான் வசமிழந்து இருந்தேன். அவன் மெல்லக் கட்டிலில் உட்காரவைத்தான். அதன் பிறகு நடந்தது எல்லாமே ஏதோ கனவு போல, பனிக்காலத்து விடியலில் தெரியும் மங்கலான காட்சி போல இருந்தது. அவனுடைய உற்சாகமும் சிரிப்பும் இந்த மாதிரிப் பழக்கம் அவனுக்குக் கைவந்த விஷயம் என்பது போல் இருந்தது. காலமும், நேரமும், இடமும் எல்லாம் பொருளற்றுப் போன ஒரு நிலையில் நான் என்னைக் கொஞ்சம் கொஞ்சமாக இழக்கிறேன் என்பது மட்டும் புரிந்தது. என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நினைவு திரும்பியபோது லேசாகத் தலையை வலித்தது. நான் என் கன்னித்தன்மையை அவனிடம் இழந்து விட்டதை உணர்ந்தேன். என்னுள் அவமானம்பொங்கிப் பெருகியது. ஆனால் இனி நான் செய்யக் கூடியது ஒன்றுமில்லை என்பதும், ராமநாராயணன் கோஷ்டிக்கு இதெல்லாம் நடக்கும் என்பது தெரியும் என்பதும் மனத்தில் நிழலாடின. திட்டமிட்டு அவர்கள் இதைச் செய்திருக்கிறார்கள். என்னை அவர்களுடைய காரியத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஒரு சாதனமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.'' இதைச் சொல்லிவிட்டு அவள் தலையைத் தன் முழங்கால்களுக்கிடையே புதைத்துக் கொண்டாள். அவள் அழுவது அவனுக்குப் புரிந்தது. அவனால் தடுக்க முடியவில்லை. இனிமேல் ராமநாராயணன் கோஷ்டி அவளை எவ்விதம் நடத்துவார்கள் என்பது தெரிந்ததுதான். இந்த விஷயம் வேறு எவருக்கும் தெரியாதபடி மறைக்கப் பட்டுவிடும். ஹிரண்மயிக்குப் பொருளாதார உதவிகள் நிறையக் கிடைக்கும். ஆனால் தனக்கும் அவளுக்குமிடையில் ஏதோ ஒருவித திரை இறக்கப்பட்டு விட்டதைப் போல அவனுக்குத் தோன்றியது.

முரளீதரனுக்குத் தன்மீது எரிச்சல் ஏற்பட்டது. தான் தன்னுடைய மனத்தைக் கவர்ந்தவளை, தான் மனதார நேசித்தவளைக் காப்பாற்றத் தவறிவிட்டோம் என்ற எண்ணமே அவனுக்கு வெறுப்பை அளித்தது.

(தொடரும்)


ஒவ்வொரு நாளையும்
டான்டெக்ஸ்®
அணிந்து துவக்குங்கள்
காலை முதல் இரவு வரை டான்டெக்ஸ்
அணிந்து மகிழுங்கள். அதன்
கச்சிதமான உடம்போடு ஒட்டும்
அமைப்பும், சிறப்பும் உங்களுக்கு நாள்
முழுவதும் இதமான சுகத்தை
அளிக்கிறது.
IS : 4964
ஒட்டி உறவாட
டான்டெக்ஸ்
ப்ரீஃப்ஸ் • வெஸ்ட்ஸ் • காஷிவெல்ஸ்
ஸ்போர்ட்ஸ் பனியன்கள் • சிறுவர்களுக்கான ரகங்கள்
THE SEAL OF TANTEX QUALITY
ttk தயாரிப்பு
Imageads-M- TT. 1568Tam

ஒத்தக்கால் மண்டபம்

ராஜேஷ்குமார்

பஸ் நின்றது.

"ஒத்தக்கால் மண்டபம் கேட்டது யாரு ஸார்.... இறங்குங்க!" கண்டக்டர் குரல் கொடுக்க, தன் சின்னஞ் சிறு ஹோல்டாலை முதுகில் சுமந்தபடி பஸ்ஸிலிருந்தும் கீழே உதிர்ந்தான் சந்தோஷ்.

பஸ் உறுமிவிட்டுப் புகையை ஏராளமாகக் கக்கியபடி நகர்ந்தது.

சந்தோஷ் நின்றான்.

சுற்றிலும் 'ஹோ' வென்ற அமைதி. தூரத்தில் சொற்பமாய் வீடுகள் தெரிய வெய்யிலில் மங்களூர் ஓடுகள் பளபளத்தன. இடது கைப்பக்கமாய்ப் பனைமரக் கூட்டமொன்று கூப்பலாய்த் தெரிந்தது.

மெல்ல நடந்தான் சந்தோஷ்.

ஒரு ஐந்து நிமிஷ நடைக்குப் பின் எதிரே அந்தப் பெண் வந்தாள். ரவிக்கையைப் பற்றிக் கவலைப்படாத கிராமத்துப் பெண். தலையில் சும்மாடாய் முந்தானை சுருட்டப் பட்டிருக்க, அதன் மேல் கருவேல மரக் குச்சிகள் சுமையாய் உட்கார்ந்திருந்தன.

சந்தோஷ் தயங்கிய குரலில் அவளைக் கேட்டான்: "ஒத்தக்கால் மண்டபம் கோயிலுக்கு எந்தப் பக்கமாப் போகணும்?"

"அதோ அந்தப் பனந்தோப்பு தெரியுது பாருங்க... அதுக்கு இன்னும் கொஞ்சம் மேக்கால போனீங்கன்னா குறுக்காலே நொய்யலாறு வரும். அதைத் தாண்டி அரை மைலு நடந்தாக்கக் கோயிலுதான்..... வெசையாப் போங்க... உச்சி பூசை முடிஞ்சதுன்னா பூசாரி ஐயா ஊருக்குள்ளே வந்துடுவாரு.... அப்புறம் சாயங்காலந்தான் கோயிலுக்குப் போவாரு...."

சந்தோஷ் பார்வையாலேயே அவளுக்கு நன்றி சொல்லிவிட்டு அவள் சொன்ன திசைப் பக்கமாய் வேகமாக நடந்தான்.

இருபத்தியாறு வயது இளைஞன். பிரபல புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர் ஆர்க்கியாலாஜிஸ்ட் புரபசர் சதுர்வேதியிடம் உதவியாளனாக இருப்பவன். வேலைக்கு அமர்ந்த ஒரு வருஷம் வரைக்கும் புரொபஸருக்கு உண்மையாய் உழைத்தவன். அதற்குப் பிறகு அவருடைய ஆராய்ச்சிகளைத் தன் சுயலாபத்துக்காகப் பயன்படுத்திக் கொள்ள ஆரம்பித்தவன்.

இப்போதும் அதே நோக்கோடுதான் வந்திருப்பவன்.

கோவைக்குப் பக்கத்திலிருந்த ஒத்தக்கால் மண்டபத்தைத் தீவிரமாக ஆராய்ச்சி செய்த புரபசர் சதுர்வேதி, அது சேரன் செங்குட்டுவன்காலத்தில் கட்டப்பட்ட மிகச் சிறிய கோயிலென்றும், அந்தக் கோயிலின் மற்ற விக்கிரகங்கள் பூமிக்கடியில் புதையுண்டு போக எஞ்சிய காளி விக்கிரகம் ஒன்று மட்டும் தற்சமயம் வழிபாட்டில் உள்ளதாகவும், மண்டபத்துக்குக் கீழே நிலவறையில்இருக்கும் பகுதிகளை அகழ்ந்தால் விலைமதிப்பற்ற அந்தப் புதையுண்ட விக்கிரகங்கள் கிடைக்கக் கூடும் என்றும் எழுதியிருந்தார். அதைப் பற்றி தீவிரமாய் ஆராய்ச்சியும் செய்தார்.

போன வாரம்தான் சந்தோஷிடம் சொன்னார் புரபசர்:

"சந்தோஷ்! இன்னும் பத்து நாள்ல நாம ரெண்டுபேரும் ஒத்தக்கால்மண்டபம் போகப் போறோம். அரசாங்கம் என்னோட ஆராய்ச்சிக்கு நிதியை ஒதுக்கியிருக்கு.. அந்தச் சேரன் காலத்துச் சிலைகள் கிடைச்சா நம்ம ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்டுக்குப் பெருமை."

"அந்தச் சிலைகள் நிச்சயம் கிடைக்குமா புரொபசர்?"

"ஷ்யூரா கிடைக்கும். இதோ இந்த வரைபடம்தான் கோயிலோட கருவறை. ரெட் கலர்ல ரௌண்டப் பண்ணியிருக்கிறேனே அந்த இடங்கள்லதான் சிலைகள் புதையுண்டிருக்கு. தோண்டினா நிச்சயமா சிலைகள் கிடைக்கும்."


சந்தோஷ் இயல்பான குரலில் கேட்டான்: "இன்னிக்கு இருக்கிற நிலவரப்படி அந்தச் சிலைகளோட மதிப்பு எவ்வளவு லட்சம் புரொபசர் ஸார்?"

"மே...பி டென் லாக்ஸ்!"

சந்தோஷின் சின்ன விழிகள் ஆசையில் பளபளத்தன.

மறுநாளே புரொபசர் டெல்லியில் நடைபெறும் புதைபொருள் ஆராய்ச்சி செமினாருக்குப் புறப்பட்டுப் போக சந்தோஷ் ஒத்தக்கால் மண்டபத்தின் நிலவறை மேப்பை நகல் எடுத்துக் கொண்டு புரொபசருக்குத் தெரியாமல் புறப்பட்டான்.

இதோ! ஒத்தக்கால் மண்டபத்தில் இறங்கி கோயிலை நோக்கிப் புறப்பட்டும் விட்டான்.



சந்தோஷ் கோயிலுக்குள் நுழைந்தான்.

காளி சூலமேந்திய கோலத்தோடு வெகு உக்கிரமாய்த் தெரிந்தாள். முகத்தில் மஞ்சளை அப்பி, பெரிதாய்க் குங்குமப் பொட்டு வைத்து நாக்கில் சிவப்பைத் தடவி...

''சாமி... உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்... நான் ஒரு ஆர்க்கியாலஜிஸ்ட்.''

''அப்படின்னு?'' பூசாரி திகைத்தார்.

''புதைபொருள் ஆராய்ச்சி செய்யறவன். இந்த ஒத்தக்கால் மண்டபத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு ஆராய்ச்சி செய்ய வந்திருக்கேன்.''

''என்ன ஆராய்ச்சி பண்ணப் போறீங்க? இந்தக் கோயில் முழுவதையும் அந்தஒத்தக் கல் தூண் எப்படித் தாங்கிட்டிருக்குன்னு ஆராய்ச்சி பண்ணப் போறீங்களா? அந்த சூட்சுமம் உங்களுக்குப் புடிபடாது தம்பி... உங்க விஞ்ஞான அறிவுக்கெல்லாம் அப்பாற்பட்டது அந்தக் காலத்து சிற்பியோட அறிவு. நிறையப் பேர் வந்து பார்த்து உதட்டைப் பிதுக்கிட்டுப் போயிட்டாங்க!''

சந்தோஷ் கையை ஆட்டி மறுத்தான். ''நான் அதுக்காக வரல்லே சாமி... இமே நிலவறையில் சேரன் காலத்து அபூர்வச் சிலைகள் சில மண்ணோடு மண்ணாப் புதைஞ்சு போயிருக்கு. அதைத் தோண்டி எடுக்கப் போறேன்.... அரசாங்கம் என்னை இதுக்காகவே இங்கே அனுப்பிச்சிருக்கு... இதோ பார்த்தீங்களா வரை படம்!''

பெட்டியைத் திறந்து வரை படத்தைக் காட்டினான்.

பூசாரியின் நெற்றி குழப்பலாய்ச் சுருங்கியது. ''சிலைகளா?''

''உம்... அபூர்வமான சிலைகள்!''

''நிலவறைக்குள்ளாற போனா யாரும் உயிரோட திரும்ப முடியாது தம்பி. ஏன்னா உள்ளே ஏகப்பட்ட நாகப் பாம்பு இருக்கு!''

''என்கிட்ட விஷ முறிவு சீரம் இருக்கு. அதை உடம்பிலே இன்செக்ஷன் போட்டுக்கிட்டா பாம்பு கடிச்சாலும் விஷம் ஏறாது. கடிச்ச பாம்பும் செத்துடும்....''

''அப்படியா?'' — பூசாரி வியந்தார்.

''ம்... இதோ பாருங்க சீரம்.'' நீல நிறப் பாட்டிலை எடுத்துக் காட்டினான் சந்தோஷ்.


''அப்படின்னா சரிதான் தம்பி. ஊர்ப் பெரியவங்களையும் ஒரு வார்த்தை கேட்டுக்கிட்டு நீங்க தோண்ட ஆரம்பியுங்க!''

முகம் மாறினான் சந்தோஷ். ''ஊஹூம். அதெல்லாம் யார் கிட்டயும் கேட்க வேண்டிய அவசியமில்லே சாமி. நான் சட்டுப் புட்டுன்னு வந்த காரியத்தை முடிச்சுட்டுப் போகணும். விஷயம் வெளிய தெரிஞ்சா ஊர் ஜனம் பூரா கோயில் முன்னாடி கூடிடும். அப்புறம் எனக்குத்தான் சிரமம்.''

ஒருவன்: என்னது இது உன் ரேடியோல ரயில் விடற சத்தம் மாதிரி கேட்குது!

மற்றவன்: நான் தான் சொன்னேனே, இதுல எல்லா ஸ்டேஷனும் எடுக்கும்னு!

-வெ. சீதாராமன்



சந்தோஷ் ஹோல்டாலைப் பிரித்து ஒரு சிறிய கடப்பாறை, மண் வெட்டி, டார்ச் லைட் எல்லாவற்றையும் பரப்பினான்.

''அந்த விஷ முறிவு மருந்தைப் போட்டுக்கிட்டீங்களா தம்பி?''

''உம்.... சாமி? நீங்களும் வர்றீங்களா உள்ளே?''

தலையை ஆட்டினார் பூசாரி. ''என்னால முடியாது தம்பி. பத்து வருஷமா இந்தக் கோயிலுக்குப் பூசாரியா இருக்கேன். ரெண்டு தடவை நிலவறைக்குள் போயிருக்கேன். மூச்சுத் திணறும், ஏகப்பட்ட புழுக்கமாக இருக்கும்.... நான் வரல்லே. நான் ஊருக்குள்ளாற போயிட்டுச் சாயங்காலமா வர்றேன்... அதுக்குள்ளே ஆராய்ச்சியைமுடிச்சுடுங்க தம்பி.''

''சரி சாமி!'' என்று புன்னகைத்த சந்தோஷ் மனசுக்குள் சொல்லிக் கொண்டான். ''பூசாரி போ! நீ போயிட்டுச் சாயங்காலம் இங்கே வர்றப்போ இந்த நிலவறைதான் உனக்குச் சமாதி!''

பூசாரி சாவிக்கொத்தை இடுப்பில் சொருகிக்கொண்டு வெளியே வந்தார். சந்தோஷ் தேவைப்பட்ட உபகரணங்களோடு நிலவறைக்குள் இறங்கத் தயாரானான்.

படிகளில் இறங்க இறங்க இருட்டும் புழுக்கமும் அதிகமாவதை உணர்ந்தான் சந்தோஷ்.

டார்ச் ஒளியை உமிழ நிதானமாய் நடந்தான்.

அப்படியே உட்கார்ந்து வரைபடத்தைக் கீழே பரப்பி டார்ச்சை அதன் மேல் அடித்து உன்னிப்பாய்ப் பார்த்தான். நிலவறையின் பரப்பை மனசுக்குள் கொண்டு வந்து வரைபடத்தோடு ஒப்பிட்டு சிவப்புக் கலரில் மார்க் செய்யப்பட்ட இடங்களைத் துல்லியமாய் அளந்தான். ஒன்று தரையில்; மற்றொன்று சுவரில்....


அரிப்பும் எரிச்சலும் தரும்
வியர்க்குருத் தொல்லையிலிருந்து
விடுதலை பெறுவீர்!
நைஸில்
உபயோகிப்பீர்-
மிகத்துரித நிவாரணம்
அளிக்கும்
வியர்க்குரு
பவுடர்.
2
பேக்குகளில்—
'ப்ளூ' மற்றும்
'ஸாண்டல்வுட்'
வாங்குவீர் நைஸில்.
விரட்டுவீர்
வியர்க்குருவை.
பால்கம் பவுடரைவிட
குறைந்த விலையில்!
மருந்துக் கலவை
யுள்ள நைஸில்:
1. அதிக வியர்வை
யைத் தவிர்க்கிறது.
2. வியர்வையை
உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம் ஏற்
படுத்தும் கிருமி
களை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இத
மளிக்கிறது.
nycil
GN-79-PR-TM



கடுகளவு ஓ.ஓ.பி நீலம்
கடலளவு வெண்மை
ஜெர்மன் தொழில் நுட்பத்தில் உருவான உயர்ந்த ரக நீலம்.
கூடுதலான வெண்மை சக்தி.
நீரில் சீராகக் கரைவதால் ஆடைகளில் நீலப் புள்ளி விழாது.
விலையோ அதிகம் இல்லை.
ஓ.ஓ.பி
நீலம்
OOB
BLUE
BEST ULTRAMARINE
MADE IN INDIA BY
ULTRAMARINE & PIGMENTS LTD

கடப்பாறையைக் கையில் எடுத்துக் கொண்டான் சந்தோஷ். அடையாளமிட்ட தரையைத் தோண்ட ஆரம்பித்தான். சக்... சக்....சக்....

ஏறக் குறைய பதினைந்து நிமிஷம்.

''டங்....டங்''

சிலைதான்! மண்ணை அள்ளிஅள்ளி ஓரமாய்ப் போட்டு, குழியை அகலப்படுத்தி, சிலையைச் சுற்றிலும் கொத்தி மெல்ல மெல்ல சிலையை வெளியே எடுத்தான் சந்தோஷ்.

லேசாய் பாசிபிடித்து,பஞ்சஉலோகத்தால் ஆன அந்த நடராஜர் சிலை ஓரடி உயரத்தில் வெளியே வந்தது.

''வரவு அஞ்சு லட்சம்!'' — வாய் விட்டு முனகிக் கொண்டே சிலையை ஓரமாய் வைத்து விட்டு மகிழ்ச்சி தெறிக்கிற மனசோடு அடுத்த ஸ்பாட்டைப் பார்த்தான் சந்தோஷ்.

'இடது பக்கச் சுவரில் — இரண்டடி உயரத்தில்' என்றது வரைபடம். கையில் கடப்பாறையோடு இடதுபக்கச் சுவரை நெருங்கினன் சந்தோஷ்.

கடப்பாறை நுனியால் சுவரில் — குறிப்பிட்ட உயரத்தில் வட்டம் போட்டான். கடப்பாறையைத் தலைக்குமேலே உயர்த்திக் குத்த முயன்ற அதே நேரம்...

படிகளில் யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டது.

பூசாரி சிரித்தபடியே படிகளில் இறங்கி சந்தோஷை நெருங்கினர். ''மனசு வரல்லே உங்களுக்குத் துணையா நானும் இந்த நிலவறைக்குள்ளே இருக்கிறதா முடிவு பண்ணித் திரும்பிட்டேன்.... சிலை ஏதாச்சும் கிடைச்சுதா தம்பி?''

''கிடைச்சது... அற்புதமான நடராஜர் சிலை.... கவர்மெண்ட்லே எனக்கு விருது கொடுப்பாங்க... நீங்க எனக்கு உதவி செஞ்சீங்கன்னு உங்க பேரையும் சொரிகு பண்றேன். ஜனாதிபதி கையாலே பரிசு வாங்கலாம்....''

''உதவறேன்... உதவறேன்... அதுக்குத் தானே வந்திருக்கேன்.''

''அடுத்தாப்பலே இந்த இடத்தைத் தோண்டணும். சுவரிலே இதோ வட்டம் போட்டிருக்கேனே இந்த இடம்.''

சுவரைக் காட்டியபடியே திரும்பினன் சந்தோஷ்.

அடுத்த விநாடி— ''த்தட்!''

பூசாரி அவன் மீது கழுகுப் பாய்ச்சலாய்ப் பாய்ந்து இடது கையால் கழுத்தை வளைத்து வலது கரத்தில் இருந்த சிறிய கூரிக் கத்தியால் இடுப்பில் குத்தினர்.

''ம்மா.....ஆ....!'' சந்தோஷ் அலறித் திமிற — அவனைத் திமிற விடாமல் அடக்கிக் கொண்டு இடுப்பில் பதித்திருந்த கத்தியை உருவி வயிற்றில் பாய்ச்சித்திரும்பவும் உருவி நெஞ்சில் செருகினர். சந்தோஷின் ரத்தம் தாறுமாறாய் விசிறியது.

சந்தோஷ் தரை அவனைச் சரிய விட்டார் பூசாரி. ''இந்தச் சிலைகளுக்காகத்தாண்டா

நரியாரு கோரிக்கை!

நியாய
விலைக் கடையில்
எம். எல். ஏ. சம்பளக்கும்
ஏற்பாடு
செய்யுங்கள்!

-மதுபாலிகா



இத்தினி வருஷமா இந்தப் பாழடைஞ்ச கோயில்லே பூசாரியா இருந்தேன். எத்தனையோ பேர் வந்தும் முயற்சி செஞ்சும் கிடைக்காத இந்தச் சிலைகள் இன்னிக்கு உன்னோட கையாலே வெளிப்பட்டிருக்கு...''

பூசாரி கொக்கரித்தார்.

சந்தோஷ் நிலைத்த விழிகளோடு அடங்கிக் கொண்டிருந்தான்.

பூசாரி கடப்பாறையை எடுத்தார். சுவரில் வட்டம் போட்ட இடத்தைக் குறி வைத்து நெருங்கினர். ''இன்னொரு சிலையும் கிடைச்சுட்டாப் பரவாயில்லே... பத்து லட்சத்தைக் கண்ணுல பார்த்துடலாம்....''

தலைக்கு மேலே கடப்பாரையை உயர்த்தி ஆவேசமாய் சுவரை உடைக்க ஆரம்பித்தார்.


அதே நேரம்....


டில்லியில்.....

பிரபசர் சதுர்வேதி ஆர்க்கியாலஜி மகாநாட்டில் தம் ஒத்தக்கால் மண்டப ஆராய்ச்சியைப் பற்றிய அறிக்கையைப் படித்துக் கொண்டிருந்தார்.

''....ஒத்தக்கால் மண்டப சிற்பங்களை அகழ்ந்தெடுக்கும் ஆராய்ச்சியில் உள்ள பேராபத்து ஒன்றே ஒன்றுதான். அந்தக் கோயிலைத் தாங்கிக் கொண்டிருக்கிற ஒற்றைக் கல் தூண், கீழே உள்ள நிலவறையின் இடது பக்கச் சுவரின் பலத்தால் நின்றிருக்கிறது. ஆகவே இடது பக்கச் சுவரின் எந்த பாகத்திலும் கடப்பாறையின் முனை பட்டுவிடக் கூடாது. பட்டால் அந்த ஒற்றைக் கால் தூண் நிச்சயமாய், உறுதியாய்த் தாங்காது... கோயில் நிமிஷ நேரத்தில் தரைமட்டமாகிவிடும்... இதை மனத்தில் வைத்து அந்தக் கோயிலை நாம் அணுக வேண்டும். அடுத்த வாரம் நானும் என் உதவியாளர் சந்தோஷும்.....''

சதுர்வேதி உற்சாகமாய் அறிக்கையைப் படித்துக் கொண்டிருந்தார்!


இவர்கள்
ஜனாதிபதியானால்...
1. ''பாரதம் சொந்தக்காலில் நிற்க ஒரே வழி... எல்லோரும் பரதம் கற்றுக் கொள்ள வேண்டும்!''
2. ''வோட்டுப் போடு ற மெஷின் மாதிரி ரப்பர் ஸ்டாம்ப் மெஷி னும் கண்டுபிடிச்சிருக் கேன்!''
3. ''மசோதாவுக்கு அங்கீகாரம் உண்டா இல்லையா? 'டாஸ்' போட்டுப் பார்த்துடு வோம்!''
4. ''என்ன, எப்பப் பார்த்தாலும் புகார் புகார்னு வந்துக்கிட்டு? தியானம் பண்ணுங்க... யோகம் பண் ணுங்க! எல்லாம் சரியாய்ப் போயிடும்!''



5. (குடியரசு தின ஊர்வலத்தில்)
''பொதுவாவே என் மனசு தங்கம்...
போட்டியின்னு வந்தாக்க (பிரதமர்
தான்) சிங்கம்... வெற்றி மேல
வெற்றி!...''
6. ஜன கண மன தேசிய கீதத்
துக்குப் புது ட்யூன் போடணும்!
இளையராஜா
(அயல் நாட்டுத் தலைவர்
ளிடம்): ''வாங்க... வாங்க!
தலில் மஸாஜ் முடிச்சுக்
ங்க!... பிறகு பேசுவோம்!''
8. ''பத்மபூஷணாவது... பத்மஸ்ரீயா
வது... நான் கொடுக்கறேன் உனக்கு
விருது...உலக மகா கவிஞர்!''
உலக மகா கவிஞர்
ஜனாதிபதி விருந்து!
ஜனாதிபதிக்கு மட்டும்
தான் விருந்து!

குண்டு வைக்கப் பட்டிருப்பதாக மர்ம டெலிபோன் அழைப்புக்களும் தொடர்ந்து அவற்றைத் தேடும் கலாட்டாக்களுமாகத் தலைநகர் அமர்க்களப்படும் செய்தியைத் தினசரிகளில் படித்திருப்பீர்கள்.

பிள்ளை சுகுமார் காலேஜுக்கும், கணவன் சுதர்சன் அலுவலகத்துக்கும் கிளம்பிப் போன பின் சாப்பாட்டுக் கடையை முடித்துக் கொண்டு பாத்திரங்களை ஒழித்துத் தேய்க்கப் போட்டுவிட்டு அடுத்த வீட்டு மனோகரியுடன் ஒரு அரட்டை செஷன் போடா விட்டால் பாமாவுக்கு மத்தியான தூக்கமே வராது. அன்றும் அப்படித்தான்.

சிநேகிதிகள் இருவருமாய் வாயிற் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு, கோடி வீட்டுக் குஞ்சு ஓடிப்போனதிலிருந்து அரை குறையாகத் தெரிந்த அரசியல் நிலவரங்கள் வரை அத்தனையையும் ஒன்று விடாமல் அலசிக் கொண்டிருந்த நேரத்தில்...

பாமா வீட்டு டெலிபோன்மணி அடித்தது.

''ஒரு நிமிஷம். வந்து விட்டேன்'' என்று சம்பாஷணைக்குத் தொடரும் போட்டுவிட்டு வந்து ரிஸீவரைக்கையில் எடுத்துப் பாமா 'ஹலோ' சொன்னபோது....

''யாருங்க ஸ்ரீமதி சுதர்சனமா?'' ஸ்ட்ரெப்ஸில் மாத்திரையை விழுங்கிய விளம்பர சிங்கத்தின் கர்ஜனையாக மறு முனைக் குரல் ஒலித்தது.

''ஆமாங்க.... நீங்க யாரு?''

''நான் சொல்றதை மருவாதையா வாயை மூடிக்கிட்டுக் கேளு'' என்றது டெலிபோன்.

''யோவ்... யாருய்யா நீ ராங்க் நம்பர்'' என்றாள் பாமா அதிர்ந்தவளாய்.

''அல்லாம் ரைட்டு நெம்பருதான். சும்மா அல்டிக்காதே.''

''முதலில் காட்டிய மரியாதை கிழிஞ்சு இப்போது ஒரே லெளகீகத் தமிழ் கேட்கிறதே யாருப்பா நீ?''

''அதைத்தெரிஞ்சுக்கினுநீஇன்னா செய்யப் போறே? மொதல்ல விசயத்தைக் கேட்டுப் போடு. உன் வீட்டிலே நாங்க பாம்ப் அதாவது குண்டு வச்சிருக்கோம்.''

''பாம்பா....''

''பாம்பு இல்லே. bomb....''

''ஐயையோ... என்னய்யா வெளையாடறியா? எங்கேய்யா வச்சிருக்கே?''

''ஹூக்கும். அத்தே சொல்லிட்டா நீ ஈஜியா கண்டு பிடிச்சிடுவியே. தேடி எடுத்துக்கிடு.''

''தேடி எடுத்துக்கணுமா? அதென்ன பிரசெண்டா.... அடப் பாவி....''

''இன்னம்மா... பாவி கீவின்னு திட்டுறே? மருவாதை இருக்கட்டும்.''

''நீ கெட்ட கேட்டுக்கு மரியாதை வேறு? இந்த ஊர்ல எத்தனை லட்சம் ஜனங்க இல்லே.. உன் குண்டை ஒளிச்சு வைக்க உனக்கு என் வீடுதான் கிடைச்சுதா?... எப்பிடி ஐயா உள்ளே நுழைஞ்சே!''

''நேத்து மத்தியானம் நீ அரட்டை அடிச்சுக்கிட்டிருந்தியே அப்பத்தான்....உன்பிள்ளை சுகுமார் இருக்கானே... அவன் நாங்க சொன்ன பேச்சு கேக்கலே அதுனாலே....''

'பட்.'

தொடர்பு போய்விட்டது.

''ஹலோ ஹலோ'' என்று குதித்தாள் பாமா.

. ''என்ன விஷயம் பாமா?'' — மனோகரி ஓடிவந்தாள்.

''ஐயய்யோ...பாம்பு வெச்சுருக்காளாமே! கடவுளே எப்ப வெடிக்குமோ தெரியலையே!''

பாமா புலம்பத் தொடங்கினாள்.

''பாமா... தைரியத்தை இழக்காதே... இப்போ முதல்லே என்ன செய்யணும்னு யோசிப்போம். உன் ஹஸ்பெண்டைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்லு. அவர் போலீசுக்குத் தகவல் கொடுத்துவிட்டு உடனே வரட்டும்'' என்றாள் மனோகரி.

அதுவும் சரிதான் என்று தோன்றியது பாமாவுக்கு. சுதர்சனத்துக்குப் போன் செய்து அவசரத்தில், ''நான்தான் பாம் பேசறேன். நம்ம வீட்டுலே எந்தக் கடங்காரனோ பாமாவை வச்சிருக்காளாமே! ஐயோ நான் என்ன செய்ய?'' என்று அவள் உளற, அவரோ கோபத்தில் ''வாட் நான்சென்ஸ்'' என்று குண்டாக வெடித்தார்.

''நான் சென்ஸோடேதான் பேசறேன். சீக்கிரம் போலீஸிலே சொல்லிட்டு வந்து சேருகிற வழியைப் பாருங்க.. ஆங் அப்படியே பிரஸ் பீப்பிள் யாருக்காவது சொல்லி வரச் சொல்லுங்க'' என்று சேர்த்துக்கொண்டாள்.

அடுத்த அரை மணி நேரத்தில் சுதர்சனம் வந்து சேர... மனோகரியின் கணவர் முகுந்தனும் வர... காலனி வாசிகள் வாசலில் தேர்க் கூட்டம் போட போலீஸார் வந்ததும் உள்ளூர நடுங்கிக் கொண்டே வீட்டு மனிதர்களும் சேர்ந்து குண்டைத் தேட ஆரம்பித்தார்கள்.

''பேசினவன் குரல் எப்படி இருந்தது?'' என்று கேட்டார் ஒரு போலீஸ்காரர்.



லக்ஷ்மிரமணன்

குண்டு ஜாக்கிரதை

''இதோ உங்க குரல் மாதிரியே... அப்படியோ டிட்டோ'' என்று வெகுளித்தனமாக பாமா பதில் சொல்ல அவர் முறைத்துப் பார்த்துவிட்டுத் தேடுவதைத் தொடர்ந்தார்.

அலமாரியை இழுத்து... பெட்டிகளை நகர்த்தி, பீரோவிலிருந்த அத்தனை சாமான்களையும் இறக்கி....

தரையில் ஒரே சாமான் மயம்.



கும்பகோணம் மாமாங்கத்துக்குப் போன மாதிரி அவை ஒழே தரையில் இடம் பிடித்துக் கொண்டு ஜெஜ ஜெஜத்தன.

''ஆ. கிடைச்சுடுத்து'' என்று கத்தினார் சுதர்சன்.

''வேணாம். கிட்டப் போகாதீங்க'' என்று பாமா அவரைப் பின்னாலிருந்து இழுக்க... அவர் கையிலெடுத்த அந்த வஸ்துவுடன் போலீஸ்காரரின் மீது சாய ''டமார்'' என்ற சப்தம்.

''சிவசிவா...வெங்கடாஜலபதி காப்பாத்து குண்டு வெடிச்சுடுத்து. இப்போ என்ன பண்ணுவேன்!'' பாமா ஓவென்று அழத் தொடங்கியவளை ''ச்...நிறுத்து குண்டும் வெடிக்கலே ஒரு மண்ணுமில்லே. போலீஸ்காரர் கதவின் மேல் விழுந்த சப்தம் அது'' என்று சுதர்சன் அவளை அதட்டினார்.

''குண்டு வெடிக்கலையா... அப்படியானால் அவர் கையிலிருந்த அந்த நீளமான வஸ்து?'' எலி கடித்துக் குதறிப் போட்டிருந்த கறுப்பு கார்டன் பைப் அது என்பது புரிந்தது. மாலை ஆறு மணி வரை தேடியும் அகப்படவில்லை.

அதற்குப் பதில் அவள் கைமறதியாக வைத்துவிட்டுக் கிடைக்காமல் தேடிக்கொண்டிருந்த அலாரம் டைம் பீஸ், முறுக்கு உரல், மகிஷாசுர மர்த்தினி ஸ்தோத்திரப் புத்தகம் கத்தரிக்கோல், பிரிஜிடேரின் ஐஸ் ட்ரேக்கள் இன்னும் இத்யாதிகள் கிடைத்தன.

''தினம் இதே பேஜாராப் போச்சு'' என்று அலுத்துக் கொண்டார் போலீஸ்காரர்.

''எவனோ சோதாப் பயல் தனியா இருக்கிற உங்க ஒய்ஃபைப் பயமுறுத்தவே இப்படி போன் பண்ணி இருக்கிறான். உங்களுக்கு எதிரி யாராவது உண்டான்னுசொல்லுங்க'' என்று ஆறுதல் சொல்லி விசாரணை நடத்திவிட்டு ரிப்போர்ட்டையும் எழுதிக்கொண்டு அவர்கள் போய்ச் சேர்ந்தபோது சுகுமார் காலேஜிலிருந்து சாவகாசமாக வந்தான்.

''என்ன மம்மீ இது அலங்கோலம்?'' என்று வியந்து போனவனுக்கு பாமா விளக்கம் கொடுக்க ஆரம்பித்தபோது அவன் அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் ''ஆ! டிஸக்ஷன் பாக்ஸ் கிடைச்சுடுத்து... அப்பாடா நாலு நாளாக் காணோமென்னு கவலைப்பட்டிண்டிருந்தேன்...அதுனாலேதான் மத்தியானம் உனக்கு அப்படி ஒரு போன் செய்து 'மருவாதையா' பயம் காட்டினேன்'' என்றான் மிகச் சாதாரணமாக.

''அட கடங்காரா... நீ.... நீயா அது? உன்னை என்ன செய்யறேன் பாரு'' என்று பல்லைக் கடித்துவிட்டு அவனை அடிக்க அப்பளக் குழவியைத் தேடத் துவங்கினாள் பாமா. பாவம் இன்னும் கிடைத்தபாடில்லை!

கலியுகம் ஒன்றும் இல்லையே!

கீரன்

நேர்மை, நியாயம் ஆகிய உணர்வுகள் கிருதயுகத்தும் பொய்மை, புரட்டு ஆகியன கலியுகத்தும் மேவி மேலோங்கி நிற்கும் எனப் புராணங்கள் கூறுகின்றன.

அதனால் இறையுணர்வு மிக்க பெரும் புலவர்கள் விரைவில் கலியுகம் கழிந்து கிருதயுகம் எழவேண்டும் என்று விரும்பிப் பாடினர்.

''இடிபட்ட சுவர் போல கலி விழுந்தான்; கிருதயுகம் எழுக மாதோ!'', ''பொய்க்கும் கலியை நான் கொன்று பூலோகத்தார் கண் முன்னே மெய்க்கும் கிருதயுகத் தினைக் கொணர்வேன்'' என்பன பாரதி வரிகள்.

கலி பொய்மை நிறைந்தது எனவும் கிருதயுகம் மெய்மை நிறைந்ததெனவும் கூறிய பாரதி, கலியுகத்தில் தர்மங்கள் வீழ்ந்துவிடும் என்றும், தீமை இளைக்கும், மேலோர் தாழ்வர், நிலைபுரண்டு பாதகமே ஓங்கிநிற்கும் என்றும் கூறினான். பூபேந்திர விஜயத்தை எழுதிய பாரதி, ''வீழ்த்தல் பெறத் தருமம் எல்லாம், மறம் அனைத்தும் இளைத்துவர, மேலோர் தம்மைத் தாழ்த்தத் தமர் முன்னோங்க நிலைபுரண்டு பாதகமே ததும்பி நிற்கும் பாழ்த்த கலியுகம்...'' என்று எழுதினான்.

கலியுக, கிருதயுகங்களைப் பற்றிப் பாரதி தெரிவிக்கும் கருத்துக்களை நம்மாழ்வாரிடமும் காணலாம். நம்மாழ்வார் கலி பொய்ம்மையுடையது எனினும் தெய்வ வழிபாடு கலியின் கொடுமைகளை நீக்கும் எனவும், சமய வேறுபாடின்றி எத்தெய்வத்தையும் தொழலாம் எனவும் கூறி அங்ஙனம் தொழுவாரை வாழ்த்திப் ''பொலிக! பொலிக! பொலிக! போயிற்று வல்லுயிர்ச் சாபம்!'' என்று ஆசியும் அருளியுள்ளார்.

''கண்ணுக்குத் தெரிவன யாவும் கடல் வண்ணன் பூதங்களே! நாம் அவன் பெருமையை ஆடிப் பாடினால், நலியும், நரகமும் இல்லை; நைந்த நமனும் இல்லை; கலியும் கெடும் கண்டு கொள்ளுங்கள்''

''தொண்டர்களே! நீண்ட மலை, நெடிய சோலை, இனிய நீர்ப் பெருக்கு எனக் கடல் வண்ணன் பூதங்களாய் நின்று காட்சி தருகின்றான். எங்கும் இடம் கொண்ட அவனை ஏத்தி இசை பாடி நின்றால் திரியும் கலியுகம் நீங்கித் தேவர்கள் தாமும் புகுந்து பெரிய கிதயுகம் பற்றி (கிருதயுகம் ஆழ்வார் பாடலில் கிதயுகம் என்றே வந்துள்ளது) பேரின்ப வெள்ளம் பெருகக் கொள்ளலாம்.''

''இயற்கையில் பல பொருட்கள் கிடக்கின்றன; இருக்கின்றன; எழுகின்றன; நடக்கின்றன; பறக்கின்றன; குனிகின்றன. இவை அவன் நாடகங்கள்; தடங்கடல் பள்ளிப் பெருமான் தன்னுடைய இப்பூதங்கள் வேறுபாட்டை நீக்குவன.''

''தொண்டர்களே! நீங்கள் மனிதர்களாகப் பிறந்தீர்கள்! அதற்கு மகிழுங்கள். அசுரராக, அரக்கராகப் பிறக்கவில்லை. மனிதராகப் பிறந்து, மனிதராகவே இருங்கள். ஏனெனில், மனிதன், அசுரன், அரக்கன் என்ற பிரிவுகள் பிறப்பால் வருவன அல்ல; குணத்தால் வருவன. செய்கின்றது ஒன்றே இவ்வுலகத்து ஒக்கின்றது அதனால். வைகுந்தன் மாயமே எவ்விடத்தும் மன்னி நிற்பது.''

''செய்கின்றது என் கண்ணுக்கு ஒன்றே
ஒக்கின்றது: இவ்வுலகத்து
வைகுந்தன் பூதங்களேயாய்
மாயத்தினால் எங்கும் மன்னி
ஐயமொன்றில்லை அரக்கர்
அசுரர் பிறந்தீருள்ளீரேல்
உய்யும் வகையில்லை, தொண்டீர்!
ஊழிபெயர்த்திடும் கொன்றே!''

''கொன்று உயிருண்ணும் வியாதி, பகை, பசி, தீயன எல்லாவற்றையும் நீக்கவே நேமிப் பிரான் அருள் செய்தார். நீங்கள் சிந்தையைச் செம்மையுறவே நிறுத்தி, சென்று தொழுது உய்மின்கள்!''

''நீங்கள் உள்ளத்து நிறுத்திக் கொள்ளும் தெய்வம் உம்மை உய்யக் கொள்ளும். இதற்கு மார்க்கண்டேயன் சாட்சி; கறுத்த (வஞ்ச) மனம் வேண்டாம்; கண்ணன் தெய்வம்; எங்கும் இருப்பதெல்லாம் அவன் மூர்த்தியே''

''வேதத்தைப் புனித இருக்கையாகக் கொண்டவன் இறைவன்; அவனை நாவினில் கொண்டு பூவும் புகையும் விளங்கப் போற்றி மேவித் தொழுங்கோள்; நல்லவர்கள் மிக்கதே நாடு.''

''எவ்வுலகும் எவ்விடத்தும் கண்ணனும், சிவனும், அயனும், இந்திரன் முதலான தேவர்களும் பரந்து காட்சி தருகின்றனர். முறையாகத் தொழுதால் தீங்கு ஏது? தீங்கு தரும் கலியுகம் ஒன்றுமில்லாமல் ஆகிவிடாதா?''

''மிக்க உலகுகள் தோறும்
மேவிக் கண்ணன் திருமூர்த்தி
நக்க பிரானோடு அயனும்
இந்திரனும் முதலாக
தொக்க அமரர் குழாங்கள்
எங்கும் பரந்தன தொண்டீர்,
ஒக்கத் தொழுகிற்றிராகில்
கலியுகம் ஒன்றுமில்லையே!''

இறையுணர்வு மனிதனுக்குத் தன்னம்பிக்கை தருவது. புகையின் நடுவினில் தீயிருப்பதைப் பூமியில் காண வழி செய்வது இறையுணர்வு. இந்தச் சாரத்தை நம்மாழ்வார் பாசுரம் காட்டுகிறது.



கவனிக்கக் கூடாதா?



சென்னை நகரை வலம் வந்த போது ஆங்காங்கே நம் கண்ணில் பட்ட, காதால் கேட்ட சில குறைகளைச் சம்பந்தப்பட்டவர்களின் நடவடிக்கைக்காகச் சமர்ப்பிக்கிறோம்:

எழும்பூர் ரயில் நிலைய கண்காணிப்பாளர்

எழும்பூர் ரயில் நிலையத்துக்கு மேலே பல அறைகள் கொண்ட 'கெஸ்ட் ஹவுஸ்' குறைந்த வாடகைக்கு விடப்படுகின்ற செய்தியையும் எத்தனை அறைகள் காலியாக உள்ளன என்ற விவரங்களையும், ரயில் நிலையத்திலிருந்து வெளியே வரும் நுழைவாயில் அருகே பார்வையாக எழுதி வைக்கலாமே? அறை வாடகை அதிகம் உள்ள எழும்பூர் பகுதியில் — தங்க இடமின்றித் தவிப்பவருக்கு வசதியாக அமையுமே?

உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர்

மே முதல் தேதி முதல் பழைய ரேஷன் அட்டைகள் செல்லாது என அறிவித்துள்ளீர்கள். புதிய கார்டு பெற்றவர்களைப் பொறுத்தவரையில் கவலை இல்லை. ஆனால் நகரின் பல பாகங்களில் கணக்கெடுப்பு சமயத்தில் வெளியூருக்குச் சென்றிருந்தவர்கள், மற்றும் கணக்கெடுப்பாளர்களால் விடப்பட்டவர்கள் ஆயிரக் கணக்கில் மனுச் செய்திருக்கின்றனரே... அவர்களுக்கு நீங்கள் புதிதாகக் கார்டு கொடுக்கும் வரை அவர்களின் கதி என்ன?

தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி:

நாடெங்கும் அண்ணாவின் சிலைகள் நிறுவுவதில் அக்கறை காட்டிய நீங்கள் அதன் பராமரிப்புக்கும் அக்கறை காட்ட வேண்டாமா? தினமும் ஆயிரக் கணக்கானோர் வந்து செல்லும் வள்ளுவர் கோட்டம் அருகே நீங்கள் நிறுவிய அண்ணா சிலை — வள்ளுவர் கோட்டம் அமைத்த கருணாநிதி நிறுவியது என்ற அறிவிப்புடன் முட் புதர்கள் வளர்ந்து கற்கள் சிதறி அலங்கோலமாகக் காட்சி அளிக்கிறதே... கவனிக்கக் கூடாதா?

மாநகராட்சி ஆணையாளர்

மாலை நேரங்களில் சற்று நடந்து, தூய்மையான காற்றைக் கொஞ்சம் சுவாசிக்க, கலைஞர் கருணாநிதி நகர் மக்கள் பெரிதும் நம்பியிருந்தது அந்நகரில் அமைந்த பூங்காவையே! பல தடவைகள் சினிமாப் படப் பிடிப்புகள் கூட நடைபெற்று, மாநகராட்சிக்கு நல்ல வருவாயையும் அளித்த இந்தப் பூங்கா இப்போது பொட்டல் காடாகக் காட்சி அளிப்பதன் காரணம், இது கலைஞர் கருணாநிதி நகர் அருகில் அமைந்திருப்பதாலா?

தொலைக்காட்சி நிலைய இயக்குனர்

பல லட்ச மூலதனத்தில் நிறுவப்பட்டுள்ள தொலைக் காட்சி நிலையத்தில், பணிபுரியும் தொழில் நுட்பப் பணியாளர்கள் மட்டுமின்றி தொலைக் காட்சியில் நிகழ்ச்சி அளிக்க வரும் கலைஞர்களும் இஷ்டம் போல் எடிட்டிங் அறை உட்பட எல்லாப் பகுதிகளிலும் சர்வ சாதாரணமாகப் புகை பிடிக்கின்றனரே. எளிதில் தீப்பற்றும் பிலிம் சம்பந்தப்பட்ட தொலைக் காட்சி நிலையத்தில் இவ்வாறு அஜாக்கிரதையாக நடந்துகொள்ள எப்படி அனுமதிக்கிறீர்கள்! மற்றுமொரு ஸ்பென்ஸராகத் தொலைக்காட்சி நிலையம் மாறிவிடக் கூடாது, பாருங்கள்!


— பழனி

“லீப் வருஷம் என்றால் என் கணவருக்கு சந்தோஷம் தாங்க முடியாது!”

“ஏன்?”

“ஒரு நாள் அதிகமாக ஆபீஸிலே தூங்கலாமே!”

—உ. சங்கரசுப்பு



சூப்பர்மேன்-3

'628'

காட்சி 1

(திண்ணையில் ராகவாச்சாரி உட்கார்ந்திருக்கிறார். எதிரே சூப்பர்மேன்-3 நின்று கொண்டிருக்கிறான்.)

ராகவாச்சாரி: சரிப்பா. நீ சூப்பர் மேனா இருக்கலாம். ஆனா நான் சொல்ற காரியங்களைப் பண்ணினாத்தான் உன்னை சூப்பர் மேன்னு ஒத்துப்பேன்.

சூப்பர்மேன்: என்ன செய்யணும்? சந்திரன் லேருந்து மண் வேணுமா? செவ்வாயி லிருந்து கல் வேணுமா?

ரா: இதெல்லாம் எங்கள் அரிசியிலேயே கிடைக்கிறது. நான் கேட்கறது (1) ரேஷன் கடையிலிருந்து அரிசி, சர்க்கரை, பாமாயில், (2) பேத்தி 'ஜிங்கு'வுக்கு எல்.கே.ஜி. அட்மிஷன். (3) குடியிருக்க இதே ஏரியாவில வேறே வீடு. முடியுமா?

சூ: இவ்வளவுதானே? இப்பவே போறேன். இப்பவே போறேன்... இப்பவே....

ரா: சூப்பர்மேன்கறதுக்காக இப்படியா பறக்கணும்? கொஞ்சம் இரு. பை, டின், எல்லாம் தரேன்.

(வாங்கிக்கொண்டு சூப்பர்மேன் பறக்கிறான்.)

காட்சி 2

(சூப்பர்மேன் டிரஸ் கசங்கி, வியர்த்துக் கொட்டியபடி ராகவாச்சாரி முன்னால் தளர்ந்து நிற்கிறான்.)

ரா: என்ன ஆச்சு?

சூ: என்னை விட்டுடுங்க. நான் போயிடறேன். முடியலே.

ரா: ஏன், என்ன ஆச்சு சொல்லுப்பா.

சூ: ஒவ்வொண்ணாச் சொல்றேன். (மூச்சு வாங்கியபடி) ரேஷன் கடையிலே பெரிய க்யூ. பார்த்தேன். சரி பறந்து உள்ளே போயிடலாம்னு நினைச்ச போது ஒரு ஏழெட்டுப் பேர் வந்து, எங்களையும் தூக்கிட்டுப் பறக்கறதுன்னா போ. இல்லைன்னா க்யூவுல வான்னாங்க. இத்தனை பேரைத் தூக்கிக்கிட்டுப் பறக்கமுடியாதுன்னு கியூவில போனேன். கிட்டப் போனதும் பாம் ஆயில் தீர்ந்து போச்சுன்னுட்டாங்க. நோட்டுக்குச் சில்லறை இல்லே மாத்திக்கிட்டு வான்னாங்க. மறுபடி கியூவிலே தான் வரணுமாம். ஒரு வழியா நின்னு வாங்கினேன். ரேஷன்லே சாமான் வாங்கறது, அப்பப்பா! ரொம்ப சிரமம்!

ரா: ஸ்கூல் விஷயம்?

சூ: அது ஒரு அவஸ்தை. எல்.கே.ஜி.க்கு இண்டர்வியூ உண்டாம். டொனேஷனும் பீஸும் எக்கச் சக்கம். அப்ளிகேஷன் வேணும்னு, பெரிய ஆளுங்க கிட்டேயிருந்து ரெகமண்டேஷன் லெட்டர் கொண்டான்னுட்டாங்க. ஆனவரை டிரை பண்ணினேன். முடியலே. பெரிய துண்டு போட்டுக்கிட்டு கார்ல ஒருத்தர் வந்தார். அப்ளிகேஷன் வாங்கிக்கிட்டுப் போய்க்கிட்டே இருந்தார். ஆமா, அவர் யாரு?

ரா: அவர்தான் எங்க ஊர் சூப்பர்மேன், அரசியல்வாதி. சரி அடுத்தது வீடு?

சூ: பயங்கரமான ஆளுங்க ரியல் எஸ்டேட் காரங்க. முதல்ல ரிஜிஸ்டிரேஷனுக்குத் தனியா பணம், அப்புறம் புரோக்கர் கமிஷன், அப்பப்ப ''டீக்கு துட்டு'' எல்லாம். அட்வான்ஸ் நூறு ரூபாய்க்கு ஆயிரம் ரூபா, 200க்கு 2000 இப்படிப் போவுது. என்னாலே முடியலே. நான் ஊருக்கே போயிடறேன். விட்டுடுங்க. நான் தோத்துட்டேன்.

000555

தெலுங்கு மூலம்: ஜி.வி. ஜி
தமிழாக்கம்: ஜெயரதன்

"குட்மார்னிங்.... 000555ஹியர். வாட் டு யூ வான்ட் ப்ளீஸ்?"

"யஷ்வந்த் ராவ் ஹியர்.... அந்த பார்ட்டியை நாளைக்கு எதிர்பார்க்கலாமா?"

"ஜஸ்ட் எ மினிட்... உங்க காண்ட்ராக்ட் நம்பர் என்ன?"

"391"

சில விநாடிகள் மௌனமாய் கரைந்தன.

"ஹலோ மிஸ்டர் யஷ்வந்த் ராவ்... நாளை மாலை ஆறு மணிக்கு...."

"தாங்க்ஸ்..."

டெலிபோனை வைத்தான் யஷ்வந்த் ராவ். நாளை மாலையை நினைத்து மனம் கிளர்ந்தது.

● ● ●

அழைப்பு மணி சங்கீதமாய் ஒலித்தது.

பரபரப்புடன் சென்று கதவைத் திறந்தான் யஷ்வந்த் ராவ்.

கையில் சூட் கேஸுடன் புன்னகை தவழ நின்றாள் சுதாராணி. அவள் அணிந்திருந்த மஞ்சள் நிற அமெரிக்கன் ஜார் ஜெட் தன்னைவிட நல்ல நிறமா என்ன என்று பார்க்கிற மாதிரி அவள் காதோரமாய் ஒரு சாமந்திப் பூ எட்டிப் பார்த்தது. உயரத்திற்கேற்ற பருமனு. பருமனுக்கேற்ற உயரமா என்று பாகுபடுத்திப் பார்க்க முடியாதவாறு இரண்டும் ஒன்றோடு ஒன்று பொருந்தியிருந்தன.

வைத்த கண் வாங்காது அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் யஷ்வந்த் ராவ்.

என்ன அழகு இவளுக்கு?

இப்படி ஒரு பெண்ணை மனைவியாகப் பெற எவ்வளவு அதிருஷ்டம் செய்திருக்கவேண்டும்?

நினைவே சுகமாய் இனிக்க அவளைப் பார்த்து மென்மையாகச் சிரித்தான்.

"இது என்னது இப்படி ஒரு பார்வை, இப்பத்தான் முதல் தடவையாகப் பார்க்கிற மாதிரி... ஒரு மாத இடைவெளி இவ்வளவு ஏக்கத்தையா ஏற்படுத்திடுச்சு?...."

கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தாள் சுதாராணி. மல்லிகை மணத்தில் அந்த அறையே நிரம்பிற்று.

"சரியா சொன்ன நேரத்துக்கு வந்திட்டியே?"

"வராட்டா விட்டுருவீங்களா? டெலிகிராம் டெலிபோன்னு எத்தனை கொக்கி போட்டு இழுத்திங்க?... அதான் கரெக்டா வந்துட்டேன்."

அவள் சொல்லி முடிக்கும் முன் அவளை வாரி அணைத்துக் கொண்டான் யஷ்வந்த் ராவ்.

மோகனமாய் அவனைத் தழுவிக் கொண்டாள் சுதாராணி.

"நிஜமாவே இந்த ஒரு மாச இடைவெளியை என்னாலே தாங்க முடியல்லே சுதாம்மா.... நீ எப்ப வருவேன்னு மனசு துடிச்சுப் போச்சு."

காற்றுக்குக் கூட இடம் கொடாமல் இறுக அணைத்துக் கொண்டான்.

"ஒரு மாசம் ஹோட்டல் சாப்பாட்டிலே இளைச்சுப்போயிட்டீங்களே? இனிமே வாய்க்கு ருசியாச் சமைச்சுப் போடறேன். பத்தே நாள்லே பழையபடி ஆயிடணும் என்ன?"

அவன் தலையைத் தன் விரல்களால் அளாவினாள் சுதாராணி.

"சமையல் நாளையிலேர்ந்து... இன்னைக்கு ஹோட்டல்ல சாப்பாடு... சினிமா... அப்புறம்....."

அவன் சொல்லி முடிக்கு முன் அவன் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு, குளியலறைக்குக் குளிக்க ஓடினாள் சுதாராணி.

"வீடு ரொம்ப அலங்கோலமா இருக்கு... பொம்பளை இல்லேன்னு அதுக்காக இப்படியா?"

அவள் குரல் குளியலறையிலிருந்து சன்னமாய்க் கேட்டது.

வெளியே அறையில் உற்சாகம் கொப்பளிக்க உலாவினான் யஷ்வந்த் ராவ்.

அப்பாடி. சுதா வந்து விட்டாள். இனி வேளைக்கு மணக்க மணக்கச் சாப்பாடு. அழகு மிளிர வீடு பளபளக்கும். ஒரு தூசி, தும்பு இல்லாமல் துப்புரவாக எல்லாம் சுதாவின் கைவண்ணத்தில் மின்னும். துணிமணிகள் எல்லாம் அழகாய்த் துவைத்து, இஸ்திரி போடப்பட்டு 'வார்ட்ரோப்'பில் அடுக்கடுக்காய் வைக்கப்பட்டிருக்கும். மலர் மாலை மாதிரி இரவில் அவன் மார்பில் அவள். இனி ஒவ்வொரு நாளும் ஒரு சொர்க்கம்தான். அந்தச் சொர்க்கத்தின் ராணி சுதாராணி.

மனத்தின் உற்சாகம் நடையில் தெரிந்தது.

கட்டிலில் படுத்துக்கொண்டு உற்சாகமாய்ப் புரண்டான் யஷ்வந்த்ராவ்.

ஜோடியாய்க் கை கோத்துக் கொண்டு கடற் கரையில் உலாவுவார்கள். சினிமாப் பார்ப்பார்கள். கடைத் தெருவில் கடை கடையாய் வேடிக்கை பார்ப்பார்கள். உலகத்து சந்தோஷங்கள் எல்லாம் அவனுள் புகுந்துகொள்ளும். ஒரு சொர்க்க சுகம் அவனை ஆட்கொள்ளும்.

"என்னங்க... என் சாரியை வெளியிலேயே வச்சுட்டேன். ப்ளீஸ் எடுத்துக் கொடுங்களேன்...."

குளியலறைக் கதவிடுக்கின் வழியாய்க் கையை மட்டும் நீட்டிக் கொண்டு கேட்டாள் சுதாராணி.

உங்கள் ஆத்ம நண்பன்—
லக்ஷ்மி விலாஸ் பாங்க்

நாங்கள் உங்களுக்கு ஒரு பாங்க் மட்டுமல்ல—அதற்கும் மேலாக உங்கள் பேரில் எங்களுக்கு அக்கறையும், எங்கள்மீது உங்களுக்கு சுவாதீனமும் உள்ளன.

வாங்கும் சம்பளம் அனைத்தையும் செலவழிப்பதையே பழக்கமாகக் கொண்டிருப்போர் பலர். இவர் தம் மனத்தில் சேமிப்பை வலியுறுத்திப் பதிய வைப்பது எமது கடமை எனக் கருதுகிறோம்.

இன்றே எமது ரெகரிங் டெபாசிட் திட்டத்தில் சேருங்கள். நீங்கள் செலுத்தும் மாதச் சந்தா ரூ. 100 120 மாதங்களில் ரூ. 20557 ஆகப் பெருகுவதைக் காணலாம். சுருங்கச் சொன்னால் உங்கள் சேமிப்பு ரூ. 12000, வட்டியாக ரூ. 8557 சம்பாதிக்கிறது!

உங்கள் அருகிலுள்ள எமது கிளைக்கு விஜயம் செய்யுங்கள்

LVB

லக்ஷ்மி விலாஸ் பாங்க் லிமிடெட்

பதிவு அலுலகம் : கரூர்-639 001
நிர்வாக அலுவலகம் : சென்னை-600 086

என். முத்தியாலு — ஜெனரல் மானேஜர்
என்.வி. ஸ்ரீநிவாசன் — சேர்மன்

அந்நியச் செலாவணியில் வர்த்தகம் செய்ய அங்கீகாரம் பெற்ற வங்கி.



ராஜா வேத காவ்ய பாடசாலை

ஸ்தாபிதம் : 1542

கும்பகோணம்.

உபநயனம் ஆன

7 வயதுக்கு மேற்படாத அந்தண சிறுவர்களை சேர்த்துக் கொண்டு ரிக், யஜுர், ஸாம வேத அத்யயனமும், காவ்யம், இங்கிலீஷ், தமிழ், கணிதம் முதலிய பாடங்களும், சொல்லி வைக்கிறோம். **உபநயனம்** செய்ய முடியாதவர்களுக்கு இவ்விடமே **உபநயனம்** செய்விக்கிறோம். ரிக் வேதம், ஸாம வேதத்திற்கு சேரும் வயது 9க்குள் இருக்க வேண்டும். குழந்தைகளுக்கு ஆகாரம் முதலிய ஸகலஸௌகர்யங்களும் செய்து தருகிறோம்.

(1) கோத்ரம், (2) ஸூத்ரம், (3) எந்த வேதம், உபநயனம் ஆகிவிட்டதா? வயது, இங்கிலீஷ், தமிழ் பிறந்த தேதி ஜாதகத்துடன், தாய், தந்தை, கார்டியன், பெயர், தொழில், விலாஸம் முதலிய விபரங்கள் தெளிவாய் எழுதி ஒரு ரூபாய் தபால் தலையுடன் **ஜூன் மீ 30 தேதிக்குள்** விண்ணப்பித்துக் கொள்ள கோருகிறோம்.

விபரங்களுக்கு

சேர்மன்

ராஜா வேத
காவ்ய பாடசாலை

கும்பகோணம்

மறுநாள் காலை.

எட்டு மணி வெய்யிலில் ஜன்னல் வழியே சுள்ளென்று பாய்ந்தது. மெதுவாய்ப் புரண்டான் யஷ்வந்த் ராவ்.

''குளித்துத் தலை வாரிக் கையில் காப்பிக் கோப்பையுடன் சுதாராணி நின்று கொண்டிருந்தாள்.

''எழுந்திருங்க... டிபன் ரெடி. குளிச்சிட்டு ஆபீஸ் போகலாம்.''

காப்பிகோப்பையுடன்அவள்கைகளைப்பற்றினான் யஷ்வந்த் ராவ்.

''நோ ஆபீஸ்... ஒரு வாரம் ஐயா லீவு.''

''சின்னப் பையன்னு நெனைப்பா?''

''ஒண்ணு தெரியுமா சுதாராணி! ரியல் யூத்பிலின்ஸ் ஒன்லி ஆஃப்டர் ஃபார்ட்டி... நான் இப்போ ரியல் யூத்....''

கடகடவென்று சிரித்துக் கொண்டே அவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக்கொண்டான் யஷ்வந்த் ராவ்.

ஒரு வாரம் ஓட்டமாய் ஓடிப் போயிற்று.

ஒரு வாரத்தைத் தொடர்ந்து பாக்கி மூன்று வாரங்களும் ஓட்டமாய் ஓடின.

முப்பதாம் நாள் இரவு.

கட்டிலில் படுத்திருந்தான் யஷ்வந்த் ராவ்.

அவன் மார்பில் முகம் புதைத்துக் கலந்து போய்க் கிடந்தாள் சுதாராணி.

விரல்களால் அவள் தலையைக் கோதிவிட்டவாறே அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அரைத் தூக்கத்தில் செல்லமாய்ச் சிணுங்கினாள்.

நாளைக்கு அவனோடு இருக்க மாட்டாள் சுதாராணி. இதுதான் அவளோடு அவனுக்குக் கடைசி இரவு. ஒரு மாதத்துக்கு முன் இப்படித்தான் பத்து நாள் இருந்துவிட்டுப் போனாள். மீண்டும் அவளை அடைய ஒரு மாதம் காத்துக்கொண்டிருக்கவேண்டியதாயிற்று. எவ்வளவு பாடு பட்டான் அவளை அடைய?

மீண்டும் அவளை இழக்க வேண்டும். தனிமையில் வாட வேண்டும்.

நினைக்கவே துக்கமாய் இருந்தது. விம்மி வெடித்து அழ வேண்டும் போல் இருந்தது. சுதாராணி மாதிரி அறிவும் அழகும் ஆற்றலும் நிறைந்த இன்னொரு பெண் கிடைப்பாளா என்ன?

அவளையா இழப்பது?

அவளை அழுத்தமாய் அணைத்துக் கொண்டான் யஷ்வந்த் ராவ்.

விழித்துக் கொண்டாள் சுதா.

''இன்னும் தூங்கலியா நீங்க?''

மார்பை மெதுவாக வருடினாள்.

''தூக்கம் வரல்லே சுதா.''

''ஏன்?''

''நாளைக்கு நீ இருக்க மாட்டேன்னு நினைச்சாத் தூக்கமே வரல்லே. இந்த இரவு இப்படியே விடியாம இருக்காதான்னு இருக்கு.''

குரல் உடையச் சொன்னான் யஷ்வந்த் ராவ்.

பதில் பேசாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் சுதாராணி. நீல நிற இரவு விளக்கில் அவள் ஒரு நீல நிற மோகினியாய் அவன் கண்களுக்குத் தெரிந்தாள்.

சிறு வயதில் கல்யாணம் என்கிற பந்தம் அர்த்தமற்றது என்ற ஒரு அபிப்பிராயத்தை வளர்த்துக் கொண்டு சுதந்திரமாய், ஆயுள் முழுவதும் வாழ்வேன் என்று முரண்டு பிடித்து நாற்பத்தைந்து வயதைக் கழித்தாயிற்று. கை நிறையச் சம்பளம். என்ன பிரயோசனம்? தனிமை, வெறுமை. ஏதோ வரட்டுச் சித்தாந்தத்தில், பிடிவாதத்தில் இளமை ஏங்கி ஏங்கித் தனிமையில் கழிந்து போயிற்று. சே! பெண் துணை இல்லாமல் என்ன வாழ்க்கை? காட்டு மல்லிகை மாதிரி வாசனை இல்லாமல் என்ன பிறவி இது?

சுஸ் இட் டூ லேட் டு மேரி?

நிஜம்மாகவே லேட்டா?

சுதாராணி மாதிரி ஒரு பெண்ணை மணந்து கொள்ளத் தாமதம் ஒன்று உண்டா என்ன?

ஒரு வேகம் உடலில் பரவ, அவளை நோக்கித் திரும்பினான்.

''நாளைக்கு நீ போக வேண்டாம். என்னோடவே இருந்துடு....''

குரலில் தீர்மானம் தெறித்தது.

விருட்டென்று எழுந்து உட்கார்ந்த சுதாராணி அவனை வியப்புடன் பார்த்தாள்.

''யெஸ்... ஐ மீன் வாட் ஐ ஸே... நீ என்னோடே இருந்துடு. உனக்குச் சம்மதம்னா, நாம் கல்யாணம் பண்ணிக்கலாம்.''

உணர்ச்சி வேகத்தில் குரல் நடுங்கியது.

'பாவம்' என்கிற மாதிரி அவனைப் பார்த்தாள் சுதாராணி.

''முடியாது... ஐந்தாண்டுகளுக்கு நான் அந்தக் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறேன். இன்னும் மூணு வருஷக் காண்ட்ராக்ட் இருக்கு.. ஐ பிலாங் டு தெம். அதுவரைக்கும் நான் அவர்கள் சொத்து.''

நிதானமாய்ப் பேசினாள் சுதாராணி.

சற்று நேரம் யோசித்தான் யஷ்வந்த் ராவ்.



கணவன்: "அது என்னடி பள்ளிக்கூடத்திலிருந்து எனக்குக் கடிதாசு வந்திருக்கிறது? பயல் ஏதாவது விஷமம் செய்துவிட்டானா?"

மனைவி: "நீங்க போட்டுக் கொடுத்த கணக்கு எல்லாம் தப்பாம். ஒண்ணாங் கிளாஸில் சேர உங்களுக்கு அழைப்பு அனுப்பியிருக்காங்க..."

-உ. சங்கரசுப்பு

வெள்ளை வெளேர் என்று பனங்கிழங்காய் கை மட்டும் வெளியே தெரிந்தது.

அப்படியே விருட்டென்று பிடித்து இழுத்தால் எப்படி இருக்கும்?

கற்பனையில் உடல் எல்லாம் கிளர்ந்தது.

சீச்சீ... கொஞ்ச நேரம் வெள்ளமா கொண்டு போய்விடும்?

சந்தன வண்ண ஷிபானை எடுத்து நீட்டினான் ராவ். குளியலறையை விட்டு வெளியே வந்தாள் சுதாராணி.

சந்தன வண்ண ஷிபான்பட்டுப்புடவையில் அரக்குச் செப்புக்கரை மின்ன, சரத் தலைவியைத் துவட்டிய வண்ணம் வந்தவளைப் பார்த்து இமைக்க மறந்தான் யஷ்வந்த்ராவ்.

''நீ ஒரு தேவதை சுதா.''

குரல் குழைய அவளை நோக்கி நடக்கலானான்.

அவன் நோக்கத்தைப்புரிந்து கொண்டாள். அவன் பிடியில் அகப்படாமல் விலகினாள்.

''எல்லாம் அப்புறம்.... முதலில் நீங்க டிரஸ் பண்ணிட்டு வாங்க சீக்கிரம். வெளியே போகலாம். நாழியாகுது.''

தன்னை அலங்கரித்துக் கொள்ளலானாள், சுதாராணி.

அடுத்த பதினைந்தாவது நிமிடம் இருவரும் வெளியே வந்தார்கள். வெளிர் நீல நிற சஃபாரியில் அவன். சந்தனச் சிலையாய் அவள்.

டிரைவ் இன்னில் டிபன் சாப்பிட்டார்கள். அதன் பார்க்கில் தனியாய் உலாவினார்கள். மேல் பாலத்தில் விளக்கு வரிசையை ரசித்தார்கள். இளம் காற்றில் அவள் கேசம் சன்னமாய் அசைகிறதைப் பார்த்துக் கிறு கிறுத்தான் ராவ். ப்ளு டைமண்டில் சினிமாப் பார்த்தார்கள்.

வீட்டுக்குத் திரும்பியபோது இரவுமணி பன்னிரண்டு.

மோகனமாய் இரவு கழிந்தது.



''அந்த ஒப்பந்தத்தை முறியடிக்க முடியாதா?''

சன்னமாய்த்தலையசைத்தாள் சுதாராணி.

''பெரிய தொகையை காம்பன்ஸேஷனாத் தரவேண்டியிருக்கும். ஐ ஆம் நாட் தட் வொர்த்...நான் ஒரு கால் கேர்ல். வாடகை டாக்ஸி மாதிரி....''

கீழுதட்டைக் கடித்துக் கொண்டாள் சுதாராணி. மெல்லிய நீல நிற வெளிச்சத்தில் கண்களில் கண்ணீர் பளபளத்தன.

அவன் தோள்களைத் தழுவிக் கொண்டான் யஷ்வந்த ராவ்.

''என்னோட இன்னும் கொஞ்ச நாள் இருக்க மாட்டியா சுதாராணி?''

சின்னக் குழந்தை மாதிரி கெஞ்சினான், ராவ்.

பார்க்கப் பரிதாபமாக இருந்தது அவளுக்கு.

''ஒரு நாள் கூட இருந்தாலும் ஒரு மாத வாடகை தரவேண்டும். கம்பெனியிலே பில் அனுப்பிச்சிடுவாங்க...''

''பரவாயில்லே. ஐ நீட் யூ ஸ்வீட்டி... ஐ நீட் யூ....''

மூர்க்கத்தனமாய் அவளை அணைத்துக் கொண்டான் ராவ்.

வெது வெதுப்பான அவள் கண்ணீர் அவன் தோள்களை நனைத்தன.

''நாளைக்குக் காலையிலே எக்ஸ்டென்ஷனுக்குக் கேட்டுப் பாருங்க... இப்பத் தூங்கலாம்.''

அவனை அணைத்துக் கொண்டாள் சுதாராணி.

குழந்தை மாதிரி அவள் அணைப்பில் அடங்கிப் போனான் யஷ்வந்த் ராவ்.

''குட் மார்னிங்.... 000555 ஹியர்... வாட் யூ வாண்ட் ப்ளீஸ்?''

''யஷ்வந்த் ராவ் ஹியர். என் காண்ட்ராக்டை இன்னொரு மாதத்துக்குஎக்ஸ்டண்ட் பண்ணிக்கணும்....''

''யுவர் காண்ட்ராக்ட் நம்பர் ப்ளீஸ்?''

''391''.

''ஜஸ்ட் எ மினிட்.''

சில விநாடிகள் அமைதியாய் ஊர்ந்தன. மறு முனையில் ஒரு ரிஜிஸ்டர் புரட்டப்படுவதைப் பரபரப்புடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

''ஹலோ.''

''யெஸ்.''

பரபரத்துப் பொங்கினான் ராவ்.

''சாரி சார்... தி பார்ட்டி ஈஸ் எங்கேஜ்ட் ஃபார் அனதர் ஸிக்ஸ் மன்த்ஸ்... எக்ஸ்க்யூஸ் மீ....''

உடலும் மனமும் ஓய்ந்து போய் டெலிபோனை வைத்தான் யஷ்வந்த் ராவ்.

''இன்னும் ஆறு மாதத்துக்கு நீ கிடைக்க மாட்டாயாம் சுதா....''

குரல் உடையச் சொன்னான் யஷ்வந்த் ராவ்.

புறப்படத் தயாராகிக் கொண்டிருந்த சுதாராணி – அந்த வாடகை மனைவி – அவனைப் பரிதாபம் மேலிடப் பார்த்தாள்.



ரேஷன் கவிதைகள்

ரேஷன் க்யூவில் பொழுது போகாதபோது பாடியது **சந்திரமௌலி.**


- அரிசி, கோதுமை,
ரவை, மைதா,
சர்க்கரை, பாமாயில்,
மண்ணெண்ணெய்
இத்தனையும் இருக்கு!
எங்கே?
ரேஷன் கடையிலா?
இல்லே—
ரேஷன் கார்டில்!

- பு. அரிசி
எங்கும் கிடைக்கும்
ஆனால்—
பு. பு. அரிசி?
ரேஷனில் மட்டுமே!
அதென்ன பு. பு. அரிசி?
புழுத்த புழுங்கல் அரிசி!

- கிலோவுக்கு எத்தனை கிராம்?
950 என்றான் அம்பி!
ஏன்?
ரேஷனில் தரும்
ஒரு கிலோ சர்க்கரை
அவ்வளவுதானே
இருக்கிறது!

- சராசரி இந்தியன்
வாழ்நாளில் பாதியை
தூக்கத்தில் கழிப்பான்
என்றார் ஓர் அன்பர்!
மறு பாதியை
ரேஷன் க்யூவில்
கழிக்கிறான்
என்றார் ஓர் வம்பர்!

விஞ்ஞானம்



வாழ்க்கையில்

திருவள்ளுவர் தமது திருக்குறளை அறத்துப் பால், பொருட் பால் இன்பத்துப் பால் என மூன்று வகைகளாப் பிரித்தது போலவே, வேதி வல்லுநர்களும் கெமிஸ்ட்ரியை ஆர்கானிக், (Organic) இன்ஆர்கானிக் (Inorganic) ஃபிஸிகல் (Physical) என முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர்.

ஆர்கானிக் என்பது கார்பன் (கரிமம்) மற்றும் அதனைச் சேர்ந்த கூட்டுப் பொருட்களைப் பற்றியது. இன்ஆர்கானிக் என்பது கரிமம் அல்லாத மற்ற எல்லா தனிமங்களையும் பற்றியது. ஃபிஸிகல் என்பது பௌதிகத்தோடு தொடர்பு கொண்ட ரசாயனத்தைப் பற்றியது.

இந்த முப்பிரிவுகளின் தற்கால வளர்ச்சியினாலும் கண்டு பிடிப்புகளாலும் விளைந்த ஒட்டு மொத்தப் பயன்களையே, நாம் வாழ்க்கையில் பல்வேறு விதங்களில் அனுபவிக்கிறோம்.

நம் உடம்பையே எடுத்துக் கொள்வோம். பல் உறுதியின்றி ஆடினாலோ, நகங்கள் சொத்தைப் பட்டுப் போனாலோ, அல்லது எலும்பு பலமிழந்து எதிராளியினால் எளிதில் எண்ணப் பட நேர்ந்தாலோ, டாக்டரினால் கால்ஷியம் சத்துக் குறைவு எனக் கூறப்பட்டு கால்ஷியம் மாத்திரைகளை விழுங்குகிறோம். கீரை, காய்கறி வகைகளை அதிகமாக உணவில் சேர்த்துக் கொள்கிறோம். அதே போல் இரும்புச் சத்துக் குறைந்தால், இரும்புச் சத்தை அளிக்கும் டானிக்.

மிக முக்கிய உறுப்பானதும், நமது உடல் வளர்ச்சி, மற்றும் உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்தும் தைராய்டு சுரப்பியின்வளர்ச்சிக்கும் அது சரிவர இயங்குவதற்கும் 'அயோடின்' சத்து மிகவும் அவசியம். இத்தனிமங்களை நாம் மறைமுகமாக உணவில் சேர்த்து உட்கொள்கிறோம். இத்தகைய ரசாயனத் தனிமங்கள் போதிய அளவு நமது உடலில் இல்லாவிட்டால் ஏற்படும் துன்பங்கள் அதிகம். நமது இரைப்பையில் சுரக்கும் நீர்த்த ஹைட்ரோ குளோரிக் அமிலம், நாம் சாப்பிடும் உணவுப் பொருட்களைச் சற்றே புளிக்கச் செய்து, அமிலத்தன்மையாக்கி எளிதில் செரிக்கச் செய்கிறது. மேலும் சிறுநீரகம், அங்கு வரும் ரத்தத்திலிருந்து யூரியா, அம்மோனியா, சோடியம் குளோரைடு போன்ற கழிவுப் பொருட்களைப் பல நுண்ணிய குழாய்களின் மூலம் பிரித்தெடுத்து,சிறுநீரோடு சேர்த்து வெளியேற்றுகிறது. இங்கு ரத்தம் தூய்மைப்படுத்தப் படுகிறது. இங்கும் ரசாயன மாற்றங்கள் நடக்கத்தான் செய்கின்றன.

உடம்புக்குள் நடைபெறுவன இருக்கட்டும். இந்த உடம்புக்காக எத்தனை எத்தனை பொருள்களை ரசாயனச் சேர்க்கையில் தயாரிக்கிறோம்!

ஜவுளிக் கடை. காட்டன் ஷர்ட்டிங்குகளை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. பாலியெஸ்டர் துணிகளை எடுத்துப் போடச் சொல்கிறோம். நீண்ட நாள் உழைக்கக் கூடிய பாலி யஸ்டர் துணிகள் தயாரிப்பில் கெமிஸ்ட்ரி மிக அவசியமாகிறது. ஒரு கார்பாக்ஸிலிக் அமிலமும், ஒரு ஆல்கஹாலும் வேதி வினை புரிந்து, கிடைப்பது எஸ்டர் (Ester) எனும் புதிய பொருள். இது ஒரு மானோமர் (Monomer Singleunit) எனக் கொள்வோம். இவ்வாறு பல ஆயிரக்கணக்கான, மானோமர்கள் பாலிமரைசேஷன் (Polymerisation) எனும் இராசயன நிகழ்ச்சியின் மூலம் ஒருபாலிமரை (Polymer) உண்டாக்குகின்றன. எஸ்டர் பாலிமரைசேஷன் மூலம் கிடைப்பது பாலியெஸ்டர். அவ்வாறே எதிலின் பாலிமரைசேஷன் மூலம் பாலிதீன (Polythene) கொடுக்கிறது. ஆக, நாம் ஆரம்பத்தில் எடுத்துக் கொண்ட பொருளுக்கேற்ப நைலான், டெக்ரான் போன்ற பளபளப்பான பட்டுப் போன்ற நுண்ணிழைகள் கிடைத்து விடுகின்றன. இழைகள் நெய்யப்பட்டு, நம்விருப்பத்துக்கேற்ற துணிகளாகின்றன.

கண்ணைக் கவரும் பல வண்ண நிறங்களையுடைய ஆடைகளை உருவாக்கத் தேவையான சாயங்களும் (Dye) இராசயனப்-பொருட்களிலிருந்துதான் தயாரிக்கப்படுகின்றன. உதாரணமாக அனிலின் மஞ்சள், மெத்தில் ஆரஞ்சு, மாலக்கைட் பச்சை, பிஸ்மார்க் பிரவுன், கிரிஸ்டல் வயலட், ஃப்ளுரஸின் போன்ற பல புதிய நிறங்களுடைய

சாயங்கள், ரசாயனப் பொருட்களின் சேர்க்கையினால் கிடைப்பவைதாம்.

'வீட்டைக் கட்டிப்பார், கல்யாணம் பண்ணிப் பார்!' என்று சும்மாவா சொன்னார்கள்? வீட்டைக் கட்டுவதற்கு மிகவும் அத்தியாவசியமான சிமெண்டை 'பிளாக்'கிலேயாவது வாங்கி, நம் தேவையைப் பூர்த்தி செய்து கொள்கிறோம்.

இப்படிப்பட்ட சிமெண்டைப் பெருமளவில் தொழிற்சாலைகளில் தயாரிக்கத் தேவையான மூலப் பொருட்கள் இரண்டு: சாதாரண சுண்ணாம்புக் கல், மணல் (சிலிகா) அல்லது களிமண். சுண்ணாம்புக் கல்லிலிருந்து பெறப்படுவது கால்ஷியம் ஆக்ஸைடு (Cao) எனும் ரஸாயனப் பொருள். களிமண்ணிலிருந்து சிமெண்ட் தயாரிக்கத் தேவையான அலுமினா எனும் பொருள் கிடைக்கின்றது.

இந்த முக்கிய மூலப் பொருட்கள் தகுந்த விகிதத்தில் கலக்கப்பட்டு, மிகப் பொடியாக அரைக்கப்பட்டு, சிமெண்ட் தயாரிக்கப்படுகிறது.

அழுக்குப் போகக் குளிக்க வேண்டுமா? இதோ சோப் தயாராகிறது: தாவர அல்லது கொழுப்பு எண்ணெய்களோடு சோடியம் அல்லது பொட்டாஷியம் ஹைட்ராக்ஸைடு கரைசலைச் சேர்த்து நீராவியைச் செலுத்தி, நன்கு சூடேற்றி, பிறகு கொதிக்க வைப்பதால் சோப்பு மேற் பகுதியில் நுரைத்துக்கொண்டு வரும். இது மறுபடியும், தனியே பிரித்தெடுக்கப்பட்டு, சிறிது காரக் கரைசல் சேர்க்கப்பட்டு, கொதிக்க வைக்கப்பட்டு, பின் குளிரவைக்கப்பட்டு, கெட்டியான, சோப்புக் கட்டிகள் வெட்டிப் பெறப்படுகிறது. சோப்பு நுரைக் கலவையாயுள்ள நிலையில், நிறம் மற்றும் வாசனைத் திரவியங்கள் சேர்க்கப்பட்டு விட்டால் குளியல் சோப் ரெடி.

அழுக்குத் துணிகளை வெளுக்கும் தற்கால டிடர்ஜெண்ட் கேக்குகள் உருவாகும் முறை சற்று வித்தியாசமானது. இதனுடைய மூலப் பொருள் லாரைல் ஆல்கஹால் எனும் பொருளும், மற்றும் காரக் கரைசலும். அதோடு நன்கு நுரை வருவதற்காக ஃபோம் பூஸ்டர் மற்றும் பல சில்லறைப் பொருட்கள் சேர்க்கப்பட்டு டிடர்ஜண்ட் கட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பெண்மணிகள் அன்றாடம் தம் மேனி யழகைப் பார்க்க உதவும் நிலைக் கண்ணாடி முதல் லைஃப்டி கிளாஸ் வரை பல்வேறு வகையான கண்ணாடிகள் தயாரிப்பதில் ரசாயன மூலப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

நமக்கு உணவைத் தரும் தாவரங்களின் செழிப்பான வளர்ச்சிக்குத் தேவையான NPK (நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாஷ்) சத்துக்களை அளிக்கும் உரங்களைச் சிறந்த முறையில் தயாரிக்க உதவுவது, ரசாயனப் பொருட்கள்தான்.


யூரியா, அம்மோனியம் சல்பேட், பொட்டாஷியம் குளோரைடு, கால்ஷியம் சூப்பர் பாஸ்பேட் மற்றும் பலவகையான இரசாயன உரங்களைத்தயாரித்தலில் கெமிஸ்ட்ரி முக்கிய பங்கு வகிக்கிறது.

நம் உடல் நோயுறும்போது, குணப்படுத்துவதற்குத் தேவையான உயிர் காக்கும் மருந்துகளைத் தயாரிப்பதில் ரசாயனமும், அதன் கண்டு பிடிப்புகளும் மிக முக்கியமான பங்கை ஆற்றுகின்றன. சாதாரண தலைவலி, ஜுரத்துக்குத் தேவைப்படும் ஆஸ்பிரின் முதல் டெட்ராசைக்கிளின்கள், கொடுமையான புற்று நோயைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் வரை பல வகையான மருந்துகளைத் தயாரிக்க இராசயனப் பொருட்கள் தேவைப்படுகின்றன.

இத்தகைய மிகப் பரந்து விரிந்த பயனளிக்கும் துறையான இரசாயனம் எனும் பெருங்கடலில் நான் பயின்றுள்ளது சிறிதளவுதான்; மேலும் மேலும் அதனைக் கற்க விரும்புகிறேன்.

- எஸ். ரவி

விஞ்ஞானப் பக்கங்கள்



ரேடியோ அறிவிப்பாளர் : கொஞ்ச நாளா ''ஆல் இந்தியா ரேடியோ, ஆகாஷ் வாணி — ஆகாஷ்வாணி, ஆல் இந்தியா ரேடியோ இப்படி மாத்தி,மாத்தி அறிவிக்கச் சொன்னதுனால ஒரே குழப்பமாயி...

நண்பர் : என்ன ஆச்சு?

ரே. அ : நேத்து ''ஆகாஷ் ரேடியோ'' ன்னு அறிவிச்சிட்டேன்.

— எஸ். வனஜா



மாதம் ஒரு புத்தகம்

புத்தக வெளியீட்டில் வெள்ளி விழாக் கண்டு தனிச் சிறப்பும் பெற்ற வானதி மே மாதம் வெளியிட்ட இரண்டு குறிப்பிடத்தக்க புத்தகங்கள் (1) தெய்வத்தின் குரல் (பாகம் மூன்று) (2) தவம் - கிருபானந்தவாரியார்.

அமுதமாகப் பொழியும் காஞ்சிப் பெரியவர்களின் அருள்வாக்கையும் வாரியார் சுவாமிகளின் புத்தகத்தையும் நமது விமரிசனத்துக்கு அப்பாற்பட்டவை என்று ஒதுக்கிவிட்டு மற்ற புத்தகங்களைப் படித்துப் பார்த்தால் மா. சங்கரனின் 'வெற்றிச் சட்டங்கள்' விசேஷ கவனத்தைக் கவர்ந்து, பேனா-பால் பாயிண்ட் செட் பரிசையும் அவருக்குப் பெற்றுத் தருகிறது.

'செல்ஃப் இம்ப்ரூவ்மெண்ட்' புத்தகங்கள் தமிழில் பல வெளிவந்துள்ளன. தமிழ்வாணன், பி.சி. கணேசன், எம். எஸ். உதயமூர்த்தி போன்ற பலர் எழுதியிருக்கிறார்கள். ஆனால் மா. சங்கரன் எழுதிய 'வெற்றிச் சட்டங்கள்' தனி ரகம். அதி வீர ராம பாண்டியன், நன்னூல், ச.து.சு. யோகி, கன்பூசியஸ் போன்ற பல அறிஞர்கள், புத்தகங்கள் இவற்றிலிருந்து பொன்மொழிகளை ஆங்காங்கே நிரப்பி, வாழ்க்கையில் முன்னேற வழி வகுத்திருக்கிறார்.

''வேலை என்பது நம் கைக்குள் வந்து விழும் மந்திரக்காயல்ல. சிலருக்கு அதிர்ஷ்டம் இருக்கலாம். அது நமக்கில்லையே என்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். அதிர்ஷ்டத்தால் முன்னேறுபவன்; துரதிர்ஷ்டத்தால் என்றேனும் விழாமல் இருக்க மாட்டானா?''

சரி; ஒரு வேலை கிடைக்கிறதென வைத்துக் கொள்வோம். அவ்வேலையில் முன்னுக்கு வர முக்கியமான வழி எது?

''ஆர்வ உணர்வு. நீங்கள் வேலை செய்யும் போது குஷியோடு இருக்கிறீர்களே அது தான் ஆர்வம் என்பது. அந்த ஆர்வம் நீங்கள் செய்யும் எப்பணியோடும் இணைந்து விட்டால் அப்பணி உங்களுக்கு 'போர்' அடிக்காது.''

பல தலைப்புக்களில் ஓரளவு தெளிவாக நெருடவில்லாமல் எழுதியிருக்கும் ஆசிரியர், நடு நடுவே 'மீரூட்சி மைந்தன்' கவிதைகளை(?)ப் புகுத்தியிருக்கிறார். யார் அவர்?

கடைசியாக ஒன்று. மனிதர்களுக்கு நகைச்சுவை உணர்வு அவசியம் என்பதை வலியுறுத்தி, நகைச்சுவையில் உள்ள பல்வேறு வகைகளை அனுபந்தம் மாதிரி கடைசியில் பிரித்துக் காட்டியிருக்கிறார். புதிதாகத் தமிழ் நாடகம் போடுபவர்களுக்கு வசதியாயிருக்கும்!

'வெற்றிச் சட்டங்கள்' — மா. சங்கரன் ஸ்ரீ வித்யா பதிப்பகம், கோவை—11.

•

மே மாதம் பிரசுரமாகிப் பார்வைக்கு வந்த பிற புத்தகங்கள்:

(1) கலியுகக் குற்றங்கள் விலை ரூ. 4. சோலை. சு. சுந்தரப்பெருமாள்; கமலம் பதிப்பகம், அம்மையப்பன், தஞ்சை மாவட்டம்: 613701.

(2) நோய் விளக்கம் — டாக்டர் எஸ். சிதம்பர தாணுப் பிள்ளை, சித்த மருத்துவ நூல் ஆராய்ச்சி நிலையம், இ-32, அண்ணா நகர் (கிழக்கு), சென்னை-102. விலை ரூ. 20.

(3) வயலூர் அறுபது — திருச்சி பாரதன்; விலை ரூ. 1. ஆஸ்திக சேவா சமிதி, 7, இரட்டைமால் தெரு, திருச்சி-2

-வாதூலன்

24

மூதலில் மௌனத்தைக்கலைத்தவர் முத்தரையர். ''திவாகரா! நிதானித்துப் பேசு! சிந்திய எள்ளைக்கூடத் திரட்டி விடலாம். சொல்லைப் பொறுக்க முடியுமா?'' என்றார்.

''எள்ளும் கொள்ளும் மட்டுமல்ல வாய்ப்பிருந்தால் நெல்லும் கம்பும்கூட திரட்டி மூட்டை கட்டிக் கொண்டு போய் விடுவார்கள் இவர்கள்! பாண்டி நாட்டிலிருந்து புலவர்கள் என்றதுமே சந்தேகித்தேன். உறுதியாகிவிட்டது!''

''என்ன சந்தேகித்தாய்? என்ன உறுதிப்பட்டது?''

''புலவர்களுக்கு அரண்மனையில் காரியம் இருக்கலாம். அங்காடியில் என்ன வேலை? நமது வணிகர்கள் பலரிடம் தானியங்கள் கையிருப்பு பற்றியும் விலைவாசிகள் குறித்தும் விசாரிப்பானேன்? மன்னர் உத்தரவிட்டால் எத்தனை நாட்களில் எத்தனை மூட்டை நெல் சேகரித்துத் தர முடியும் என்று கேட்பானேன்? நமது களஞ்சியங்களின் முத்திராதிகாரியிடம் பேச்சுக் கொடுத்துச் சேமிப்பில் உள்ள தானியங்கள் பற்றி விவரமறிய முயல்வானேன்?''

''மாணிக்கப் புலவரே! உண்மையா இது?'' கர்ஜித்தார் முத்தரையர்.

''உண்மைதான் மன்னவா'' என்று ஒப்புக்கொண்டாலும் புலவனின் தலை தாழவில்லை. முத்தரையரை நேருக்கு நேராகவே பார்த்து, ''இப்படிப் பகிரங்கமாக விசாரித்தோம் என்பதிலிருந்தே நாங்கள் ஒற்றர்கள் இல்லை என்பது தங்களுக்குப் புரியவில்லையா? ஒற்றர்களாயின் திவாகரனிடம் இப்படி எளிதாக மாட்டிக் கொள்கிற மாதிரியா நடந்துகொள்வோம்?''

''ஆகா! இவன் சாமானிய ஒற்றனல்ல. பலே கைகாரன்! அகப்பட்டுக் கொண்டு விட்டதால் அசடனாக நடித்தே தப்பிக்கப் பார்க்கிறான்'' என்று சீறினான் திவாகரன்.

இதனிடையில் தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்ட அராபியனும் ஜெயசிங்கனும் ஓரடி முன்னால் வந்தனர். ''மன்னவா! நாங்கள் இனியும் இங்கிருப்பது....'' என்று இழுத்தான் ஜெயசிங்கன். ''ஒருவேளை விசாரணையை நீங்கள் அந்தரங்கமாக நடத்த விரும்பலாம்?''

சுற்று முற்றும் பார்த்தார் மன்னர். இசைக்கலைஞர்கள் இதற்குள் எழுந்து வணங்கிச் சென்றுவிட்டிருந்தனர். மன்னரின் நெருங்கிய அன்பர்கள் மட்டுமே கட்டளைக்குக் காத்திருந்தனர்.

''இதில் ரகசியம் என்ன வேண்டிக் கிடக்கிறது? இவர்கள் ஒற்றர்கள் என நிரூபணமானால் தண்டனை பெறப் போகிறார்கள். இல்லையேல் பரிசில்களுடன் திரும்பப் போகிறார்கள், இவ்வளவுதானே?''

''பிரபோ, விசாரணை பகிரங்கமாகவா, இரகசியமாகவா, எப்படி நடக்க வேண்டும் என்று நிர்ணயிக்கும் உரிமையைக் குற்றம் சாட்டப்பட்டு நிற்பவனுக்கு அளிப்பதே தர்மம்'' என்றான் மாணிக்கம். ''நாங்கள் தனிமையில் தங்களுடன் பேசவே விரும்புகிறோம்.'' கணமும் தாமதியாமல் ''கோரிக்கையை ஏற்றேன்'' என்று அறிவித்தார் மன்னர்.

''பெரியப்பா'' என்று கலவரத்துடன் அவரை நெருங்கினாள் உத்தமசீலி. ''அரச தர்மம் அனுமதிக்கலாம். ஆனால் அரசனுடைய பாதுகாப்பையும் கவனிக்க வேண்டுமல்லவா? இவர்களோ ஒற்றர்கள் எனக் குற்றம் சாட்டப்பெற்று நிற்பவர்கள். இவர்களால் தங்களுக்கு ஆபத்து நேராது என்பது என்ன நிச்சயம்? தங்களையும் திவாகரனையும் தவிர இன்னும் சிலரையாவது உடன் வைத்துக் கொள்ளுங்கள்.''

''அந்தச் சிலரையும் இவர்களே தேர்ந்தெடுக்கட்டும்'' என்றார் முத்தரையர்.

''இந்த அராபியன் அன்னியன், .மொழி அறியாதவன், இவனை ஏற்கிறேன்'' என்றான் வாசகன்.

''ஜெயசிங்கன் வணிகன். நாங்கள் வணிகர்களைச் சந்தித்துப் பேசியதாகத்தானே குற்றச்சாட்டு. முத்தரையர் ஆட்சியில் மிகப் பெரிய வணிகனான இவர் உடன் இருக்கட்டும்'' என்றான் மாணிக்கம்.

ரவிகுல திலகன்

செம்பியன்

''தங்கள் உத்தர அமைச்சரைத் தாங்கள் கலந்தாலோசிக்க விரும்பலாம். உத்தமசீலி இருப்பதிலும் தடையில்லை'' என்றான் வாசகன்.

மற்றவர் மன்னரை வணங்கி விடை பெறவும், அவர் புலவர்கள் பக்கம் திரும்பி, ''திவாகரனின் குற்றச்சாட்டுக்கு உங்கள் பதில்?'' என்று வினவினார்.

வாசகன் ஓரடி முன்வந்து, ''மன்னவா! எங்களை ஒற்றர்கள் என்று திவாகரன் குறிப்பிட்டான். ஒற்றர் என்பதை விடத் தூதர் என்பது பொருந்தும்'' என்றான்.

''தூதர்கள் மாறுவேடத்தில் வந்ததாக நான் கேள்விப்பட்டதில்லை'' என்று ஏளனமாய்க் கூறி நகைத்தான் திவாகரன்.

''இன்றுதான் கேள்விப்படுகிறாயே'' என்றார் முத்தரையர் சற்றே எரிச்சலை வெளிக்காட்டி.

''அன்னை புரியவில்லையா?'' என வினவினாள் உத்தமசீலி. ''இவர்கள் பாண்டிய நாட்டிலிருந்து வந்தவர்கள். பல்லவருக்கும் பாண்டியருக்கும் இடையில் ஜன்மப் பகை. நாமோ பல்லவர்களின் மேலாதிக்கத்தை ஏற்றவர்கள். தூதர்கள் எனப் பகிரங்க

மாக வந்தால் அவர்கள் நம் மன்னருடன் பேசும்போது பல்லவ மாதண்ட நாயகர் தாம் உடனிருக்க வேண்டும் என்று நிபந்தனை விதிப்பார். எனவே இத்தூதர்கள் பாண்டிய சக்கரவர்த்தியிடமிருந்து ரகசியச் செய்தி கொணர்ந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது!''

''தங்கள் கலை ஆற்றலைப் போலவே அறிவாற்றலும் பிரகாசிக்கிறது!'' என்றான் வாசகன்.

''ஒற்றர் அல்ல தூதர்தான் என்றால் அதற்குஅத்தாட்சி?'' என்றுதிவாகரன்வினவ,


மிகப் பெரிய முத்துக்கள் கோத்த மாலையொன்றை இடைக்கச்சிலிருந்து எடுத்துக் காட்டினான் வாசகன். ''மன்னவா! இந்த அளவினதான முத்துக்கள் அங்காடிக்கு வரவே பாண்டிய மன்னர்கள்சம்மதிக்கமாட்டார்கள் என்பதைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். ஒன்று அவர் கழுத்தை அலங்கரிக்கும் அல்லது அவர்கள் கருவூலத்தில் காக்கப்படும்.''

ஒளிர்கின்ற அந்தப் பருத்த நல் முத்துக்களைக் காண அனைவர்கண்களும் ஆச்சரியத்தில் மலர,

''இதை அணியத் தகுதிபெற்றவன் நான்'' எனக் கூறியவாறே வாசகன் முத்து மாலையைச் சூடிக் கொண்டான். ஆஹாகாரங்கள் அடங்கு முன்னரே தமது ஆசனத்தை விட்டெழுந்த முத்தரையர் ''வரகுணனா?'' எனக் கரம் கூப்பி வினவியவாறு நெருங்கி வந்தார். ''சக்கரவர்த்தி திருமகனே! அமருங்கள்'' என்று உரிய மரியாதை செலுத்தி, அரியாசனத்தைத் துறந்து சம ஆசனத்தில் தாமும் அமர்ந்தார். மாணிக்கப் புலவரும் இடைக் கச்சில் பத்திரப்படுத்தி இருந்த கயல் இலச்சினை ஒன்றை எடுத்துக் காட்டிவிட்டு உட்கார்ந்தார்.

''சக்கரவர்த்தி நலமா?'' என்று குசலம் விசாரித்தார் முத்தரையர்.

''நலம்தான் மன்னவா. அவர் தங்கள் நலனையும் விரும்புகிறார். அதனால்தான் என்னையே தூது அனுப்பினார்'' என்றான் வரகுணன்.



''பல்லவப் பேரரசின் கீழ் என் நலனுக்கு ஒரு குறையுமில்லை'' என்றார் முத்தரையர்.

''பல்லவருக்குத் திரை செலுத்திவாழ்பவர் உடல் நலம் சரியாக இருந்தாலும் மன நலம் சற்றேனும் பாதிக்கப் பட்டுத்தானே இருக்கும்?''

''நான் மறுக்கவும் முடியாத, ஆமோதிக்கவும் முடியாத கேள்வியைப் போடுகிறீர்களே!'' என்று கூறிச் சிரித்தார் முத்தரையர்.

''தங்கள் தர்ம சங்கடம் எனக்குப் புரிகிறது. தந்தையாருக்கும் ஓர் இக்கட்டான நிலை.''

''இரு தர்மசங்கடங்களும்சந்திக்கின்றன!'' என்று கூறி மீண்டும் நகைத்தார்முத்தரையர்.

''இரண்டு தர்ம சங்கடங்களுக்கும் தீர்வு காணவே எங்களது இந்தத் தூது!''

உத்தமசீலியும் மென் நகை புரிந்துவெள்ளி மணி நாதம் எழுப்ப, அராபியன் புரியாதது போல் நடித்து ஜெயசிங்கன் உதவியை நாட, திவாகரனின் கடுகடுப்பு மட்டும் மாறாதிருந்தது.

வரகுணன் தான் வந்த நோக்கத்தை விளக்கினான். சென்ற ஆண்டு பருவ மழை பொய்த்ததால் பாண்டி நாட்டில்விளைச்சல் பாதிக்கப் பட்டதையும் இவ்வாண்டு அறுவடை முடிந்து மீண்டும் தானியக் களஞ்சியங்கள் நிரம்பும் வரைஇருக்கின்ற உணவுப்பொருளைஎவ்வளவு தான் சிறப்பாக நிர்வகித்தாலும் போதாது எனத் தோன்றுவதாகவும் நாற்படைகள் தவிர, கப்பல் படைக்கும் பாண்டியச் சக்கரவர்த்தி உணவளித்து ஆரோக்கிய நிலையில் வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதையும் சாங்கோபாங்கமாக எடுத்துரைத்தான்.

கவனமாகக் கேட்டுத் தலையாட்டினார் முத்தரையர். ''உணவு அனுப்பி உதவ வேண்டும் என்று சக்கரவர்த்தி ஸ்ரீமாறன் கோருகிறாராக்கும்? அதற்குப் பதிலாக....?''

''தங்களுக்கும் தங்கள் நாட்டுக்கும் பூரண சுதந்திரத்தை உறுதிப்படுத்துகிறார். பல்லவரின் வீழ்ச்சிக் காலம் தொடங்கிவிட்டதென்பதில் அவருக்கு ஐயம் சிறிதும் இல்லை. பாண்டியப் பேரரசு காஞ்சியைக் கடந்து வடபெண்ணை வரை விரிவாக்கம் பெறும் போது முத்தரையரின்இன்றைய உதவிநினைவிலிருக்கும்!''

''குறுநில மன்னனாயினும் சுதந்திர அரசனாய் இருப்பது பெருமைதான்...'' என்று கனத்த மீசையைப் புற விரல்களால் ஒதுக்கி விட்டுக் கொண்ட முத்தரையர், ''அமைச்சரே! தங்கள் எண்ணத்தை இறுதியில் கேட்டறிவேன். ஜெயசிங்கனும் இந்த அராபியனும் ஏதோ கருத்துப் பரிமாறிக் கொள்கிறார்களே, அதை முதலில் தெரிந்து கொள்வோம்'' என்றார்.

ஜெயசிங்கன் எழுந்து நின்று வணங்கிக் கூறுவான்: ''பிரபோ! தங்கள் முடிவு எதுவானாலும் ஏற்கக் கடமைப்பட்டவன் நான். இவர்கள் என்னை இங்கே இருக்க அனுமதித்த தன் நோக்கமும் எனக்குப் புரிகிறது. முத்தரையர், பௌர்ணமியாகிய இன்றைக்கு உத்தரவிட்டால் அமாவாசைக்குள் பொன்னிப் பாசனத்தில் விளைந்த நவமணிகளையும் நிர்ணயித்த அளவில் கடல்மாநகர் கொண்டு சேர்ப்பேன். எனக்கு இந்த வியாபாரத்தில் ஆதாயமும் உண்டு. ஆனால் பல்லவச் சக்கரவர்த்திக்கு இது தெரிய வந்தால்...?''

''தெரியவராமல் செயல்படுங்கள்! உமது திறமையில் நம்பிக்கை வைக்கிறேன்!''—வரகுணன் இடைமறித்தான்.

''நீங்கள்வைக்கும் நம்பிக்கைக்காகநானும் நன்றி செலுத்துகிறேன். ஆனால் சுலபமான காரியமா இது? சிறிய பொருளா கண் காணாமல் கடத்திச் செல்ல? வண்டி வண்டியாக உணவு தானிய மூட்டைகள் பல்லாயிரக் கணக்கில்....''

''அந்தப் பிரச்னையைப் பின்னால் கவனிப்போம். முதலில் தார்மீகப் பிரச்னைக்கு முடிவு காண்போம்'' என்றார் உத்தர அமைச்சர்.

''உனது அராபிய நண்பன் என்ன சொல்கிறான்?'' என்றார் முத்தரையர்.

''அவன் கருத்தையும் சேர்த்துத்தான் நான் பிரதிபலிக்கிறேன் பிரபோ! நானே பாண்டியர் வெற்றி பெறுவர் என்று நம்பிக் கொண்டு இன்று பல்லவருக்குத் துரோகம் இழைப்பது விவேகமில்லை.''

''பெரியப்பா! இந்தக் கோழைகளின் பேச்சைக் கேட்காதீர்கள்'' என்றான் திவாகரன். ''இந்த அராபியனுக்கென்ன இன்று காலை நீங்களே குறிப்பிட்டது போல் 'நாளையே கப்பலேறப் போகிறவன்'. நம் பிரச்னைகள் அவனுக்குப் புரியாது. ஈடுபாடும் இராது. நமது கிடங்குகளில் ஏராளமான உணவு

தானியங்கள் புழுத்துப் போய்க் கொண்டிருக்கின்றன. விற்றுக் காசாக்க முடியுமெனில் கிடைக்கின்ற லாபம் ஜெயசிங்கனுக்கு ஒரு பொருட்டாக இல்லாதிருக்கலாம். பகை வளர்க்கும் அரசர்களுக்குக் குதிரைகளை விற்றே அவன் செல்வம் குவித்து விடுவான். ஆனால் மன்னர் குடிமக்களின் நலனைக் கவனிக்க வேண்டும். இந்த வியாபாரத்தால் நமது விவசாயிகளுக்கு ஆதாயம். தங்கள் கருவறைக்கும் வருமானம். நாளை பாண்டியர் கை ஓங்கினால் நமக்கு நற்பெயர் என்பதோடு விலைமதிக்க முடியாத சுதந்திரமும் கிட்டும். பல்லவர் வென்றிடிலோ நமக்கு இழப்பு ஏதுமில்லை!''

''அதாவது இந்த வாணிபம் பற்றிய தகவல் பல்லவேந்திரருக்கு எட்டாதவரையில்!'' என்றாள் உத்தமசீலி.

''ஆபத்து எங்கும் எதிலும்தான் இருக்கிறது'' என்று வாதாடினான் திவாகரன். ''ஒரு நல்ல காரியம் நடக்க ஓரளவு துணியத்தான் வேண்டும்!''

''அமைச்சரே!'' என்று விளித்துப் பேச அழைத்தார் முத்தரையர்.

''மன்னவா! இறுதி முடிவு எடுக்க வேண்டியவர்கள் தாங்கள். ஆனால் நானென்னவோ ஜெயசிங்கன் கட்சிதான்!''

''தொடை நடுங்கிகள்!'' என உரக்கவே கூறிச் சிரித்தான் திவாகரன்.

''என் முடிவை நாளைக் காலை கூறுகிறேன். இந்த ஒற்றர்களைப் பாதாளச் சிறையில் அடையுங்கள்!'' என்ற முத்தரையர், இளவலை நோக்கி பணிவுடன் தொடர்ந்தார்: ''வரகுணா! உன்னையும் உனது தோழனையும் இரு தினங்களேனும் சிறை வைத்திருந்து பின்னர் ரகசியமாகத்தான் விடுவிக்க வேண்டும். வெளிப் பார்வைக்கு இது அவசியமாகிறது.''

''புரிகிறது முத்தரையரே! இங்கு விசாரணை நடந்து நாங்கள் ஒற்றர்கள் என்றே கருதப்பட்டுச் சிறையில் தள்ளப்படுகிறோம்! எனது கடைசிக் கோரிக்கை இங்கு நடந்தவை நம் எண்மரைத் தவிர வேறு யாருக்கும் தெரிய வர வேண்டாம் என்பதுதான்.''

அந்தஉறுதிமொழியை அனைவரும் அளித்த பின் திவாகரன், ''யார் அங்கே!'' என்று அதட்டலாக அழைக்கவும், காவலர் வந்து ஒற்றர்கள் கரங்களில் விலங்கிட்டு இழுத்துச் சென்றனர்.

''மன்னவா! உல்லாசமான மாலைப் போது உங்களுக்கு உறக்கமற்ற இரவாக மாறப் போவதை உணர்கிறேன். தங்கள் முடிவு எதுவானாலும் நிறைவேற்றக் காத்திருக்கிறேன். இப்போது உங்களைச் சிந்திக்க விட்டு நாங்கள் விடைபெறுவதே நல்லதென்று எண்ணுகிறேன்'' என்றான் ஜெயசிங்கன்.

''நல்லது. நாளைச் சந்திப்போம்'' என்று முத்தரையர் மொழிந்தபோது அவரது குரலின் கனமே மனப்பாரத்தைப்புரியவைத்தது.

கலக்கமுற்றிருந்த உத்தமசீலிக்குத்தைரியம் கூறி, திவாகரனையும் மதித்து வணங்கி விடைபெறுவது போல் காட்டிக் கொண்டு பின்னர் விடுதிக்குத் திரும்பிய நண்பர்கள் தனிமை உறுதிப்பட்டதும் உரக்கச்சிரித்துமகிழ்ந்தனர்.

''ஒற்றர்களோடு என்ன சல்லாபம்? என்று கேட்டுக் கொண்டு திவாகரன் கலா மண்டபத்துக்குள் நுழைந்தபோது ரொம்பக் கலக்கமாகத்தான் இருந்தது'' என்றான் விஜயாலயன். ''எப்படி இவர்களிடமிருந்து தப்பிப் பழையாறைக்குத் திரும்பப் போகிறோம் என்று யோசிக்க ஆரம்பித்து விட்டேன்!''

'' 'பல்லவேந்திரரை விரோதித்துக்கொள்ளக்கூடாது' என்று வாதாடுமாறு எனக்கு நீங்கள் யோசனை கூறவும் எனக்குக் குழப்பமாகி விட்டது. திவாகரனின் மன இயல் பறிந்து எதிர்மறையாகப் பேசச் சொன்னீர்கள் என்பதை அவன் வரகுணனுக்கு ஆதரவாக வாதாட ஆரம்பித்ததும்தான் புரிந்து கொண்டேன்!''

''நாளை பொழுது விடிவதற்குள் திவாகரன் தன் பெரியப்பாவை வற்புறுத்தித் தன் எண்ணத்தைச் சாதித்துக் கொள்வான்; என் திட்டம் வெற்றி பெறும், நிச்சயம்'' என்றான் விஜயாலயன்.


''பிரபோ! தாங்கள் மாறு வேடத்தில் இங்கு அதிக நாள் தங்குவது ஆபத்து. பல்லவேந்திரர் முத்தரையர் மீது சினம் கொள்ள வழி வகுத்து விட்டீர்கள். தாங்கள் வந்த காரியம் முடிந்தது. இனி திரும்பலாமில்லையா?'' என்று கேட்டான் ஜெயசிங்கன்.

'' முடிந்ததாவது? இப்போதுதானே ஆரம்பமாகியிருக்கிறது!'' என்று கூறிக் கட்டி

வில் விழுந்த விஜயாலயன் சிந்தனையில் ஆழ்ந்தான். சற்று நேரத்தில் திடுமென யோசனையிலிருந்து விடுபட்டு எழுந்தவனாக அப்போதுதான் குளித்து மாற்றுடை தரித்துக் கொண்டிருந்த ஜெயசிங்கனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, ''தஞ்சையில் நீ ஒரு பெரிய கலை விழா நடத்தப் போகிறாய்! அதற்குத் தலைமை தாங்கி நடத்தித் தர உத்தமசீலியை அழைக்கப் போகிறாய்!'' என்று உற்சாகம் மிகக் கூறினான்.

''ஆகா! இந்தப் புதிய திட்டத்துக்குள்ளும் உங்களுடைய இந்திர ஜாலம், தந்திர ஜாலமெல்லாம் இடம் பெற்றிருக்குமே!'' என்று பெருமூச்சுடன் ஓர் இருக்கையில் சாய்ந்தான் ஜெயசிங்கன்!

(தொடரும்)



பெயர்: எஸ். ரவி,
தகுதி: பி. எஸ் ஸி. (கெமிஸ்ட்ரி) பட்டதாரி,
வயது: இருபது.
விலாசம்:
எஸ். ரவி,
C/o வி. வி. சுப்பிரமணியன்,
26 ஸி, கால்நடை மருத்துவமனைத் தெரு,
வளவனூர், தென்ஆர்க்காடுமாவட்டம்-605108

தமது திறமைக்கேற்ற முறையிலும் உண்மையான உழைப்பு பயன்படும் வகையிலும் ஒரு வேலை அல்லது தொழில் செய்யவேண்டும், என்று ஆசைப்படும் எஸ். ரவி தாம் பயின்ற துறை பற்றி எழுதிய கட்டுரை இந்த இதழ் விஞ்ஞானப் பக்கங்கள் பகுதியில் இடம் பெறுகிறது.


-ஆசிரியர்

''இந்த ஊருக்கு வந்த புதுசிலே மேலத் தெருவிலே குடியிருந்தேன். ...அப்புறம் கொஞ்ச காலம் கீழத்தெருவிலே குடியிருந்தேன்.''

''இப்போ எங்க இருக்கீங்க?''

''நடுத் தெருவிலே!''

-பெ. கலாசாமி





● ''கல்கி வாசகர்களிடமிருந்து வந்த ஏராளமான தபால் கார்டுகளில் ஒரு பகுதி என்னிடம் தரப்பட்டது. அவற்றை நண்பர்களுடன் சேர்ந்திருந்து ஆராய்ந்தபோது அவர்கள் சில தலைப்புக்களை என்னால் படமெடுக்கவே முடியாது என்றார்கள். அப்படி அவர்களால் குறிப்பிடப்பட்ட தலைப்புக்களில் ஒன்றையே படமெடுப்பதென சவாலாக ஏற்றேன். அவ்விதம் நான் தேர்ந்தெடுத்ததுதான்: ''கனவுக்குள் கனவு!''

என்கிறார் புகைப்பட நிபுணர்
சரஸ்வதி சத்தியமூர்த்தி

இந்தத் தலைப்பை எழுதி ரூ. 10 பரிசு பெறுகிறவர்: **சா. குணசேகரன்**
24, பாலு முதலி தெரு, சென்னை-17

மேலட்டை வண்ணப் படத்தில் தோற்றமளிப்பவர்:
குமாரி மேகலா சத்தியமூர்த்தி

இண்டர்வியூவுக்குச் செல்லும் இளைஞர்களே



✖ நந்தனம் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைக்குப் பதிவு செய்யும் இளைஞரில் ஒரு பகுதி. (இங்கு சராசரியாக தினமும் 150 பேர் புதிதாய் பதிவு செய்து கொள்கிறார்கள்)

இண்டர்வியூவுக்குச் செல்லும் இளைஞர்களே யுவதிகளே! உங்களைத்தான்! ஒரு நிமிடம்! உங்களுக்குப் பயன்படும் சில டிப்ஸ்களை அளிக்கிறார்கள் தென் மண்டல பாங்கிங் சர்வீஸ் ரெக்ரூட்மெண்ட் போர்டின் தலைவரும் காரிய தரிசியும்.

- படித்த பாடங்களிலிருந்து நிச்சயம் கேள்விகள் கேட்பார்கள். எந்த வேலைக்கான இண்டர்வியூவோ அந்த வேலை பற்றி பொது அறிவைச் சோதிக்கும் வகையில் கேட்கலாம். தேசிய அளவில், அகில உலக அளவில் முக்கிய நிகழ்ச்சிகள் பற்றிக் கேட்கலாம்.

- குடும்பப் பின்னணி பற்றிக் கேட்பார்கள். ஆனால் கேட்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. கல்வி அறிவு இல்லாத குடும்பத்திலிருந்து இண்டர்வியூ அளவுக்குத் தேறும் ஒருவரை உற்சாகப்படுத்த வேண்டுமல்லவா? அதற்குத்தான் இது.

- இந்த மாதிரி உடையணிந்து செல்லவேண்டும் என்ற கட்டாயமில்லை. ஆனாலும் ஜீன்ஸ், ஜிப்பா, டீ ஷர்ட் இவற்றைத் தவிர்த்தல் நல்லது. டை கட்டாயமில்லை.

- ஆங்கிலத்தில் விடையளிப்பது வழக்கமான ஒன்று. ஒரு விஷயத்தை ஆங்கிலத்தில் சொல்ல முடியாத நிலை ஏற்பட்டால் எந்த மொழியிலும் சொல்லலாம். இது உங்களுடைய மார்க்கை அதிகம் பாதிக்காது.

- கேட்கப்படும் அத்தனை கேள்விகளில் ஒன்றிரண்டுக்கு விடை தெரியாவிட்டால் தவறில்லை. ஒட்டு மொத்த பர்ஃபாமன்ஸுக்குத் தான் மார்க் போடப்படுகிறது.

- இண்டர்வியூவுக்கு வருபவரது ஒவ்வொரு நடவடிக்கையும் கவனிக்கப்படுவதால் நகத்தைக் கடிப்பது, உதட்டைக் கடிப்பது, விரல்களை மடக்கி மடக்கிப் பிரிப்பது போன்ற செய்கைகளைத் தவிர்க்கவும்.

- ஒரு கேள்விக்கு விடை தெரியவில்லை என்றால் என்ன செய்ய வேண்டும்? பளிச்சென 'தெரியவில்லை' எனச் சொல்லிவிட வேண்டும். ஓரளவு தெரிந்தால் தெரிந்த வரை விடையளிக்கலாம். சாமர்த்தியமாய்ச் சமாளிப்பதாக நினைத்துக் கதையளப்பது பலனளிக்காது.

- Extra curricular activities, hobbies & interests' ஆகிய இடங்களில் உண்மையான விவரங்களையே தரவேண்டும். அதற்கான சர்ட்டிஃபிகேட்டுகளை மறக்காமல் எடுத்துச் செல்ல வேண்டும். (ரீடிங் எனப் போடுவது கொஞ்சம் ரிஸ்க். நீங்கள் சிக்கலுக்குள்ளாவதற்கும் வழியுண்டு).

- இண்டர்வியூவுக்குப் போகும் போது ஒரு வித உடல் நடுக்கம் இருக்கும் சிலருக்கு. இது இயற்கை. தாமாக மன தைரியத்தை வரவழைத்துக் கொள்வதன் மூலம் இதைச் சமாளிக்க முடியும். வேறு வழியில்லை.

- பொதுவாக இண்டர்வியூக்கள் பத்து நிமிடம் முதல் அரை மணி நேரம் வரை நடைபெறும்.

- தனக்கு எதைப் பற்றியும் அதிகம் தெரியும் எனக் காட்டிக் கொள்ளக் கூடாது. வீண் வம்பை விலைக்கு வாங்குவது போலத்தான் இது.

- இண்டர்வியூ அறையினுள் நுழைந்ததும், 'வணக்கம்' சொல்வது; அவர்கள் அமரச் சொன்ன பின் அமருவது, விடைபெறும்போது 'நன்றி' சொல்வது, தெளிவான குரலில் நிதானமாய்ப் பேசுவது இவை ப்ளஸ்பாயிண்ட்களாய் அமையும்.

- இண்டர்வியூவுக்குச் செல்லுகையில் Current topic of interest செய்திகளைப் படித்தறிவது மிகவும் நல்லது. இண்டர்வியூ தினத்தன்று நியூஸ் பேப்பரை ஆழ்ந்து படிப்பது மிகவும் அவசியம்.

தகவல் தொகுப்பு : எஸ். சந்திரமௌலி
புகைப்படம்: ரமணி



சினிமா சினிமா



புர்...புர்...விர்...விர்...
பறந்தது மோட்டார் சைக்கிள்
விழுப்புரம் வரை
வாங்கினார் பரிசு ரஜினிகாந்த்.
கொடுத்தவர் கோமேஸ்வரி உமா (ஜோதி)
பரிசு மட்டுமா?
'கருப்பன்' என்கிற பட்டமும்
அதனால் வந்தது மோதல்
மோதலில் பிறந்தது காதல்
புர்...புர்...விர்...விர்...
பறந்தது மோ. சை.
கோயமுத்தூரில் இருந்து ஊட்டி வரை
காதலர்கள் சந்திப்பு — ரேட்
'சிம்ம' அம்மா குறுக்கிட்டார்
கட்டாயக் கல்யாணம் காதலிக்கு
விட்டாரா தர்மபுரியை?
அங்கேயும் தொடர்ந்தது
புர்...புர்...விர்...விர்...
வந்தது இடைவேளை.
அப்புறம்?
பெங்களூர் வந்தது
தாடி மீசை முளைத்தது.
'திடீர்' சரிதாவும் வந்தார்.
ஒரு சின்ன 'பாங்லா!' — ரஜினி
அவருடன் குடும்பம் நடத்துகிற மாதிரி!
மெச்சர் வேலையில் ஜோதி
எதிர்பாராத சந்திப்பு
சந்தேகம் சரிதாவுக்கு
புதிர் அவிழ்கிறது
சரிதாவுக்குக் கணவன் டெல்லி;'!(கணேஷ்)
ஜோதி விதவை!
''நாளை நமக்குப் புது வாழ்க்கை''
கூறி விரைகிறார் ரஜினி.
மறுநாள்—
வீடு பூட்டிக் கிடக்கிறது.
இருக்கவே இருக்கிறது மோ. சை.
புர்...புர்...விர்...விர்...
மைசூர்வரை ரயில் துரத்தக்
காமிராக்காரருக்கு சான்ஸ்
அப்பாடா! நிற்கிறது ரயில்!
அணைக்கிறார் காதலியை!
தலைப்பு 'புதுக் கவிதை'
சொந்தம் பாலசந்தருக்கு.
மன்னிக்கவும் ஒரு திருத்தம்
மாற்றியிருக்கலாம்
'புர்புர் க(வி)தை' என்று!



ஊ

அகர வரிசைப் பேட்டி: வனிதா

ஊர்

சொந்த ஊர் திருச்சி. சமீபத்தில் சென்று வந்த ஊர் கும்பகோணம். 'அனல் காற்று' படத்துக்காகப் போயிருந்தேன். என் அப்பாவாக நடிக்கும் டெல்லி கணேஷ் இறந்து போவதானகாட்சிஅங்கு படமாக்கப்பட்டது. நிஜமாகவே எனக்கு அழுகை அழுகையாக வந்தது. இன்னொரு நியூஸ். எந்தப் படத்திலும் நான் நடித்தாலும் அதில் என்னைச் சாகடித்து விடுகிறார்கள். என் ராசி அப்படி..

ஊர்வசி

ஊர்வசி சாரதா என் வீட்டுக்கு வந்ததைப் பெருமையாகச் சொல்லிக் கொள்வேன். 'ப்ரிய பாந்தவி' என்கிற தெலுங்குப் படத்தின் ஷூட்டிங் என் வீட்டில் நடந்தது. அதில் நடிக்கத்தான் சாரதாவந்திருந்தார். அவருக்கு நான் என் கைப்பட சமையல் செய்து போட்டு ஆனந்தப்பட்டேன். ''நன்றாக நடித்து நல்ல பெயர் வாங்கு'' என ஆசீர்வதித்தார்.

ஊனம்

'தங்கப் பதக்கம்' படத்தில் கே. ஆர். விஜயா ஊனமாக நடிப்பதைப் பார்த்து மனம் உருகியிருக்கிறேன். 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' படத்தில் நொண்டியாகவும், 'பார்வையின் மறு பக்கம்' படத்தில் குருடியாகவும் நான் நடித்துள்ளேன். இப்படிப் பட்ட ஊனமான கதாபாத்திரங்களில் சற்று சிரமப்பட்டு நடிக்க வேண்டும்.

ஊடல்

நான் சினிமா உலகில் யாருடனும் ஊடல் வைத்துக் கொண்டதில்லை. எனக்கும் மேனகாவுக்கும் ஊடல் இருப்பதாக வெளியில் பேசப்படுவதெல்லாம் பொய். அமலா ஆர்ட்ஸ் தயாரிக்கும் மலையாளப் படத்தில் நாங்கள் இருவரும் சேர்ந்தே நடிக்கிறோம். என்னுடைய 'ஆன்டி'யாக நடிக்கிறார் அவர்.

ஊக்கம்

நடிப்பில் என்னை ஊக்கப்படுத்திய முதல் டைரக்டர் துரைதான். 'ஒரு பிறந்தது' படத்தில் நல்ல காரெக்டர் கொடுத்து நடிப்பில் ஊக்கப்படுத்தினார்.

ஊமை

பிறர் என்னைப் புகழும்போது நான் ஊமையாகிப் போவதுண்டு. என் நடிப்பைப் புகழ்ந்தவர்களும் உண்டு, அழகைப் புகழ்ந்தவர்களும் உண்டு. எனக்குக் கண்கள் அழகு என்று பிறர் சொல்லிக் கேட்டிருக்கிறேன்.

ஊஞ்சல்

சின்ன வயசில் ஊஞ்சல் ஆடுவதில் இருந்த உற்சாகம் நடிப்புக்காக ஊஞ்சலாடும்போது இருப்பதில்லை. சமீபத்தில் ''கண்ணே ராதா'' படத்துக்கான பாடல் காட்சிக்காக ஊஞ்சல் ஆடியபடியே நடித்தேன். எங்கே ஊஞ்சல் அறுந்து விழுந்து விடுமோ என்கிற பயம் ஒரு பக்கம். சுற்றிலும் நிற்பவர்கள் என்னையே பார்க்கிறார்களே என்ற கூச்சம் மற்றொரு பக்கம். இரண்டுக்கும் நடுவே என் மனமும் ஊஞ்சலாடியது.

ஊசி

எல்லோரையும் போல எனக்கும் டாக்டரிடம் ஊசி போட்டுக் கொள்வதில் பயம் அதிகம். 'வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுகிற மாதிரி பேசுகிறார்' என்பார்களே, அப்படிப் பேசுகிறவர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது.

ஊட்டி:

சொன்னால் நம்ப மாட்டீர்கள். யார் யாரோ ஊட்டிக்குப் போய் நடிக்கிறார்கள். எனக்கும் ஊட்டிக்கும் இதுவரை ராசி இருந்ததில்லை. நிறையத் தடவை போயிருக்கிறேன். படப்பிடிப்புக்காகப் போனதில்லை.

3வது அட்டை வனிதா
வண்ணப்படம்: ஹரீஷ்



சினிமா சினிமா



டைரக்டர் ஐ.வி. சசியின்
துணிச்சலான மலையாளப் படம்:

ஈநாடு

◘ மலையாளப் படம் 'ஈநாடு' பரபரப்பை உண்டாக்கி இருக்கிறது. ''இன்னும் ஈநாடு பார்க்கவில்லையா?'' என்று கேட்குமளவுக்குப் புரட்சியை உண்டு பண்ணி யிருக்கிறது.

டைரக்டர் ஐ. வி. சசி 'ஈநாடு' படத்தில் நாட்டு நடப்பை மிகைப்படுத்தாமல் காட்டி யிருக்கிறார்.

அரசியல்வாதிகளின் சுயநலம், எல்லா காரியங்களிலும் தலையிட்டு ஊழலை வளர்த்து விடும் சுபாவம் இவற்றை மையக் கருத்தாக வைத்துக் கொண்டு சுற்றிலும் சின்னச் சின்ன சம்பவங்களைப் பின்னியிருக்கிறார். படிக்காமல் ஆட்சிக்கு வரும் எம். எல். ஏ. நாளாவட்டத்தில் தம் செல்வாக்கினால் மந்திரியாவது; மாணவர்கள் பொதுவாக நடந்து கொள்ளும் விதம்; தப்புப் பண்ணினாலும் அவர்களைக் காப்பாற்றும் அரசியல்வாதி; லஞ்சம் வாங்குகிற காவல் துறையினர்; லஞ்சம் வாங்காமல் இருக்கக் கூடிய நேர்மையாளர்கள் படுகிற துன்பம்; கள்ளச்சாராய வியாபாரம் பெருகப் பெரிய மனிதர் துணை யிருப்பது; கள்ளச் சாராயம் குடித்து இறந்துபோகும் மக்கள்; தொழிற்சாலையிலிருந்து வரும் கழிவு நீர், குடிக்கும் நீருடன் கலப்பதைத் தடுக்கப் பொதுமக்கள் எம். எல்.ஏ.விடம் முறையிட, அவர் லஞ்சம் வாங்கிக் கொண்டு கண்டு கொள்ளாமல் இருந்து விடுவது என்று இப்படிப் படம் முழுக்கத் துணிச்சலாக அன்றாட வாழ்வில் அரசியல் தலையீட்டைக் காட்டி யிருக்கிறார்கள்.


செம்மீன், அங்காடி படங்களுக்குப் பிறகு வசூலில் மிகப் பெரும் சாதனை புரிந்து கேரளாவில் தான் பரப்பிக் கொண்டிருக்கிறது 'ஈநாடு'. துபாய்க்குப் போகிற கேஸையும் மார்க் லிஸ்ட் ஊழலையும் கூட விட்டு வைக்கவில்லை படத்தில்.

படத்தின் முடிவில், மந்திரியாகவிருக்கும் எம். எல். ஏ.வைப் பொது மக்கள் ஆர்ப்பாட்டம் பண்ணி இறக்கி விடுகிறார்கள். The begining என்று படத்தை முடிக்கிறார்கள்.

இத்தனை பிரச்னைகளைத் துணிச்சலாக வைத்து எடுத்த படத்துக்கு சென்ஸாரிலிருந்து எந்த விதமான தொந்தரவும் ஏற்படவில்லையாம்! படம் வெளியான ஒரு மாதத்திற்கெல்லாம் Tax free சர்டிபிகேட் வழங்கப் பட்டு விட்டது!

சினிமாஸ்கோப், டெக்னோவிஷன் படமான ஈநாடு மலையாளத்தின் முன்னணித் தயாரிப்பாளர்களுள் ஒருவரான என். ஜி. ஜான் தயாரித்தது.

-கோபு ராமஸ்வாமி


விளங்குவீர் நியூட்ரமுல் 'வஸ்தாத்'தாக.
தாராசிங் பலப் பயிற்சித் திட்டம்
உயரம் ஏற்றும் உடற்பயிற்சிகள்
வலதுதோள் சுவரோடு ஒட்டும்படி நில். மூச்சை உள்ளிழுத்தபடி கால்கட்டை விரல்களால் எழும்பு. இடது கரத்தைத் தலைக்கு மேல்வீசி, எட்டின உயரம் சுவரைத் தொடு. மூச்சை வெளிவிட்டவாறு கீழே மீளு. இடது கரத்தால் 10 தடவை, வலது கரத்தால் 10.
பாதங்களை அகட்டி (இடைவெளி 10 அங்.) நில். மூச்சை உள்ளிழுத்தபடி கால்கட்டை விரல்களால் எழும்பியவாறு, இரு கரங்களையும் வீசித் தலைக்குமேல் எட்டின உயரம் தூக்கு, விரல்கள் சந்திக்கும்வரை. மூச்சை வெளிவிட்டவாறு கீழே மீளு. 10 தடவைகள்.
கால்நீட்டி உட்காரு; இயன்ற தூரம் கால்களை அகட்டு. மூச்சை உள்ளிழுத்தபடி முன்புறம் குனிந்து, இருகைகளால் இடது பாதத்தையும் தலையால் முழங்காலையும் தொடவும். மூச்சை வெளிவிட்டவாறு கீழே மீளு. இடது கால்புறம் 10 தடவை, வலது கால்புறம் 10.
பருகுவாய் தினமும் பலம்பெருக்க நியூட்ரமுல். அமுல் பால்வளம், ஆரோக்கியமான மால்ட், ஆரோக்கிய வைட்டமின்கள், ஆர்வமிகு புரதம், ஆதார உலோகதாதுக்கள், சப்புக் கொட்டிட சாக்லேட் சுவை. அவ்வளவுக்கும் விலைமிக மலிவு.. போர்ன்விடா, பூஸ்ட், மால்டோவா எதனையும் விட.
நியூட்ரமுல் துணையால்... கட்டுடல், தெம்பு, தொட்டதெல்லாம் பலிதம், உச்ச உணர்வு...உன் பெயரைச் சொல்லுதடா 'நியூட்ரமுல் வஸ்தாத்' !
daCunha/GCM/69/82/TM
Nutramul
அமுல் படைப்பு
நியூட்ரமுல்

நீங்கள் கேட்டவை

⌘ ஸ்டெல்லா புரூஸ், சென்னை-17

? ஜே. கிருஷ்ணமூர்த்தி பற்றிய கேள்விக்கான பதிலில் அவரது தத்துவத்தின் சாராம்சம் பிழையாக எழுதப்பட்டுள்ளது. நம்மிடமிருந்து உணர்வுகளை வேறுபடுத்திக் காண்பது விமோசனமே இல்லாத விசனம். "நானே பயம் அல்லது நானே ஆசை எனக் கண்டு, நான் என்பது என்ன, பயம் என்பது என்ன எனப் புரிந்து, அனைத்தும் ஒன்றே என்ற தரிசனத்தில்தான் ஒன்றுபட்டுப் போகிற ஆனந்தம் நிறைந்திருக்கும். புரிகிறதா?

! புரிவது போல் தோன்றுகிறது.

⌘ எல். ஆர். சுந்தரராஜன், பட்டினப்பாக்கம்

? முதலிரவுஅனுபவத்துக்குத் தரப்படும் முக்கியத்துவம் வேறு எதற்கும் தரப்படாதது கேவலமாகப் படவில்லையா?

! இல்லை. மண வாழ்க்கையில் ஈடுபடும் ஒவ்வொரு தம்பதியும் முதலிரவுக்கு முக்கியத்துவம் தரத்தான் வேண்டும். அன்றைய அனுபவம் அவர்கள் தாம்பத்தியத்தின் எதிர்காலத்தை மகிழ்ச்சி நிரம்பியதாகவும் செய்யலாம்; படு துயரில் ஆழ்த்துவதாகவும் முடியலாம் என்பதால்.

⌘ க. சந்தானம், குச்சிப்பாளையம்

? காஞ்சி காமகோடி பீடம் - இதில் காமகோடி என்பதன் பொருள் யாது?

! தெய்வத்தின் குரல் மூன்றும் பகுதியைத் தொகுத்தளித்துப் பல்லாயிரக் கணக்காரேனின் நன்றிக்குப் பாத்திரமாகியுள்ள ரா. கணபதியைத் தங்களுக்கு விடையளிக்குமாறு வேண்டினேன்:

திராசு

"திவ்ய சக்தி தானேயாகவோ அல்லது மஹா புருஷர்களின் தபோ பலத்தாலோ விசேஷமாகப் பொலிந்து அருள் வண்மை காட்டும் இடங்கள் பீடங்கள் எனப்படும். 'காமகோடி' என்பதில் 'காம' என்பது பரசிவத்தைக் குறிப்பதாகும். அப்பரசிவத்திலேயே தனது நிறைவாகிய 'கோடி'யை எய்தி ஒன்றியிருக்கும் அம்பிகைதான் காமகோடி. காமகோடிபீடம் என்பது சிவசக்தி ஐக்கியமான பரப்பிரம்மத்தின் ஸ்தானம். ஆசைகளின் முடிவாகிய காமகோடி பிரம்மஞானத்தைக் குறிப்பது என்றும் பொருள் கொள்வதுண்டு. அநாதியாய்க் காஞ்சியில் இருந்து வந்த காமகோடி பீடத்துக்கு ஆதி சங்கரர் புது மலர்ச்சி தந்தார்."

⌘ வைத்தியநாதன், விருத்தாசலம்

? கல்கியின் ஜோக் ரசனை உமித்தனமாகப் போய் விட்டதாமே?

! ஜோக் அடித்ததே நக்கீரன்தான். அதை எடுத்துக் காட்டியதுதான் தராசு செய்த காரியம். எனவே ஜோக் நக்கீரனுக்கு ரசிக்கவில்லையெனில் அவர் தம்மைததாமே நொந்துகொள்ளலாம்.

ஜோக்கை ஒதுக்கிவிட்டு விஷயத்துக்கு வருவோம். நா.பாவின் 'துளசி மாடம்' கல்கிக்குப் பெருமை தேடித் தந்த நாவல் என்று தராசு கூறியதாலேயே, ராஜாஜி அமரர் கல்கி ஆகியோரின் பெருமைகளையும் கல்கியில் இடம்பெற்ற, ஆனால் பரிசு பெறாத எத்தனையோ பல இலக்கியங்களின் பெருமைகளையும் இன்று இந்தப் பத்திரிகையை நடத்துவோர் உணராமல் போய் விட்டதாக அர்த்தமாகுமா? இப்படி நக்கீரன் கூறுவது நகைப்புக்கு இடமளிக்கத்தானே செய்கிறது!

⌘ அ. முத்தும்பெருமாள், சென்னை-33

? கல்கி வட்டாரம் சாகித்திய அகாடமி பரிவாரங்களுக்கு கும்மி அடிப்பதாக நக்கீரன் சாடியிருப்பது பற்றி?

! நக்கீரன் அடித்தஜோக் நீங்கள் கேட்டவை பகுதியில் இடம்பெற்ற அதே 6.6.82 கல்கி இதழின் தலையங்கத்தை அவர் படித்திருந்தால் சாகித்திய அகாதமிக்கோ அதைச் சேர்ந்தவர்களுக்கோ கல்கி வட்டாரம் ஆலவட்டம் சுற்றவோ கும்மியடிக்கவோ இல்லை என்பதை அவர் தெளிவாய் உணர்ந்திருக்கலாம்.

⌘ தாரமங்கலம் மணி, சென்னை-33

? நக்கீரனும் நீங்களும் வாராவாரம் போட்டுக் கொள்ளும் சண்டையில் யாராவது ஒருவர் பெருந்தன்மையாக விட்டுக் கொடுக்கக் கூடாதா?

! வீண் வம்புக்கு இழுப்பவர் நக்கீரன்தான். இருந்தாலும் இதோ இத்த இதழுடன் நான் நிறுத்திக் கொண்டு விடுகிறேன்.

⌘ கே. என். செல்வரத்தினம், வடகாடு ★
? இந்தியா வெளிநாடுகளில் பெற்றுள்ள கடனை நமது காலத்துக்குள் திருப்பிச் செலுத்தி விடுமா?
! ஒரு நாளும் முடியாது. இந்தியன் ஒவ்வொருவனும் அயல் நாட்டவருக்கு ரூ. 250க்கும் அதிகமாகக் கடன் பட்டிருக்கிறான். 1981 டிசம்பர் 31 நிலவரப்படி. அன்று நமது மொத்த அந்நியக் கடன் 14,961 கோடி. இத்துடன் சர்வதேச நிதி நிறுவனத்தின் சமீபத்திய 5000 கோடி. கடனைச் சேர்த்துக் கொள்ளவும்.

⌘ பி. ஆர். கண்ணன், சென்னை-73
? ஹரிகின்ஸ் பாகவதரின் கர்நாடக இசைக் கச்சேரிக்கும் நம்மவர் பாடும் பாப் மியூஸிக்குக்கும் உள்ள வேறுபாடு?
! ஹரிகின்ஸ் பாகவதர் டாப்! நம்மவரின் பாப் ஃபிளாப்!

⌘ மு. பாஸ்கரன், புதுவை
? அரசியல் உலகில் ரொம்பக் கேவலமான விஷயம் எது?
! சேலத்தில் ...ரகவாச்சாரியார் சிலையா, காம...ா சிலையா எதைக் குறிப்பிட்ட அந்த இடத்தில் நிறுவுவது என்பது குறித்து நடக்கின்ற கோஷ்டி சண்டையை விடக் கேவலம் ஒன்று இருக்க முடியுமா? இரு தலைவர்களையும் நன்கு அறிந்தவர்களாயின் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கத்தான் போட்டியிடுவார்கள்.

⌘ பூவை கே. சந்திரன், பாண்டமங்கலம்
? திறமையான முறையில் காரியத்தை வெற்றி பெறச் செய்தவர்களை நாம் சரியான முறையில் கௌரவிப்பது இல்லையே ஏன்?
! சரியாப்போச்சு! என்ன இப்படிச்சொல்லி விட்டீர்கள்! தினம் ஒரு பாராட்டு விழா, பொன் விழா, மணி விழா எல்லாம் நடப்பது நம் நாட்டில்தான். சமீபத்திய பாராட்டு ஸ்வீட் (S) பாபுலர் (P) பால சுப்ரமணியத்துக்கு. தங்கமான இசைத் தட்டை பரிசளித்து அவரைக் கௌரவித்து ஏ.வி.எம். நிறுவனத்தின் ஓர் அங்கமான சரஸ்வதி ஸ்டோர்ஸ். ஆமோதிக்காத திரை இசை ரசிகர் உண்டோ?

⌘ தேவ நெம்பரம், பட்டுக்கோட்டை.
? அண்மையில் வெகு சீரியஸானது எனத் தங்களால் கருதப்பட்ட விஷயம் எது?
! தமிழக இளைஞர் காங்கிரஸ் தலைவர் மீது தமிழக காங்கிரஸ் தலைவர்களாலேயே சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள். ஆனால் தங்கபாலு டெல்லி சென்று ராஜிநாமாக் கடிதத்தைக் கொடுத்து, குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் ராஜிநாமாவை ஏற்கும்படி மேலிடத்தில் சொல்லி வந்து விட்டார். விசாரணை நடந்து அவர் மீது ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு எந்தவித ஆதாரமும் இல்லை என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. முதல் ரவுண்டில் தோல்வியுற்ற எம். பி. எஸ். கோஷ்டி இப்போது, 'இலங்கைத் தீவிரவாதிகள் பிரச்னை சம்பந்தமாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தங்கபாலு கலந்து கொண்டது கட்சி நலத்துக்கு விரோதமானது' என்று கூறி இரண்டாவது ரவுண்டுக்குத் தயாராகி வருகிறது! வெட்கக்கேடு!

★ ரூ 10 பரிசு பெறுபவர் :
கே. என். செல்வரத்தினம்
6/26, பாரதியார் சாலை
வடகாடு-622304 (புதுகை மாவட்டம்)

⌘ ரா. கணபதி



⌘ எஸ். பி. பாலசுப்பிரமணியம்




⌘ வி. வீரராகவாச்சாரியார்



⌘ ஹரிகின்ஸ்





தாளிப்பு: சுகி

டயட்



ஒரு பெண்ணின் குலம் நாடி குணம் நாடி அவளைத் தன் மனைவியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று எனக்குச் சிலர் அறிவுரை கூறியதன் காரணமாக அதன்படியே கமலா வைத் தேர்ந்தெடுத்து மணந்தேன். நான் இரண்டு தரம் (குலம் நாடி, குணம் நாடி) நாடியதாலோ என்னவோ கமலா இரட்டை நாடியாக ஆகிவிட்டாள்! பருமனைக்குறைக்கப் பல வழிகளைக் கையாள ஆரம்பித்தாள்.

● ''தினமும் அரை மணி நேரம் யோகா சனம் பண்ணினால் உடம்பு ட்ரிம்மாகிவிடும்'' என்று ஒரு புத்தகத்தில் படித்த பிறகு யோகாசனத்தில் இறங்கினாள். சரியாக ஐந்து நிமிஷம் பண்ணுவதற்குள் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கிவிடும். ''என்ன, அரை மணி ஆகிவிட்டதா?'' என்று கேட்பாள். ''இல் லையே நாலரை நிமிஷம்தான் ஆச்சு'' என் பேன். ''உங்க கடிகாரத்தைத் தூக்கி உடைப்பிலே போடுங்கோ. ரொம்ப ஸ்லோ. ....உஸ்.....உஸ்'' என்று கூறிவிட்டு யோகா சனத்தைத் தொடர்வாள்.

''கொஞ்சம் கஷ்டமாக இருந்தாலும், இப்போ தெம்பாக இருக்கு. ஒரு சுறுசுறுப்பு கூட வருது... நல்ல பசியும் வருது'' என்று சொல்லி லேட்டாக நாலு இட்லி சாப் பிட்டாள்.

அடுத்த நாள் 20 நிமிஷம் பண்ணுவதற் குள் 'தம்' தீர்ந்துவிட்டது. நாலு இட்லி சாப்பிட்டாள்.

இப்படி தினமும் யோகாசனம் செய்யும் நேரம்தான் குறைந்தது; இட்லிகளின் எண் ணிக்கை அல்ல. கடைசியில் ''சீ... இதெல் லாம் நம்மால் முடியாது''என்று ஆசனத்துக்கு மட்டும் முடிவுகட்டிவிட்டாள்.

● ''செவ்வியம், ஜீரகம், மிளகு, சுக்கு, திப் பிலி, காயம், துவர்ச்சிலையுப்பு, சித்திரமூலம் இவற்றுடன் தயிரின் நீரில் பொரிமாவைக் கலக்கிக் குடிக்க தேகம் மெலியும் — பசியும் உண்டாகும்'' என்ற ஸ்ரீஹரி வைத்தியத்தை யாரோ சொன்னார்கள். இவைகளைச் சேகரித் துக் கொடுத்தேன். கமலாவும் பயபக்தியுடன் இந்தமருந்தைச் சாப்பிட ஆரம் பித்தாள். 50 சத வீதம் பலன் தெரிந்தது. தேகம் மெலிய வில்லை; ஆனால் பசி அதிகரித் தது. அதாவது இரண்டு,மூன்று டம்ளர் தயிரைக் குடித்த பிற கும்! ஆகவே அதன் பிறகு கமலா 'லேட்'டாகச் சாப்பிடு வாள்!

● ''காய்கறிகளை வெறுமனே வேக்வைத்து லேசாக உப்புத் தூவிச் சாப்பிட்டால் போதும். உடல் பருக்காது'' என்று ஒரு சிநேகிதி (அவளுடைய கணவர் கொத்தவால் சாவடியில் கடை வைத்திருப்பவர்!) சொல்ல, கமலா, ''இதோ பாருங்கோ இங்கிலீஷ் வெஜிடபிள் என்ன விலையாக இருந்தாலும் வாங் கிக்கொண்டு வந்துவிடுங்கோ'' என்றாள். (கமலா கான்வென் டில் படித்தவள்!) நான் தினமும் விலை உயர்ந்த காலிஃப்ளவர், பீட்ரூட், காரட், பச்சைப் பட்டாணி என்று வாங்கிக் கொடுத் தேன். உடம்பு இளைக்கவில்லை. ஆனால் இந்த உணவு முறை அவளுக்குப் பிடித்து விட்டது. ஆகவே அதைக் கைவிடவில்லை.

● 'தேன் கலந்த தண்ணீர் குடிப்பது நல்லது' என்று ஃபெமினாவில் போட்டிருந்தார்கள். அடுத்த அரை மணி நேரத்தில் தேன் புட்டி யுடன் நின்றேன். கமலா தேனில் இரண்டு சொட்டுத் தண்ணீர் விட்டுக் குடிக்க ஆரம் பித்தாள்! இதன் காரணமாகப் பசி எடுத் தது. ஆகவே நிறைய நொறுக்குத் தீனி சாப்பிட ஆரம்பித்தாள்.

● பச்சைப் பயறு, நரிப் பயறு, கொள்ளு, துவரை, நெல்லி முள்ளி ஆகியவைகளுடன் கூட்டித் தயாரித்த வியஞ்சனத்தைச் சாதத் துடன் சிறிது நெய் விட்டுச் சாப்பிட்டால் நல்லது'' என்று இயற்கை வைத்தியர் ஒரு வர் கூற, அதைக் கடைப்பிடிக்க ஆரம்பித் தாள்.

''கொள்ளுமாச்சு நரிப் பயறுமாச்சு... வாயில் வைக்க வழங்கலை... இன்னும் இரண்டு ஸ்பூன் நெய் விட்டுச் சாப்பிட்டுப் பார்க் கிறேன்'' என்று ஆரம்பித்தவள், நாளடை வில் வியஞ்சனத்தின் அளவைக் குறைத்து விட்டு அதை ஈடுகட்டும் வகையில் நெய்யின் அளவை ஏற்றிவிட்டாள்!

● பழம் மட்டும் சாப்பிடும் வைத்தியத்தை யாரோ சொல்ல வீடே பழக் கிடங்காகியது. 'காம்ப்ளான் சாப்பிடு போதும்' என்று வேறு ஒருவர் சொல்ல டப்பா டப்பாவாக வாங் கினேன்.

கமலா ஒரு கிராம்கூட எடை குறைய வில்லை. ஆனால் இந்த டயட் காரணமாக நான் நன்றாக இளைத்து விட்டேன்; என்னை விட என் பர்ஸும் பாங்க் பாலன்ஸும் வெகு நன்றாக இளைத்து விட்டன. எப்படியோ 'டயட்' வெற்றி பெற்றதே; அந்த மட்டில் சந்தோஷம்!

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: P.S. Mani Layout Artist: Nambi Editor: K. Rajendran


அகரவரிசைப் பேட்டி
-கட்டுரை உள்ளே

REGISTERED No. M. 4363
Registered as a Newspaper in Sri Lanka

ராசி வண்ணம்



Adroit 87 TAM

கன்னி

கன்னி ராசியின் பெருமையை இங்கு
களிப்புடன் பாடிடும் 'கட்டு'கவி நான்
பிறர்க்கு உதவுவர் பேச்சு மாறார்
சிறப்புடன் தனித்தே துலங்குதல் இவர் குணம்
வண்ணம் பச்சை மரகதம் திருமகள்
எண் ஐந்து புதன் கன்னிக்கு இவை நலம்.



ஏஷியன் பெயிண்ட்ஸ்